


KALKI
8-4-84
ரூ 1-20
டையிலே கம்பீரம்,
கருத்திலே துணிவு,
கலையிலே விறுவிறுப்பு!
PIONEER MILLS LIMITED
1984
Ramayana
நா.பா. தொடர் கதை
கல்கி
அடுத்த இதழில்



சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனால் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்

உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள நிரூபணமான ஆன்டிஸெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாற்றிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.



**கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்
ஏனென்றால், காயங்கள் எங்கும் எந்நேரமும் ஏற்படலாம்.**

OBM/2513 TAM


Johnson & Johnson

சர்ச்சை



பாய்கிறார் எஸ்.எஸ்.ஆர் மோதுகிறார் மேஜர்

மசாலா படத்தின் கிளைமாக்ஸ்சண்டையை விட விறுவிறுப்பான சர்ச்சை. நடிகர் சங்கத் தலைவர் எஸ். எஸ். ராஜேந்திரனின் குற்றச் சாட்டுகளுக்கு நடிகர் சங்கப் பொது அறக் கட்டளை செயலாளர் மேஜர் சுந்தர்ராஜன் பதிலளிக்கிறார். டிஷ்யூம்! அனல் பறக்கிறது!



எஸ். எஸ். ஆர்: நடிகர், நடிகைகளின் பிள்ளைகளை மேல்நாட்டில் படிக்கவைக்க உதவி செய்யவும், மற்றும் வருமான வரியிலிருந்து விலக்கு பெறவும் தான் தென்னிந்திய நடிகர் சங்க பொது அறக்கட்டளை நிறுவப்படுகிறது என்று நடிகர் சங்க உறுப்பினர்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் அறக்கட்டளையின் விதிகளைப் படித்தால், 'இந்தியாவில் கிணறு வெட்டவும் குளம் வெட்டவும், வெள்ளம் வந்தால் உதவி செய்யவும் அறக்கட்டளையின் நிதி பயன்படுத்தப்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நடிகர்களுக்குச் செய்யப்படும் துரோகம் ஆகாதா?

மேஜர்: நடிகர் சங்க தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் உள்ள எஸ். எஸ். ஆர். அவர்கள் சிறு பிள்ளைத்தனமாகப்பேசியிருப்பது வருந்தத்தக்கது. நமது நாட்டின் பொது அறக்கட்டளை விதிகளின்படி மக்களுக்குப் பொதுவான நன்மைகள் செய்யத்தான் பொது அறக்கட்டளை நிறுவ முடியும். விதிகளில் இப்படி தான் சொல்ல முடியும். நடிகர்களும் இந்த நாட்டின் பொதுமக்கள் தானே! நடிகர் சங்கம் என்ற அமைப்பு நிதி வசூல் செய்தால் அதன் பெரும் பகுதி வருமான வரிக்குப் போய் விடுவதால், இப்படி பொது அறக்கட்டளை ஒன்று நிறுவ வேண்டிய அவசியம் நேரிட்டது. நடிகர் சங்கத்தில் புதிய கட்டிடங்கள் கட்டியதால் 32 லட்சம் கடன் உள்ளது. இந்தக் கடனை அடைத்துப் பல்வேறு நல் வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்த தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையின் பேரில் சில நடவடிக்கைகள் எடுக்கப் பட இருக்கின்றன. அறக் கட்டளை நிதியிலிருந்து நடிகர்களைத் தவிர வேறு யாருக்கும் உதவியிருப்பதாக எஸ். எஸ். ஆர். சொல்ல முடியுமா?

எஸ். எஸ். ஆர்: பொது அறக்கட்டளையின் டிரஸ்டிகள் விதிகளைச் சரியாகப் பார்க்காமலேயே கையெழுத்துப் போட்டு விட்டார்கள்.

மேஜர்: இது மிகவும் அபாண்டமான குற்றச் சாட்டு. இதற்காக எஸ். எஸ். ஆர். மீது மானநஷ்ட வழக்கே போடலாம். டிரஸ்டிகளாக உள்ளவர்கள் பிரபல நடிகர்களான சிவாஜிகணேசன், பிரேம் நஸீர், ராஜ்குமார், ராமராவ் போன்றோர். மற்றும் ஆர். எம். வீரப்பன், எம்.ஏ. எம். ராமசாமி போன்றவர்களும் உறுப்பினர்கள். டிரஸ்டின் விதிமுறைகளை எல்லோரிடமும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் கொடுத்துப் படிக்க வாய்ப்புக் கொடுத்த பிறகே கையெழுத்துப் பெறப்பட்டது. படிக்காமல் கையெழுத்துப் போடப்பட்டது என்று சொல்லப்படுவது டிரஸ்டிகளையும் செயலாளரான என்னையும் அவமானப்படுத்துவதுபோலிருக்கிறது.

எஸ். எஸ். ஆர்: ஒரு கோடிக்கும் மேற்பட்ட

நடிகர் சங்கச் சொத்துக்களை தானமாகப் பெற்றிருக்கும் டிரஸ்ட், நஷ்டத்தில் இயங்கி கலைக்கப்படுமானால் அதற்கு டிரஸ்டிகள் பொறுப்பல்ல என்றும், டிரஸ்டின் கடன்களை அவர்கள் தலையில் கட்டக் கூடாது என்றும் விதிகளில் கூறப்பட்டுள்ளது. இது சரிதானா?

மேஜர்: பொது அறக் கட்டளையின் விதிகளின்படி, டிரஸ்ட் நஷ்டப்படுமானால் டிரஸ்டிகளைத் தனிப்பட்ட விதத்தில் பாதிக்கக்கூடாது என்று இருக்கிறது. பொது நலச் சேவை செய்வதற்குத் தானே டிரஸ்ட் அமைக்கப் படுகிறது. பொதுச் சேவை செய்ய வருபவர்களின் தலையில் கடனையோ அல்லது வேறு கஷ்டங்களையோ தூக்கிப் போடலாமா?

எஸ். எஸ். ஆர்: நடிகர் கமலஹாசன் ஒவ்வொரு படத்தில் தான் வாங்கும் சம்பளத்தில் ஒரு சத விகிதத்தை நடிகர் சங்கத்துக்கு அளிப்பதாகக் கூறினார். அதைக் கொடுக்கவிடாமல் கெடுத்தவர் சுந்தர்ராஜன்தான்.

மேஜர்: கமல் என்ன விவரம் தெரியாதவரா? நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி நடிகர் சங்கத்துக்கு அது கொடுக்கப்படுமானால் வருமான வரி விதிக்க வாய்ப்பு இருக்கிறது. நடிகர் சங்க நன்மைக்காகத்தானே அறக்கட்டளை இயங்கி வருகிறது. அறக் கட்டளைக்கு நன்கொடை கொடுத்தால் வருமானவரியிலிருந்து விலக்கம் உண்டு. இதைத்தான் நான் கமலிடம் சொன்னேன். மற்றபடி எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

எஸ். எஸ். ஆர்: 'பயணங்கள் முடிவதில்லை' படத்தில் நடித்ததற்காக பாக்கிப் பணத்தைத் தயாரிப்பாளரிடம் இருந்து வாங்கி, நடிகர் மோகனுக்கு சங்கம் வழங்கியது. அதில் இருந்து நடிகர் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்குக் கல்வி கற்க நிதி கொடுப்பதாக இருந்த மோகனை சுந்தர்ராஜன் கொடுக்க வேண்டாம் என்று தடுத்து விட்டார்!

மேஜர்: எந்த ஒரு நடிகருக்கும் சேர வேண்டிய பாக்கிப்பணத்தைப்பெற்றுத் தந்தால், அதில் பத்து சத விதம் சங்கத்துக்குத் தந்து விட வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. அதன்படி மோகனும் பாக்கிப் பணமாக வந்த 27000ரூபாயில் 2700—ஐ சங்கத்திற்குக் கொடுத்து விட்டார். மேற்கொண்டு சங்கத்தினர் நான்காயிரம் ரூபாய் கேட்டதாகவும், மோகன், அந்தப் பணத்தைச் கொடுக்க மறுத்து விட்டதாகவும் பின்னர் அறிந்தேன். இந்த விஷயங்களில் எனக்கும் மோகனுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

எஸ். எஸ். ஆர்: மிகஅதிகமான தொகைக்குக் குத்தகைக்கு விட்டிருக்கக் கூடிய நடிகர் சங்க இரைஅரங்கை தமக்கு வேண்டியவர்களுக்கு குறைந்த தொகைக்கு குத்தகைக்கு விட்டது மட்டுமல்லாமல், டெலிபோன், மின்சார கட்டணங்களை அறக் கட்டளையே ஏற்றுக்கொள்ளும் என்ற சலுகைகளை வேறு அளித்திருக்கிறார். இதனால் பெரும் வருமானத்தை டிரஸ்ட் இழந்திருக்கிறது!

மேஜர்: நடிகர் சங்கதிரையரங்கைக் குத்தகைக்கு விட முறைப்படி டெண்டர்கள் கோரப்பட்டுப் பிறகு தான் விடப்படுகின்றன. என் இஷ்டப்படி ஒன்றும் செய்ய முடியாது. மேலும் குத்தகைக்கு எடுப்பவர்கள் அறக் கட்டளையிடம் குத்தகை பணத்தைத்தவிர ஒருலட்சம் ரூபாய் டெபாசிட் செய்ய வேண்டும். இதன் வட்டி அறக்கட்டளைக்குத் தான். மேலும் திரை அரங்கில் காசைப் போட்டு உபயோகிக்கும் தொலைபேசிதான் உள்ளது.

எஸ். எஸ். ஆர்.: நடிகர் சங்க திரை அரங்கை குத்தகை எடுத்திருப்பவர்கள் மேஜரின் தம்பிக்கு மாதம் 1000 ரூபாய் சம்பளமாகத் தருகிறார்கள். ஆனால் அவர் ஒரு வேலையும் செய்வதில்லை.

மேஜர்: இந்தக் குற்றச் சாட்டை அடியோடு மறுக்கிறேன். சங்கத்திற்காகக் கைக்காசைச் செலவழித்து பெட்ரோல்போட்டு சுற்றுவேனே தவிர சங்கத்தின் பணத்தைத் தொட்டதில்லை. நடிகர் சங்க திரை அரங்கை குத்தகை எடுத்துள்ளவர், அவரது சில வேலைகளைக் கவனித்துக் கொள்வதற்காக நடிகர் சங்க அலுவலகத்தின் மானேஜருக்கு 100 ரூபாய் சம்பளமாகத்தருகிறார்கள். மற்றபடி இந்தத் திரை அரங்கு விஷயத்திலோ அல்லது நடிகர் சங்க விஷயங்களிலோ என் தம்பிக்குச் சிறிதும் சம்பந்தம் இல்லை.


எஸ். எஸ். ஆர்: நடிகர் சங்க உறுப்பினர்களுக்குச் செய்த துரோகத்திற்காக சுந்தர்ராஜன் நடிகர் சங்கத்தால் அவர் வகித்திருந்த சகல பொறுப்புக்களிலிருந்தும் நீக்கப்படுகிறார்.

மேஜர்: நடிகர் சங்கத்தில் நான் எந்தப் பொறுப்பிலும் இல்லை. நிலைமை இப்படியிருக்க, எந்தப்பொறுப்பிலிருந்து என்னை நீக்கினார் என்று எனக்கு புரியவில்லை. இந்த அறிவிப்பின் மூலம், பொது அறக்கட்டளையின் செயலாளர் பதவியிலிருந்து என்னை நீக்கி விட்டதாக அவர் நினைத்துக் கொண்டாரென்றால், அவரது அறியாமையை நினைத்து வருத்தப் படுகிறேன். பொதுஅறக் கட்டளையின் செயலாளர் பதவியிலிருந்து என்னை நீக்குவதோ அல்லது என் மீது நடவடிக்கை எடுப்பதோ டிரஸ்டிகளின் கைகளில் தான் இருக்கிறது.

—ப்ரியன், மௌலி




ஆந்திர சட்ட மேலவை
சுப்ரீம் கோர்ட்




புருஷனை நம்பி அரசனைக் கை விட்டுப் போனாலும்
மீண்டும் அரசனிடமே வருவாய் என்று
எனக்குத் தெரியும் கண்ணே!



கல்கி

1984 ஏப்ரல் 8
ருத்ரோத்காரி பங்குனி 26
மலர் : 42 இதழ் : 36



ஜெத்மலானியின் வெற்றி!

''அரசியல் ரீதியாக மாறுபட்ட கொள்கைகளை உடைய வேறு கட்சியைச் சேர்ந்த நீங்கள் எம். ஜி. ஆர். சார்பில் ராமபிரசாதராவ் கமிஷன்முன் வாதாட வந்தது எதனால்?'' என்று கேட்டபோது ஜெத்மலானி கூறினார்: ''ஒருவன் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்படும் வரையில் அவன் குற்றமற்றவனே. அவனுக்காக முழு ஆற்றலுடன் வாதாடுவது வழக்கறிஞன் கடமை.''

மேலும் ஒரு விஷயத்தைச் சொன்னார் ஜெத்மலானி: '' 'எனது உறவினர்கள் ஏதாவது காரியம் செய்து தருவதாகக் கூறி யாரிடமேனும் பணம் பெற்றால் **நான் அதற்குப் பொறுப்பாக முடியாது;** எனவே எனது உறவினர்களுடன் யாரும் எதற்காகவும் தொடர்பு கொள்ள வேண்டாம்' என்று பொருள்பட எம். ஜி. ஆர். முன்னெச்சரிக்கையாக ஓர் அறிக்கை விட்டிருந்தார். அந்த அறிக்கை இந்த விசாரணை நடந்தபோது பேருதவியாக இருந்தது.'' இத்தகைய ஓர் அறிக்கைக்குப் பதிலாக எம். ஜி. ஆர்., ''எனது உறவினர்களிடம் யாரும் எதற்காகவும் தொடர்பு கொள்ள வேண்டாம்; அப்படித் 'தொடர்பு கொண்டு பணம் கைமாறினால் அதற்கு நானே தார்மீகப் **பொறுப்பு ஏற்க வேண்டி வரும்''** என்று அறிக்கை விட்டிருந்தால் அதனைப் பாராட்டலாம்.


சட்டம் என்பது வேறு தர்மம் என்பது வேறு. சட்டப்படி ஒரு முதல்வரோ, பிரதமரோ குற்றமற்றவராய் இருக்கலாம். ஆனால் அவரது நெருங்கிய உறவினர் ஒருவரது செயல் சந்தேகத்துக்கு இடமளிப்பதாய் இருக்குமானால் ஆட்சி பீடத்தில் இருப்பவர் அதற்குத் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டியவராய் ஆகிறார். தம்பி பில்லி கார்ட்டர் குறுக்கு வழியில் ஏராளமான பணம் சம்பாதித்தார் என்பதால் சட்டம் அண்ணன் ஜிம்மி கார்ட்டரைத் தொட முடியவில்லை. ஆனால் அமெரிக்க மக்கள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரைத் தேர்தலில் தோற்கடித்துத் தர்மத்தை நிலைநாட்டினார்கள். இப்போது மார்கரெட் தாட்சர் மீதும் அவருடைய மகனின் நடவடிக்கைகள் காரணமாகப் புகார் கிளம்பி, சட்டத்துக்கும் தர்மத்துக்கும் இடையில் ஒரு போராட்டம் ஆரம்பமாகியிருக்கிறது, பிரிட்டனில்.

நீதிபதிகள் சட்டத்தின்படியே தீர்ப்புகள் வழங்கினாலும் பல சந்தர்ப்பங்களில் தர்மத்தையும் எடுத்துக் காட்டுவார்கள். சுப்ரீம்கோர்ட் நீதிபதி சந்திரசூட் ஒரு தீர்ப்பில் பின்வருமாறு சொல்கிறார்: ''முதலமைச்சரின் ஒப்புதல் இல்லாமல் ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க முடியும் என்று யாரும் கருதிட இயலாது. தன் நடத்தை மீதே ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு அரசியல் நிலைமை மோசமாகுமானால், விசாரணைக் கமிஷன் அமைக்க ஒப்புக் கொள்வதை விட அந்த முதலமைச்சர் பதவி துறக்கலாம்.''

'அப்படியானால் பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி விசாரணைக்கு எதிர்க்கட்சியினர் வழிவகுத்தால் என்ன செய்வது? எடுத்ததற்கெல்லாம் ராஜினாமா என்றால் ஆட்சி எப்படி நடக்கும்?' என்று கேட்கப்படலாம். இதற்கு விடை, 'அத்தகைய கண்மூடித்தனமான குற்றச்சாட்டு கூட எழ இடமில்லாத அளவுக்கு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர் புடமிட்ட பொன்னாக ஒளிர வேண்டும்' என்பதுதான். அவ்விதம் நெருப்பாக விளங்கிய ராஜாஜி ஒரு சமயம் சொன்னார்: ''நான் அளவுக்கு மீறிய கண்டிப்புடன் இருந்த காரணத்தால் எனது புதல்வர்கள் நியாயமாக அவர்களுடைய சுய அறிவாலும், திறமையாலும் பெற்றிருக்கக் கூடிய முன்னேற்ற வாய்ப்புக்களைக் கூடப் பெறாமல் போய்விட்டார்கள்!''

இந்தத் தார்மீக நெறியின் அடிப்படையில் பார்க்கும்போது ராமப்பிரசாதராவ் கமிஷன் அறிக்கை எம். ஜி. ஆரின் வெற்றியல்ல; ஜெத்மலானியின் வெற்றியே!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்


அபிமானவல்லி
கி.ராஜேந்திரன்
லதா

அத்தியாயம் 23

வெற்றித் திருமகள்

அபிமானவல்லிக்கு உரிய மரியாதை தந்து அழைத்து வந்தனர் காவலர். அவளுக்குப் பாதுகாப்புக் கருதி காவலர் உடன் வருவதுபோல் தோன்றியதேயன்றிக் கைதானதாக யாருமே சந்தேகிக்க இடம் அளிக்கவில்லை. இந்தச் சலுகை தாணுரவிக்கு விந்தையாக இருந்தது. விசாரணை மண்டபத்தில் அவனும் இளங்கோப்பிச்சியும் தவிர கடம்பமாதேவி, குவளை, கன்னரதேவன் ஆகியோரே இருந்தனர். காவலர் வெளியே நிறுத்தப்பட்டனர்.

''தேவி! கைதியிடம் இவ்வளவு கருணை காட்டி நான் பார்த்ததுமில்லை; கேள்விப் பட்டதுமில்லை'' என்றான் தாணுரவி, இளங்கோப்பிச்சியை நோக்கி.

சற்று உயரமான மேடையில் அவனும் கன்னரதேவனும் சரியாசனங்களில் அமர்ந்திருக்க மற்ற பெண்மணிகள் சற்றுத் தாழ்வாக உட்கார்ந்திருந்தனர். இன்னொரு இருக்கை இருந்திருந்தால் வல்லி அனுமதி கிட்டா விட்டாலும் அமர்ந்திருப்பாள். தாணுரவிக்கு இதனால் ஏற்படக் கூடிய கோபத்தைத் தவிர்க்கவென்றே அந்தே இருக்கைகளை எண்ணிப் போடச் செய்திருந்தாள் இளங்கோப்பிச்சி.

''வேந்தே! அபிமானவல்லி குற்றவாளி என்பது ஐயம் திரிபற நிரூபணமாகும் வரையில் அவள் ஆதித்தனின் ராஜ நர்த்தகி; சோணாட்டின் கலை அரசி. அவளுக்கு உரிய கௌரவத்தை அளிக்க வேண்டியது என் கடமை. எனவேதான் காவலரையும் எச்சரித்து அனுப்பினேன்'' என்றாள் இளங்கோப்பிச்சி. அபிமானவல்லிக்கு ஒரு தீங்கும் நேராமல் பாதுகாக்க வேண்டும் என்று தன் கணவன் கேட்டுக்கொண்டு வாக்குறுதியும் பெற்றுக் கொண்டதை ஒரு கணமும் மறக்கவில்லை மகாராணி. அபிமானவல்லியைத் தனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, அது வேறு பிரச்னை. கணவனின் கோரிக்கையைத் தெய்வ கட்டளையாக மதித்தாள் அவள்:

''நர்த்தகி மட்டுமல்ல, வஞ்சகி என்பதையும் நடன ஓவியக் கலைகளில் மட்டுமல்ல, ஒற்றாடல் கலையிலும் வல்லவள் என்பதையும் இந்த ஓலை நிரூபிக்கும்'' என்றான் தாணுரவி.

''ஓலையா? என்ன ஓலை?'' என்றாள் அபிமானவல்லி புதிரான பார்வையை முகத்தில் தேக்கி.

''பெண்ணே! முக பாவங்களை அபிநயிக்கும்போது அடிக்கடி மாற்றிக் கொள்; நானும் ரசிக்கிறேன். விசாரணை மண்டபத்தில் நடிப்புக்கலை பயில அவசியமில்லை.''

''நீங்கள் என்ன தான் சொல்கிறீர்கள்? ஒன்றும் புரியவில்லையே?''

''வல்லி! தூங்குவது போல் நடிப்பவரை எழுப்பவே முடியாது. புறா ஒன்று வந்து உன் தோளில் அமர்ந்ததுமே கடம்பமாதேவிக்குப் புரிந்து விட்டது. அதை அவசரமாக நீ கூண்டுக்குள் அடைத்து விட்டுத் திரும்பிய போது சந்தேகம் உறுதிப்பட்டது. உன்னிடம் நாங்கள் விடைபெற்றுத் தெருவுக்கு வந்ததும் கடம்பமாதேவி பல்லக்குத் தூக்கிகளுக்கும் உடன் வந்த வீரர்களுக்கும் தெரிய வேண்டாம் என்கிற எண்ணத்தில் சூசகமாக என்னை எச்சரித்தாள். நான் விரைந்து முன்னால் வந்து நீ தூதனுப்பும் புறாவுக்காகக் காத்திருந்தேன். ராஜாளியை ஏவி அதை அடித்துக் கொத்தி வரச் செய்தேன். இந்த ஓலை அதன் காலில் கட்டப்பட்டிருந்த சிறு குழலில் அகப்பட்டது.''

''பிரபோ! ஓலையில் என்ன எழுதியிருக்கிறது?''

''தெரியாதது போல் கேட்கிறாயே! உன் நாடகத்தை எவ்வளவு நேரம் தான் தொடரப் போகிறாய். அதையும் பார்த்து விடுவோம்!''

''நடிப்பாவது, நாடகமாவது! அரசே! சோழ மன்னரின் நலனில் உங்களைப்போலவே எனக்கும் மிகுந்த அக்கறை உண்டு. அதனால் கேட்கிறேன்.''

சிரித்தான் தாணுரவி. ''சரி, உன் வழியிலேயே சென்று உன்னை வளைக்கிறேன்... இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது தெரியுமா? கன்னரதேவா! நீயும் கேள்!... ஆதித்தன் வடதிசையில் 'படையெடுத்துப் போயிருக்கிறான்;சோணாடு காவலற்ற திறந்த வீடாகியிருக்கிறது; தாணுரவிநண்பனாக வந்திருக்கிறானேயன்றி படை பலத்துடன் அல்ல; பாண்டியன் விரைந்து வந்து சோழ பாண்டியனாகத் தஞ்சையில் முடிசூட்டிக் கொள்ளலாம்!''

''ஆகா!'' என்றான் கன்னரதேவன்.

''இப்படி ஒரு படுபாதகமான ஓலையை யார் எழுதியது என்று உடனே கண்டுபிடித்தாக வேண்டும்'' என்றாள் அபிமானவல்லி.

''நீதான்'' என்றாள் கடம்பமாதேவி.

கட்டெரித்து 'விடுவது போல் அவளைப் பார்த்தாள் அபிமானவல்லி.

''எப்படிச் சொல்கிறாய். என்ன ஆதாரத்தின் பேரில்? நான் புறா வளர்க்கிறேன் என்பதால் இந்தச் செய்தியை நான்தான் அனுப்பினேன் என்று முடிவு கட்டுவதா? தஞ்சைப் பெருநகரில் புறாக்கறி சுவைத்து உண்பவர் நூற்றுக் கணக்கில் இருப்பார்கள். அரண்மனை மேன்மாடத்திலிருந்து சேரமான் பார்த்த போது என் மாளிகை இருந்த திசையிலிருந்து இந்த ஓலையைச் சுமந்துகொண்டு ஒரு புறா பறந்து வந்திருக்கலாம். அதை நான்தான் அனுப்பியிருக்க வேண்டுமா? அந்தத் திசையில் காவலரை அனுப்பி வீடு வீடாகத் தேடச் செய்யுங்கள். ஒற்றர்கள் இந்தச் செய்தி வழி மறிக்கப்பட்டதை உணர்ந்தால் தப்பி ஓடி விடுவார்கள். அதற்கு முன் செயல்படுங்கள். தாமதிக்க நேரமில்லை.''

திடுக்கிட்டான் சேரமான். ''பெண்ணே! நீ திறமைசாலி என்பதை உணர்ந்துதான் இருந்தேன். ஆனால் இத்தனை சாமர்த்தியமாகப் பேசுவாய் என்று தெரியாமல் போயிற்று!''

''ஐயா! அபிமானவல்லி கூறுவதில் அர்த்தமிருக்கத்தானே செய்கிறது?'' என்றான் கன்னரதேவன்.

நன்றி ததும்பிய கண்களால் இளவலைப் பார்த்தாள் ராஜநர்த்தகி.

''கன்னரதேவா! இவள் பகத்தோல் போர்த்தியபுலி. காமவல்லியாக வந்த சூர்ப்பனகை. ஏமாந்து போகாதே'' என்றான் தாணுரவி.

இதுவரை இரண்டொரு வார்த்தைகளுக்கு அதிகமாகப் பேசாத கடம்பமாதேவி கூறலுற்றாள்: ''அபிமானவல்லி! இந்த ஓலையை அனுப்பியது நீயானாலும் சரி, அல்லது வேறு யாராயினும் சரி, சேரமானுக்குப் பெருபகாரம் செய்திருக்கிறீர்கள். சேரன்குலமகள் பாண்டியனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறாள் என்பது உனக்குத் தெரியும். ஆதித்தனோ சேரமானின் ஆருயிர் நண்பன். எனவே சோணாட்டின் மீது பாண்டியன் பாய்ந்தால் உறவை அவன் மதிக்கவில்லை என்றாகும். இதைப் பரீட்சித்துப் பார்த்து விட, பாண்டியனின் மனத்தை எடைபோட எமது அரசர்க்கு இப்போது ஒரு சந்தர்ப்பம்.''

''இந்த ஓலை கிடைக்கப் பெற்றதும் பாண்டியன் என்ன செய்வான்? படையெடுப்பானா, அல்லது இந்த ஓலையை ஏதோ பித்தலாட்டம் என்று நிராகரிப்பானா? ஆம், பாண்டியனைச் சோதித்து விடலாம்தானே!'' என்றான் தாணுரவி.

''ஆனால் ஓலை பாண்டியனுக்குக்கிடைக்கவில்லையே, இடையில் உங்களிடமல்லவா சிக்கி விட்டிருக்கிறது?''

''கவலைப்படாதே! மறுபடி உன் மாளிகை மேன் மாடத்துக்கே வந்து, அங்கு செய்தி பெற்றுச் செல்ல வரும் இன்னொரு புறாவின் காலில் இதே ஓலையைக் கட்டி அனுப்புவோம்!''

''செய்தி கிடைக்கப் பெற்றுப்பாண்டியன் படை புறப்பட்டால் நீ துரோகி என்பதும் உறுதியாகி விடும்.''

அபிமானவல்லி சிரித்தாள். ''ஐயா! என் ஆண்டை இங்கில்லாத நேரத்தில் இல்லாததும் பொல்லாததும் கூறி ஏதாவது செய்து எப்படியாவது என் மீது வேவு பார்ப்பவள் என்று பழிசுமத்தித் தூக்கிலிடப் பார்க்கிறீர்கள்! மகாராணி! நீங்களுமா இதை வாளாவிருந்து அனுமதிக்கப் போகிறீர்கள்? இவருடைய காம இச்சைகளுக்கு நான் இவரது விருப்பப்படி ரகசியமாக அடிபணியவில்லை என்பதற்காக இப்படி என்னைப் பழி வாங்குகிறார் என்பது புரியவில்லையா உங்களுக்கு?''

''என்ன சொன்னாய்!'' என்று கர்ஜித்தவாறு உடைவாளை உருவினான் தாணுரவி. மனத்தளவிலேனும் குற்றம் புரிந்திருந்ததால் அவனுக்குக் கோபம் அதிகமாகவே வந்தது.

''பிரபோ! பொறுங்கள்'' என்றாள் கடம்பமாதேவி குறுக்கே புகுந்து.

''ஐயா! அமைதி அடையுங்கள்!'' என்றான் கன்னரதேவன் அவர் கரம் பற்றி.

''தாணுரவி! அறிவாற்றலில் இல்லாவிட்டாலும் வயதில், அனுபவத்தில் முதிர்ந்தவள் என்பதால் சொல்கிறேன். சினம் கொள்ளாதீர்கள்!'' என்று ஆரம்பித்தாள் குவளை. ''விசாரணை நடத்துங்கள்; ஆனால் தீர்ப்போ தண்டனையோ வழங்க வேண்டியவர்கள் இளங்கோப்பிச்சியும் கன்னரதேவனும்தான். அதை நிறைவேற்றும் காலம் ஆதித்தன் போர்க் களத்திலிருந்து திரும்பிய பின்னர் தான்.''

''தாயே! கருநாகத்தை உங்கள் மகன் செல்லம் கொடுத்து வளர்க்கிறார். அதற்குப் பால் வார்க்கிறார் உங்கள் மருமகள். எச்சரிக்க வேண்டியது என் கடமை!''

''பிரபோ! உண்மையில் நீங்கள் அபிமானவல்லிக்கு நன்றியல்லவோ கூறவேண்டும்'' என்றாள் கடம்பமாதேவி. ''பாண்டியனின் மெய்யான மனநிலையை அறிய இந்த ஓலை உதவப் போகிறதல்லவா? இவளை இவளுடைய மாளிகையிலேயே காவல் வைத்து விடலாம். நமது திட்டத்தை நிறைவேற்றலாம். வீரநாராயணன் இந்த ஓலைக்கு மதிப்பளிப்பாரேயானால் அநேகமாகப்பெண்ணாகட நகரைத்தான் தாக்குவான். அவனைச் சேர நாட்டுப் படைகள் உங்கள் தலைமையில் சந்திக்கும்; தும்சம் செய்யும்.''

''சேர நாட்டுச் சேனையா...?'' என்று வியப்புடன் வினவினான் கன்னரதேவன்.

''ஆம்! இளவலே! நான் சோணாட்டுக்குள் நட்புரிமையுடன் தனியே வந்திருக்கிறேனே தவிர, எல்லைப் புறத்தில் எனது பெரும் படை எதற்கும் சித்தமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. கடம்பமாதேவியின் இந்த ஏற்பாட்டை ஆதித்தனும் குலாந்தகனும், நானும் மட்டுமே அறிவோம். அபிமானவல்லி ஏமாந்து தான் போனாள்.''

''ஏமாந்தது, இந்த ஓர் அம்சத்தில் மட்டுமா?'' என்று புன்னகைத்தாள் கடம்ப

மாதேவி. ''பழையாறையில் சோழ மன்னரின் பிரம்மாதிராஜர்கள் பல நாட்கள் ஆலோசித்து வகுத்த போர்த் திட்டத்தை இவள் அந்தப்புர, திலிருந்து திருடிக் காஞ்சிக்கு அனுப்பினாள். அந்தத் திட்டத்தையே நான் மாற்றி வேறு போர்த் தந்திரம் உருவாக்கிச் சோழச் சக்கரவர்த்திக்கு அளித்தேன் என்பது பாவம், இவளுக்குத் தெரியாது.''

''என்னது!'' என்று திடுக்கிட்டுக் கேட்டாள் அபிமானவல்லி.

அந்தக் கணத்தில் பசுத்தோல் சற்று விலகிய போதிலும் மேலும் சுயரூபம் காண, வேண்டுமென்றே ஏளனம் செய்து சிரித்தாள் கடம்பமாதேவி.

''அபிமானவல்லி! இந்நேரம் பல்லவேந்திரர் முற்றிலும் ஏமாற்றப்பட்டுப் படுதோல்வியின் எல்லையில் தடுமாறிக் கொண்டிருப்பார். அதற்குக் காரணம் உன்னுடைய அசட்டுத் தனங்கள்தாம்!''

சரேலென்று சிறுத்தையாகச் சீறிப்பாய்ந்தாள் அபிமானவல்லி. கடம்பமாதேவியைத் தாக்கி வீழ்த்தினாள். அவள் நெஞ்சிலே மண்டியிட்டு இடையில் செருகியிருந்த ஒரு சிறு கூரிய கத்தியை அதன் உறையிலிருந்து உருவி அவள் தோளில் ஆழச் செருகியும் விட்டாள். கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்து விட்டது இந்தக் கொடுமை.

''ஐயோ!'' என்று அலறினாள் இளங்கோப்பிச்சி.

''கடம்பமாதேவி!'' என்று பதறியபடி நெருங்கிய சேரமான், அபிமானவல்லியை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரிவோடு தன் ராஜ தந்திரியைப் பார்த்தான். கண் கலங்கி நீர்த்திரையிட நோக்கிய போது இரண்டு, மூன்று கடம்பமாதேவிகளைக் கண்டான். அவள் உயிர்தான் படிப்படியாகப் பிரிந்து உயர்கிறதோ என்ற பிரமை உண்டாயிற்று.

தோளுக்கும் வலது நெஞ்சகத்துக்கும் இடையே பிடிவரை ஆழ இறங்கி விட்டிருந்த கூரிய, மெல்லிய குத்துவாளை உருவி எடுப்பதா வேண்டாமா என்று தயங்கியபடியே மறுபடியும் நாத்தழுதழுக்க ''கடம்பமாதேவி!'' என்று அன்பு ததும்ப அழைத்தான். அதற்குமேல் என்ன சொல்வது என்றே அவனுக்குப் புரியவில்லை.

வேதனை படர்ந்திருந்த முகத்தில் கடம்பமாதேவி மிகுந்த பிரயாசைப்பட்டுக் கண்களைத் திறந்தாள். அதை விடவும் அதிக சிரமத்துடன் ஒரு புன்னகையையும் தருவித்துக் கொண்டாள். ''பிரபோ, கலங்காதீர்கள்!''. என்றாள் கம்மிய குரலில். ''ஒவ்வொரு கணமும் குலாந்தகனை எண்ணியபடியே உயிரை விட்டதாக அவரிடம் தெரியப்படுத்துங்கள்.''

அவள் கன்னத்தில் வழிந்திருந்த தனது கண்ணீர்த் துளிகளை உத்தரீயத்தால் மெல்ல ஒற்றி எடுத்தபடியே, ''ஆகட்டும் தேவி, சொல்கிறேன். ஆனால் அதற்கு அவசியமில்லாமலே போகட்டும்'' என்றான் தாணுரவி.

இதற்குள் கைதட்டி, ''யாரங்கே'' என்று விளித்து, அரண்மனை வைத்தியர்களை விரைந்து அழைத்து வரப் பணித்திருந்தான் கன்னரதேவன்.

அபிமானவல்லியை அவளது மாளிகையிலேயே சிறை வைக்குமாறு காவலருக்குக் கட்டளையிட்டாள் குவளை. தப்பவிட்டால் அவர்கள் தலைகள் கொய்யப்படும் என்றும் எச்சரித்து அனுப்பினாள்.

''இன்னுமா அவளுக்குக் கருணை?'' என்றான் தாணுரவி, மனக்கசப்புடன்.

கணவனுக்குத் தந்த வாக்குறுதியை மறுபடியும் நினைவூட்டிக் கொண்டாள் இளங்கோப்பிச்சி. தாணுரவி இதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாதே என்ற கவலையும் அவளை ஆட்கொண்டது.

வைத்தியர்கள் வந்து உடனே சிகிச்சை தொடங்கினர். கத்தியை உருவி நீக்கிய போது வேதனை தாளாமல் அலறினாள். குபீரென்று குருதி பீறிட்டது. வெண்பட்டில் பூஜைக்குரிய செம்பருத்தி மலர்களை ஏந்தி வந்தாற்போல் கடம்பமாதேவியின் பளிங்கு மேனியில் செம்மை படர்ந்தது.

வேட்டையாடியும் போர்க்களம் கண்டும் பழகியிருந்த போதிலும் தாணுரவி இந்தக் காட்சியைக் காணத் திராணியின்றித் தளர்ந்து விம்மினான். ''வைத்தியரே! 'இவள் உடலிலிருந்து சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் ஓராயிரம் ரத்தினங்களை விடவும் மதிப்பு மிக்கது'' என்றான்.



பேச்சும் நேரமும்!

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த உட்ரோ வில்சன் என்பவரைச் செய்தி நிருபர் பேட்டி கண்ட போது, ''நீங்கள்... 15 நிமிடப் பேச்சுக்கு எவ்வளவு நாள் முன்னதாகத் தயார் செய்வீர்கள்?'' என்று கேட்க அவர், ''இரண்டு வாரம்'' என்றார்.

''அப்படியா! ஒரு மணி நேரம் பேசுவதற்கு?''

''ஒரு வாரம்.'' என்று ஜனாதிபதி பதிலளித்தார்.

''இரண்டு மணி நேரம் பேசுவதற்கு...?'' என்று நிருபர் கேட்டதும்,

''இதோ... இப்போதே தயார்!'' என்று கூறி, இருக்கையை விட்டு எழுந்து விட்டார்!

—பானு மணாளன்.

''பிரபோ! இன்று இழக்கும் செல்வத்தை நாளை ஈட்டுவது போல ரத்தம் உடலில் மறுபடி ஊறிவிடும். அதுகுறித்து அச்சமில்லை. காய்ச்சல் தோன்றும்; கட்டுப்படுத்திவிடலாம். ஆனால் கத்தி விஷக் கத்தியோ என்று ஐயுறுகிறேன். காயம் புரையோடிப் போகாதிருக்க வேண்டும். அதற்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்! நானும் எனது அறிவாற்றலையும் அனுபவ ஞானத்தையும் முழுவதுமாகப் பிரயோகிக்கிறேன்'' என்று கூறியபடியே மருத்துவர் ரத்தப் பெருக்கை நிறுத்தவும் காயம் ஆறவும் குவளையின் மேற் பார்வையில் மூலிகை தூவிப் பச்சிலை வைத்துக் கட்டினார். மயக்கம் தெளியும் போது அருந்த ஔடதமும் தந்தார்.

''உயிர் பிழைத்து விடுவாள் அல்லவா? அதைக் கூறுங்கள்'' என்று வினவினான் சேரமான்.

''நாளுநாள் சென்று தான் எதையும் உறுதியாகக் கூற முடியும்'' என்று அழுத்தமாகப் பேசி மேற்கொண்டு கேள்விகளுக்கு இடமின்றிச் செய்தார் . மருத்துவர்.

''பிரபோ! அபிமானவல்லி தப்பாமலும் கடம்பமாதேவியின் உயிர் பிரியாமலும் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். நீங்கள் உங்கள் திட்டத்தை நிறைவேற்றுங்கள்'' என்றாள் இளங்கோப்பிச்சி.

தானுரவிக்கும் அது சரியென்றே தோன்றியது. போர்க்களத்தின் சோதனைகளைக் கூட எளிதில் வீரமுடன் தாங்கலாம். ஆனால் இங்கே தனது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய கடம்பமாதேவி அருகிலேயே இருந்து அவள் படும் துன்பத்தைப்பார்த்துக் கொண்டே இருந்தால் தன் மனம் கோழையாகிப் பதைபதைக்கும்.

''மகாராணி! நான் அதிகம் கூறத் தேவையில்லை. எனது வெற்றிகளுக்கும் உங்கள் கணவருடைய வெற்றிகளுக்கும் முழு முதற்காரணம் இவளே. வெற்றித் திருமகளை உங்களிடம் ஒப்படைக்கிறேன். காத்துக் கொடுத்து நமது எதிர்காலத்தை ஒளிரச் செய்யுங்கள்'' என்று கூறிப் பிரிந்தான்.

(தொடரும்)

அருள்வாக்கு

எடுத்ததற்கெல்லாம் தன்னிஷ்டப்படிச் சட்டம் செய்ய இடமுள்ள போதுதான் யதேச்சாதிகாரத்துக்கு இடம் கொடுத்துப் போகும். பழைய காலத்தில் 'மானார்க்கி'தான் நடந்ததென்றாலும் கூட ராஜாக்களுக்கு இப்படி நினைத்த மாதிரியெல்லாம் சட்டம் செய்ய 'அதாரிடி' இருக்கவில்லை என்பது தெரியாததால்தான் 'கிரிடிஸைஸ்' செய்கிறார்கள். கிரிடிஸைஸ் செய்பவர்கள் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால் அடிப்படைச் சட்டங்கள் யாவும் தர்மசாஸ்திரத்திலும், அர்த்த சாஸ்திரத்திலும் எழுதி வைக்கப்பட்டவையாகவேஇருந்து விட்டன. சாச்வத வாழ்க்கைக்கு ஒரு துணை உபாயமாக இந்தத் தார்மீக சட்டங்கள் இருப்பதால் இவையும் சாச்வதம் தான் என்ற நம்பிக்கையும் பிடிப்பும் எல்லா ராஜாக்களுக்கும் இருந்தன. வைதிகத்தையும் ஆஸ்திக்யத்தையும் தர்மத்தையும் விருத்தி செய்வதே ராஜாவின் பொறுப்பு என்று சின்ன வயதில் குருகுல வாசத்திலேயே அரச குமாரர்




களுக்கு ஆழமாகப் போதிக்கப்பட்டிருந்தது. 'இந்த சாச்வத ஸத்யங்களைப் பழைய சாஸ்திரங்களின் சட்டங்களையே சாச்வதமாகப் பின்பற்றினால் தான் அடைய முடியும்; கொஞ்சமும் ஸ்வய நலம் கலக்காமல், லோகத்தின் நிரந்தர க்ஷேமத்திற்கென்றே ரிஷிகள் கொடுத்துள்ள விதிகளை அவர்களுடைய நிலைக்கு எவ்வளவோ கீழே உள்ள நாம் மாற்றப்படாது என்று ஒரு ராஜா வித்யாப்யாஸத்தின் போதே 'கன்வின்ஸ்' பண்ணப்பட்டிருப்பான். அதனால் இந்த சாஸ்திரங்கள், நடைமுறைத் தேவைகள் இரண்டையும் நன்றாயறிந்த மந்திரிகளின் துணையுடன் அவன் ஆட்சி பண்ணும்போது காலதேச வர்த்தமானங்களின் நிர்ப்பந்தத்தினால் சாஸ்திரச் சட்டங்களில் எங்கே மாறுதல் தேவைப்படுகிறதோ, அங்கே மட்டும் கொஞ்சம் பண்ணிப் புது ரூல் போடுவான். மாறுதல் என்றால் முழுக்க Change பண்ண மாட்டான். கொஞ்சம் Modify மட்டும் பண்ணுவான். சாஸ்திரத்திலேயே அவ்வப்போது வருகிற ராஜாவின் discretion –க்கு (சமயோசித புத்திக்கு) என்று விட்டிருக்கிற இனங்களில் தான் சட்டம் போடுவான். 'தேர்ச் சக்கரம் பாதையை விட்டுக் கொஞ்சம் கூட விலகாத மாதிரி திலீபன் மநு தர்மத்தை விட்டு விலகாமலே ஆட்சி பண்ணினான்' என்று காளிதாஸன் சொல்வது அக்காலத்தில் பொதுவாக எல்லா ராஜாங்கத்தின் நடைமுறையையும் Reflect பண்ணுவதுதான்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

கல்கி

அடுத்த வாரம்

சித்திரைச் சிறப்பிதழ்



தெய்வ தரிசனம்

-ஆனந்தி

எழுதும் கட்டுரைகள்



ம. வே. சிவகுமார்

பழையன கழிதலும்

முழுநீள நாவல்



இல்லறம் எனும் நல்லறம்

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய

இலவச இணைப்பு

மாணவ இளைஞருக்கு



எதிர்காலம் உங்கள் கையில்...

மேல்படிப்பு தொடர்பான நடைமுறை

சாத்தியமான பயன் மிக்க யோசனைகள்



★ நா. பா. தொடர்கதை : மூலக்கனல்

★ மாலினி சேஷாத்திரி : விவாத அரங்கு

★ நா. காமராசன் : ஒரு புதிய அழைப்பு

★ ஜே. எஸ். ராகவன் : சிரிப்புச் சித்திரத் தொடர்

-செல்லம்




✖ நகரவாசிகளின் பெருந்தன்மை



✖ கவர்ச்சிகரமான விளம்பரத்தின் மேல்பகுதி

பிப்ரவரி மாதக் கடைசி வாரத்தில் ஒருநாள். கிண்டியிலுள்ள சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலகத்தில் (MMDA) ஒரே பரபரப்பு. வேதனைக் குரல்கள். உள்ளே எட்டிப் பார்த்தால், நடுத்தரக்குடும்பத்தைச் சேர்ந்த தாய்மார்களும், ஆண்களுமாக, அந்த நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியை (Chief executive officer) கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள்... விஷயம் என்னவென்று விசாரித்தால்....


1981—ஆம் ஆண்டு சென்னை பெருநகர்வளர்ச்சி குழுமம், ஒரு கவர்ச்சிகரமானவிளம்பரத்தைப்பத்திரிகைகளில் வெளியிட்டது. ஒரு வீட்டின் ப்ளானைப் போட்டு. 'இந்த வீடு உங்களுக்கே சொந்தமாகலாம்' என்று விளம்பரப்படுத்தியது. ''குறைந்த வருவாய், மற்றும் நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு, நாங்களே வீடு கட்டித் தருகிறோம். நீங்கள் பதினைந்து ஆண்டுகளில், தவணைமுறையில் பணத்தைக்கட்டலாம்' என்று அந்த விளம்பரம் கூறியது. நடுத்தர வருவாய் வீடு பெற 154 நபர்கள் மனுச் செய்திருந்தனர். ஆனால் முன் பணமான ரூபாய் 13,300 ஐ 114நபர்களே கட்டியதால், அவர்களுக்கு வீடு கட்டித் தருவது என்று தீர்மானிக்கப் பட்டது. வருடங்கள் கடந்தன. இதோ, அதோ என்று நாட்களைக் கடத்தி விட்டு, திடீரென்று அந்த 114 பேர்களின் தலையிலும் கல்லைத் தூக்கிப் போட்டது அந்த நிறுவனம். 60 வீடுகளே கட்டியிருப்பதால்,




○ நிற்கின்ற, இடிந்துபோன பாதரும்கள்

114 பேர்களுக்கு வீடுகள் கொடுக்க முடியாதென்றும் குலுக்கல் முறையில் 60பேர்களும், தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் மீதிப் பேர்கள் கட்டியபணத்தைக் குறைந்தபட்ச வட்டியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறிவிட்டது. அன்றைய வேதனைக் குரல்களுக்கும், கூச்சல்களுக்கும் இது தான் காரணம். பல பெண்மணிகள் ''நாங்கள் நகைகளை விற்று முன் பணத்தைக் கட்டினோம். குறைந்த பட்ச வட்டியோடு திருப்பித் தருகிறார்களாம். நகைகளின் இன்றைய மதிப்புப் பற்றித் தெரியாது போலிருக்கிறது இவர்களுக்கு'' என்று அந்த நிறுவனத்தைச் சபித்தார்கள். இத்தனைக்கும் 42,000 ரூபாயில் வீடு கட்டித்தருகிறேன் என்று கூறிய இந்த நிறுவனம், குலுக்கல் சமயத்தில் வீட்டின் மதிப்பை 20,000 ரூபாய் ஏற்றி விட்டது. அந்த 114 பேர்களும் உயர்த்தப்பட்டமதிப்பையும் கொடுக்கத் தயார் தான். ஆனால் எம்.எம்.டி.ஏ.வோ 60 நபர்களுக்குத் தான் வீடு என்று பிடிவாதமாகக் கூறி வருகிறது. சொன்னபடி 114 பேர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வக்கில்லாத எம். எம். டி. ஏ. இவர்களிடம் முன்பணம் வாங்கியது ஏன்? இந்த 114 நபர்களும் மிகுந்த எதிர்பார்ப்போடு புதிய வீட்டில் குடியேற நினைத்தது சென்னையிலிருந்து 45 கி. மீ. தொலைவில் உள்ள மறைமலை நகரில் தான். 1974—இல் திட்டம் தயாரிக்கப்பட்டு, 1980—ல் சென்னை பெருநகர் வளர்ச்சி கழகத்தால் முதல் கட்டமாக நிறைவேற்றப்பட்ட

மறைமலைநகர் மர்மங்கள்





○ செப்டிக் டேங், மாடல் புகைபோக்கிகள்


○ பாழாகப் போகும் டான்ஸி கட்டடம்

மறைமலை நகரின் இன்றைய நிலையைச் சற்றுப் பார்ப்போமா?

''இனிதே வருக''

தாம்பரத்தில் இருந்து புளி மூட்டைகளை அடைத்துக் கொண்டு செல்வது போல் சென்ற பஸ் காட்டாங்குளத்தூர் ரயில்வே ஸ்டேஷனை அடுத்த ஸ்டாப்பில் நின்றவுடன், நிறைய மக்கள் இறங்குகிறார்கள். இறங்கியவுடன் எதிரே பார்த்தால் 'இனிதே வருக' என்ற போர்டு நின்று கொண்டிருக்கிறது. மெயின் ரோடிலிருந்து பார்த்தால் இந்த நகர் மிகவும் சிறியது தான் என்று தோன்றும். உள்ளே சென்று பார்த்தால், இந்த நகரின் பரப்பளவும், வீடுகளின் எண்ணிக்கையும் பிரமிக்க வைக்கிறது. 1980—ல் முதல் கட்டமாகக் கட்டப்பட்ட 144 வீடுகளில் குடிவந்தவர்கள் மிகவும் தைரியசாலிகள்தான். அன்று எந்த ஒரு அடிப்படை வசதியும் இல்லாத இந்த நகரில் குடிவந்தவர்கள் இன்று கிட்டத்தட்ட 50 சதவீத வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள். மறைமலை நகர் நல்வாழ்வு சங்கம் செய்திருக்கும் சாதனைகள் அபாரம். கூட்டுறவு கடை, தபால் அலுவலகம் போன்ற பலவற்றைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சேட்டுப்,போராடிப் பெற்றிருக்கிறார்கள். இன்று கிட்டத்தட்ட 800 வீடுகள் இந்த நகரில் இருக்கிறது. இது தவிர பெரிதும் சிறிதுமாக 20 தொழிற்சாலைகள் இந்த நகருக்குப் பக்கத்தில் இருக்கின்றன. சுமார் 6000 பேர்கள் வசிக்கும் இந்த நகரில் பாதிப்பேர்கள் தினமும் சென்னை நகருக்கு வேலைக்குச் செல்பவர்கள்.

○ ஒன்றரை வருடங்களாகக் கட்டப்பட்டு...




இவர்களது பெரிய எதிரி வீட்டு வசதி வாரியம்தான்.

ஹவுஸிங் போர்டின் அநியாயங்கள்:

ட்கோ போன்ற பல நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கி, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், மறைமலைநகரில் வீடுகட்டும் பணியினை வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்தது. இவர்கள் வீடு கட்டிய லட்சணத்தை நினைத்தால் பற்றிக்கொண்டு வருகிறது. ஓர் இடத்தில் பெரிய நகரே நிர்மாணிக்கும்போது, மண் சோதனை போன்றவற்றைச் செய்வது அவசியம். ஆனால் வீட்டு வசதி வாரியம் இதையெல்லாம் செய்து கொண்டிருக்கவில்லை. மேடோ, பள்ளமோ அடுக்கியது செங்கற்களை. மேற்கூரையோ RCC அல்ல. செல்கிரீட்டால் அமைக்கப்பட்ட அந்த மேற்கூரை மழை பெய்தால் தண்ணீரைப் பெற்றுக் கொண்டு, இரண்டு நாள் கழித்து உள்ளே கொட்டுமாம். எப்படியிருக்கிறது! இந்த அழகில், நகர்வாசிகள் புகார் கொடுக்க, வீட்டுக்கு மேலே தார் பூசி விட்டார்கள். இப்போது வெய்யிலில் அது உருகிச் சுவர்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு வீட்டின் சமையல் அறையும், ஹாலும், மேடும் பள்ளமுமாக இருக்கின்றன. காரணம்: சமையல் அறையின் சுவர் மண்ணில் இறங்கியது தான். கதவின் மேலே உள்ள விரிசல்கள் வீடு எந்த நேரத்தில் விழுந்து விடுமோ என்று பயமுறுத்திக்கொண்டிருக்கின்றன. தரையில் தட்டினால் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு சப்தம். ''வீட்டு வசதி வாரியம்,

○ எப்போது இடிந்துவிழுமோ?



பெரும்பாலான ஒப்பந்தங்களை அ.தி.மு.க. காண்ட்ராக்டர்களிடம் கொடுக்க, அவர்கள் விளையாடிவிட்டார்கள். இதில் கைமாறிய தொகை எக்கச்சக்க லட்சம்'' என்கிறார் மறைமலைநகர் வாசி ஒருவர். சென்னையிலிருந்து பல கி.மீ. தள்ளி ஒதுக்குப்புறமாக இருப்பதால் சரியான மேற்பார்வை இல்லாமல் கட்டப்பட்டிருக்கின்றன வீடுகள். எம்.எம்.டி.ஏவோ ஒப்பந்தத்தைக் கொடுத்தவுடன் தனது பணி முடிந்து விட்டது போல் ஒதுங்கிவிட்டது. வீட்டு வசதி வாரியம், கொடுக்கும் பணத்தை முறைப்படி செலவு செய்கிறதா, திட்டமிட்டபடி கட்டடங்கள் கட்டப்படுகின்றனவா என்று கண்காணிக்கும் பொறுப்பைக் கோட்டை விட்ட எம்.எம்.டி.ஏ. இன்று விலைவாசி ஏறிவிட்டதென்று கட்டிய வீட்டிற்கு அதிகத் தொகை நிர்ணயித்திருப்பது நியாயமா என்று கேட்டு நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள் மறைமலை நகர் வாசிகள்.

வீட்டுக்குள் வரும் கழிவுநீர்

எட்டு கி.மீ. நீளமும், நான்கு கி.மீ. அகலமும் உள்ள இந்த நகரின் நடுவில் மூன்று ஏரிகள் இருக்கின்றன. இந்த நகரின் கழிவுநீர் கலப்பது இந்த ஏரிகளில் தான்! இந்த ஏரிகளின் நீர் மட்டத்திற்கு மிகவும் தாழ்வாக வீடுகள் அமைக்கப்பட்டிருப்பதால் மழைக் காலத்தில் வீட்டிற்குள்ளும் கழிவு நீர் வந்து விடும். சாலைகளில் சாக்கடைக் குழாய்களின் மூடிகள் உயர்வாக அமைக்கப்பட்டிருப்பதால், இரவில் சாலைகளில் செல்பவர்கள் தடுக்கி விழுந்து பற்களை உடைத்துக் கொள்ள வாய்ப்பு உண்டு. நகரவாசிகள் பலமுறை சொல்லிச் சொல்லி, பிறகு தான் வீட்டு வசதி வாரியம் உயர்வாக வைக்கப்பட்டிருந்த சாக்கடைக் குழாய் மூடிகளைச் சற்று உடைத்துத் தாழ்த்தியது.

வீட்டைக் கட்டிய என்ஜினியர்கள் மிகவும் புத்திசாலிகள். முதல் கட்டமாகக் கட்டிய எந்த வீட்டிலும் புகைப் போக்கி வைக்கவில்லை. இந்தக் குறையை நீக்க அடுத்த கட்டமாகக் கட்டிய வீடுகளில் வைத்தார்கள். எப்படித் தெரியுமா? செப்டிக் டாங்குகளில் வைத்திருப்பார்களே- அது போன்ற அமைப்பைப் புகைப்போக்கி என்ற பெயரில் வைத்து விட்டிருக்கிறார்கள்!

இந்நகர் வாசிகள் சாலை, குடிநீர், சாக்கடை போன்ற பல பிரச்னைகளுக்கு வீட்டு வசதி வாரியத்தைத் தான் அணுக வேண்டியுள்ளது. அவர்கள் ஏனோ—தானோவென்று இருக்கிறார்கள். எம்.எம்.டி.ஏ.விற்கு என்று ஓர் அலுவலர் இருக்கிறார். ஏதாவது குறைகளைக் கொடுத்தால் அவர் பணி சென்னை தலைமை அலுவலகத்துக்கு அந்தக் குறையை அனுப்புவதுடன் முடிந்து விடும். வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்த ஒரு பொறியாளர் கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாக இந்த இடத்தில் பணிபுரிந்து வருகிறார். ''நீண்ட காலமாக அவர் இருப்பதால், ஒப்பந்தக்காரர்களோடு சேர்ந்து கொண்டு ஊழல் புரிய வாய்ப்பு இருக்கிறது'' என்றார் நகர்வாசி ஒருவர்.

வீட்டு வசதி வாரியம் கட்டிய வீடுகள் தான் இப்படி என்றால், சாலைகளைப் பற்றிக் கேட்கவேண்டாம். குண்டும், குழியுமாகக் கற்கள் கால்களையும், கார், ஸ்கூட்டர் டயர்களையும் பதம்பார்க்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. தாம்பரத்தைச்சேர்ந்த அ.இ.மு.க. நபர் ஒருவர்தான் காண்ட்ராக்டராம்.

எம். எம். டி. ஏ. வின் ஏமாற்று வேலை:

முதலில் ஒரு தொகையை அறிவிப்பது. பிறகு அதைப் பன்மடங்கு ஏற்றுவது போன்ற செயல்கள் மட்டுமின்றி ஒரே காம்பவுண்டுக்குள் கட்டப்பட்ட ஒரே மாதிரி வீடுகளுக்கு இரண்டு வித மதிப்பு நிர்ணயித்து ஆச்சரியப்பட வைத்துக் கொண்டிருக்கிறது எம்.எம்.டி.ஏ. குறைந்த வருவாய் (L.I.G.) உள்ளவர்களுக்கு கட்டப்பட்ட 234 வீடுகளில், 30 வீடுகளை நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு ஏற்ற வீடுகள் என்று அறிவித்து விட்டு பணத்தைப் பெறத் துடித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் என்ன ஏமாளிகளா?

எஃப். ஓ. எல். (F.O.L.) என்று ஒரு திட்டம். 1979–ல் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது பாத்ரூமையும், கக்கூசையும் கட்டிக் கொடுத்து விடுவார்கள். அதையொட்டி நிலத்தையும் விண்ணப்பித்துக்கொண்டவர்களுக்கு அளித்து விடுவார்கள்! அவர்களே வீடு கட்டிக் கொள்ள வேண்டும். 20 பேர் இந்த மாதிரி நிலம் வேண்டும் என்று விண்ணப்பித்து தலா 3000 ரூபாய் டெபாஸிட் செய்திருந்தார்கள். ஆனால் இன்னும் அவர்களுக்கு நிலம் ஒதுக்கப்படவில்லை. கட்டப்பட்ட பாத்ரூம்களும், கக்கூசுகளும் இடிந்துநொறுங்கி விட்டன.

மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ இந்த நகரைப் பற்றிய பிரச்னைகளைப் பேசித் தீர்க்க (?) எம்.எம்.டி.ஏ. ஒருகூட்டம் நடத்துகிறதாம்! மூன்றாவது கட்டமாகக் கட்டப்பட்டுள்ள வீடுகள் உள்ள இடத்தில் ஒரு சாலைக்குப் பக்கமாக ஆழ் கிணறு ஒன்று இருக்கிறது. வறட்சிக்காலத்தில் கூட மக்களுக்குத் தண்ணீர் வழங்கிய கிணறு இது. இதை மூடி விடுவது என்று வீட்டுவசதி வாரியம் தீர்மானிக்க, விஷயம், மேற்படி கூட்டத்திற்கு வந்திருக்கிறது. 'வீட்டு வசதி வாரியம் அப்படிச் செய்யக் கூடாது' என்று எம்.எம்.டி.ஏ. அதிகாரிகள் கேட்டுக் கொண்டும் லட்சியம் செய்யாமல் கிணற்றை மூட ஆரம்பித்திருக்கிறது வீட்டு வசதி வாரியம்.

வீட்டு வசதி வாரியத்தின் நடவடிக்கைகளை எம்.எம்.டி.ஏ. இப்போது கண்காணிக்க ஆரம்பித்து இருக்



ஒருவர்: உங்க புதிய இன்சூரன்ஸ் 'திட்டத்தோட ஸ்பெஷாலிட்டி என்ன?

ஏஜெண்ட்: நீங்க டீ. வி. பார்க்கிற போது. நிகழ்ச்சிகளில் அறுவை தாங்க முடியாம, எரிச்சல் வந்து. கையில் அகப்பட்டதை எறிஞ்சி. டீ. விக்கு ஏதாவது ஆகி விடலாம். அப்போ உதவறதுக்குத்தான் இந்தத்திட்டம்.

- ரௌம்யா

கிறது. இதனால் வீட்டுவசதி வாரியத்தினருக்கு எரிச்சலாம். இதுபற்றி எம்.எம்.டி. ஏ. அதிகாரி ஒருவர் கூறினார். ''எங்களுக்கு மிகுந்த கெட்ட பெயரை வாங்கித் தந்து விட்டார்கள் வீட்டு வசதி வாரியத்தினர். முதலில் வீடு கட்ட இவ்வளவு தொகை ஆகும்என்று கூறிவிட்டு, பிறகு அதை உயர்த்துவதற்கு வீட்டு வசதி வாரியம் தான் காரணம். காண்டிராக்டர்களோடு சேர்ந்து கொண்டு இவர்கள்அடிக்கும் கொள்ளைகளால் எங்கள் பெயர் மக்களிடத்தில்கெட்டுப்போயிருக்கிறது. இனிமேல் ஒப்பந்தங்களைத் தனியாரிடம் விடலாமா என்றும் யோசித்துக்கொண்டிருக்கிறோம்.கோயம்பேட்டில் நாங்கள் கட்டப் போகும் காய்கறி மார்க்கெட்டை எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த புதிதாக ஏற்படுத்தப்பட்ட பொறியாளர் பிரிவு தான் கட்டப்போகிறது.''

பாழாய்ப்போகும் டான்லி கட்டடம்

மறைமலை நகரில்தொழிற்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஆறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது, டான்லிமொபெட் தொழிற்சாலைக்கான கட்டடம். அந்தத் தொழிற்சாலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கட்டிடமோ பாழாகிக் கொண்டிருக்கிறது. பல சமூக விரோத செயல்கள் நடக்கப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நகரில் கட்டப்படும் தொழிற்சாலைகளில் மறைமலை நகரில் வசிப்போருக்குக் குறிப்பிட்ட சதவீதம் வேலை தரப்படவேண்டும் என்று உள்ளது.ஆனால் தொழிலதிபர்கள் இந்தவிதியைக் கண்டு கொள்வதில்லை. வடநாட்டைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர், வடக்கேயிருந்தே ஏராளமான ஆட்களைக் கொண்டு வந்து வேலை கொடுத்திருக்கிறார்.

மாமூல் கொடுத்தால் டெலிபோன் தொடர்பு:

இங்குள்ள பல தொழிற்சாலைகளுக்குச் சென்னையில் தான் தலைமை அலுவலகங்கள் உள்ளன. அதனால் தினசரி சென்னையுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் தொலைபேசி தொடர்பு, செங்கல்பட்டு வழியாகத் தான் சென்னை வந்து சேரவேண்டும். பல சமயங்களில் முதல்நாள் 'புக்' பண்ணிய 'கால்'கள் மறுநாள் கூடக் கிடைக்காமல் போவதுண்டு. ''ஆனால் செங்கல்பட்டிலுள்ள டெலிபோன் ஆபரேட்டர்களை 'கவனித்தால்' உடனுக்குடன் சென்னை 'கால்'கள் கிடைத்துவிடும்'' என்கிறார் இங்குள்ள சிறு தொழிற்சாலை அதிபர் ஒருவர். மறைமலை நகரிலேயே 100 லைன்கள் கொண்ட தொலைபேசித் தொடர்பகம் உள்ளது. இதையே விரிவு படுத்தி, சென்னையோடு நேரடித் தொடர்புகொள்ள ஏற்பாடு செய்யலாமே!

தலையாய பிரச்னை

மறைமலை நகர் வாசிகளுக்குப் பாவம், எத்தனையோ பிரச்னைகள் இருப்பினும் அனைத்திலும் தலையாய பிரச்னை 'இண்டேன் காஸ்' பிரச்னைதான். இந்தியன் ஆயில் நிறுவனம் இந்தப் பகுதி கிராமப்புறப் பகுதி என்றும் எனவே ஏஜெண்டுகள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்றும் கூறி வருகிறது. ஒவ்வொரு வீட்டிலும் புகைக்கூண்டு இல்லாத நிலையில், இண்டேன் காஸ் வசதி இந்தப் பகுதிக்கு இன்றியமையாதது. எக்கச்சக்கமான இணைப்புக்கள் வழங்கி வரும் இந்தியன் ஆயில் நிறுவனம் இவர்களின் கோரிக்கையைக் கவனிக்குமா? கிராமப்புறப் பகுதி என்பதால் மண்ணெண்ணெயும் மூன்று லிட்டர் தான் கொடுக்கிறார்களாம்.

போலீஸ் ஸ்டேஷன், தொலைபேசி நிலையம் ஆகியவை கட்டப்பட அனுமதிகிடைத்தும் எம். எம். டி. ஏ. மௌனமாக இருக்கிறது. ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் ஆயிற்று. இன்னும் பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. ''இந்த வருடம் அதற்குத் திறப்பு விழா நடத்த முடியாது போலிருக்கிறது'' என்றார் நகரவாசி ஒருவர்.

மயானம் அமைக்க ஒரு லட்சத்திற்கு மேல் செலவு செய்ய அனுமதி கிடைத்தும் வேலை ஆரம்பமாகவில்லை.

அவசர மருத்துவ வசதிக்கு தாம்பரமோ அல்லது சென்னைக்கோ தான் வர வேண்டும்.

இன்னும் பல்வேறு வசதிக் குறைவுகள் இருந்தும், 'இனிதே வருக' என்று நம்மை வரவேற்கும் மறைமலை நகர்வாசிகள் மிகவும் பெருந்தன்மை கொண்டவர்கள் தான்!

—ப்ரியன்

படங்கள்: ஸ்பைடர்மேன்

வட்டமேஜை

● இராமப்பிரசாதராவ் கமிஷன் கார்ட்டூனிலே சக்கரபாணிப் பெருமாள் படத்தைப் போட்டு, அர்ச்சகராக விபூதி, உருத்திராட்சம் தாங்கிய சிவாச்சாரியாரைப் போட்டுள்ளீர்களே! திருநாமம், துளசிமணி மாலை தரித்த பட்டாச்சாரியார் படமல்லவா பொருத்தமாக இருக்கும்?
திருவண்ணாமலை, எஸ். ஆர். வீரராகவன்.

● முன்னாள் ஐ. ஜி. யுடன் சிறப்புப்பேட்டி மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. தற்பொழுது பெருகிவரும் காலனிகளில் ஐ. ஜி. கூறிய 'கோபான் அமைப்பு' சாத்தியமே.
சென்னை—28, இ. க. ஸ்ரீராம்.

● சில நேரங்களில் சில அரசியல்வாதிகள் தலையங்கத்தில் சாதாரண மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்துள்ளீர்கள். தன்னை, தனது பதவியை, தன் உறவினர்களைக் காப்பாற்ற நமது அரசியல் தலைவர்கள் செயல்படும் விதம் நகைப்பிற்கிடமானது.
சென்னை—5, எஸ். சம்பத்குமார்.

● கை நகங்களைக் கடிக்கும் பழக்கமுள்ள என் நண்பர் எஸ். தேவதாசன் 25.3.84 இதழில் நகங்களைக் கடிப்பதால் உண்டாகும் நோய்களைப் பற்றி அவருக்கு எடுத்துக் கூறியவுடன் நகம் கடிக்கும் பழக்கத்தை விட முன் வந்திருக்கிறார்.
பெங்களூர்—21, குமற்கோமான்.

● பத்மா கிருஷ்ணனின் 'அபயதானம்' வேறுபட்ட கோணத்தில் உலகினைப் பார்த்த ஒரு பிரமையை ஏற்படுத்தியது.
பெங்களூர்—16, டால்ரிக்ஸ்.

● திரு. மீ. ப. சோமு அவர்களின் 'சிலபல' கட்டுரை நகைச்சுவையாக இருந்தபோதிலும் உண்மை நிலையைச் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சுருக்கென்று உணர்த்துவதுடன் சில சீர்திருத்தங்களாவது பல துறைகளில் ஏற்பட வாய்ப்பு அளிக்கிறது.
சென்னை—7, கே. எஸ். கலைமணி.

● 'புன்னகை அரசி' என்ற பட்டம் பெற்ற கே. ஆர். விஜயாவின் அழுகைப் படத்தினைப் போட்டு, அதற்கு 'அழகான அழுகை' பொன்மொழியைத் தேர்ந்தெடுத்த இறை ஞானியின் செய்கையில் குறும்புத்தனம் கொப்பளிக்கிறது!
சென்னை—35, சி. பூபால்சிங்.

● கலைஞரின் அரசியல் தந்திரத்தை அழகாகத் தரம் பிரித்துக் காட்டிய 'தராக'வின் கணிப்பு, சிறப்பு!

ஜெயலலிதா எம். பி. ஆவது தராகக்குச் சரியான பொறுமை போலிருக்கிறது. அதற்கு அவரது அழகான(!) பதிலே சாட்சி!
கோயமுத்தூர்—35, ஏ. எஸ். கண்ணன்.

● ஜெயவண்ணனின் ''ஆறு மணிக்கு ஒரு கொலை!'' மணிக்கு மணி திகிலையும் மர்மத்தையும் ஊட்டிக் கொண்டேயிருந்தது.
செங்கல்பட்டு, என். முடியப்பன்.

● சுமார் 25 வருடங்களுக்கு முன் தஞ்சாவூரில் சங்கீதம் பயில வருடக் கணக்காகத் தங்கிய காலத்தில் தஞ்சை அரண்மனையின் ஒவ்வொரு பகுதியையும் பெற்றோருடன் சென்று, பார்த்து ரசித்திருக்கிறேன்.

சுரங்கப் பாதையும், ஏழடுக்கு மாளிகையும், தர்பார் மண்டபமும் இன்னமும் என் நினைவில் இருக்கின்றன. ஜன்னலே இல்லாத சுரங்கப்பாதையில் 'கைடு' மெழுகுவர்த்தி ஏற்றிக்கொண்டு நம்மை அழைத்துக் கொண்டு போகும் போது காற்றினால் மெழுகுவர்த்திச் சுடர் ஆடும்! ஏழாவது






அடுக்கு மாளிகையில் ஏறி நின்றுதான் சரபோஜி மகாராஜா நாகூர் ஆண்டவனைத் தரிசிப்பாராம்!

சமீபத்தில் நான் தஞ்சை போயிருந்தபோது, பாழடைந்த அரண்மனையையும், பொறுப்பற்ற சில அதிகாரிகளையும் (கேட்ட கேள்விக்குப் பதில் கூட அவர்களால் சொல்ல முடியவில்லை!) சுரங்கப்பாதை என்று ஒன்று இருந்தது என்கிற பிரக்ஞை கூட இல்லாதவர்களையும், ஏழடுக்கு மாளிகை பாதிக்கு மேல் இடிந்து கிடப்பதையும், (அந்த இடிபாடுகளில் ஏறி நின்று பார்த்தால் நாகூர் ஆண்டவனை என்ன, தஞ்சாவூர் சூப்பர் மார்க்கெட்டைக் கூடக் காண முடியாது!) — தர்பார் மண்டபத்தில் சிலர் சீட்டும், கோலியும் விளையாடுவதையும் — கண்டபோது என் ரத்தம் கொதித்தது!

ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட், கொஞ்சம் விழிப்புணர்வோடு செயல்படும் என்று நாம் எதிர்பார்க்கலாமா?
கோவை, விமலாரமணி.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)

விழிப்புணர்ச்சி தேவை!



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றுதான், அதன் ஒப்பற்ற 3-வழிச் செயலால் வியர்க்குருவை தடுக்கிறது, முறியடிக்கிறது.

OBM-2516/TM

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றில் தான், நிரூபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது—அது, மூன்று தீவிரமான வழிகளில் செயல் படுகிறது.

- **தடுத்தல்**

  இதன் பாக்டீரியோஸ்டாடிக் செயல், பாக்டீரியா கிருமிகள் பெருகுவதை தடுக்கிறது.

- **நிவாரணம்**

  சுகந்த மணமுள்ள ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், வியர்வையை உறிஞ்சுகிறது. இதமளித்து விரைவான நிவாரணம் தருகிறது.

- **செயல்**

  ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒப்பற்ற கொரோடாஸிடிக் செயல் உள்ளது; அது, பாதிக்கப்பட்ட சருமத்தை விரைவாக மாசு மருவற்றதாக்குகிறது.





குடும்பம் முழுவதற்குமான பாதுகாப்பு

Johnson & Johnson

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்- வேர்க்குருவிலிருந்து உங்களுக்கு சிறந்த பாதுகாப்பு.

In Trust For The People...

The entire wealth gathered by the Founder of Tata Enterprises, and his sons and successors, over almost a century of industrial pioneering is bequeathed to Tata philanthropic trusts and foundations.

The whole of that wealth is held in trust for the people and used exclusively for their benefit—scholarships for education, grants for rural welfare, contributions for medical research, support for national institutions, and donations for relief from natural disasters.


The circle is thus complete: what came from the people goes back to the people many times over.



TATA ENTERPRISES

உலா வர ஓர் உலகம்

இலக்கிய குபேரனின் சாம்ராஜ்யம்



22

1865–ஆம் ஆண்டு ஃப்ரான்ஸில் ஒரு எண்ணம் உதித்தது. அமெரிக்க சுதந்திரப் போரின் போது ஃப்ரான்ஸுக்கும் அமெரிக்காவுக்குமிடையே ஏற்பட்ட சிநேகித ஒப்பந்தத்தைக் கொண்டாடும் வகையில் ஒரு மாபெரும் சிலையை அமெரிக்க மக்களுக்குப் பரிசளிக்க வேண்டும் என்ற எண்ணம். Frederic-Auguste Bartholdi என்ற ப்ரெஞ்ச் சிற்பி தன் தாயை மாடலாகவைத்து ஒரு பிரும்மாண்ட பிளாஸ்டர்மாடல் செய்தாராம். ஐஃபில் டவரை நிர்மாணித்த ஐஃபில் இதற்கான சட்டத்தை வடித்து, 90 டன் எடையுள்ள 300 பித்தளைத் தகடுகளைக் கொண்டு சிலை சமைக்க உதவினர். இந்தச் சிலையை அங்கமங்கமாகப் பிரித்து 214 பெட்டிகளில் வைத்து நியூயார்க்கிற்கு 1885 – ஆம் ஆண்டு அனுப்பி வைத்தார்களாம்!


இந்தச் சிலைக்கு உள்வழியாக மேலே போக லிஃப்ட் இருக்கிறதாம். கிரீடம்வரை சென்று நிற்க மேடை இருக்கிறதாம். பழுதுபார்க்கும் வேலையினால் இதையெல்லாம் உணர்ந்து அனுபவிக்கமுடியாமல்போயிற்று. தூர திருஷ்டிக் கண்ணாடி வழியாகப் பார்த்த அளவே பிரமிப்பை ஊட்டிற்று. தீர்க்கமான மூக்கும் ஜீவன் ததும்பும் கண்களும் நினைவை விட்டு அகலவில்லை. அன்றைக்கு நல்ல வேளையாகப் பனியில்லாமல் வெய்யில் அடித்ததால்வெகு துல்லியமாகத் தெரிந்தது. வெயிலில் சிலை பளபளத்தது.

மன்ஹாட்டனின் நடுமையத்தில் 840 ஏக்கரா நிலப்பரப்பில் சென்ட்ரல் பார்க் என்னும் பூங்காவை நிர்மாணித்திருக்கிருர்கள். நியூயார்க் நகர வளர்ச்சியில் அமெரிக்க எழுத்தாளர்கள் மிகத்தீவிர அக்கறை கொண்டதையும் அவர்களது கருத்துக்களை மிக்க மரியாதையுடன் அரசு ஏற்றுச் செயலாற்றியதையும் நான்இந்தப்பூங்காவின் சரித்திரத்தைக்கேட்டுப் புரிந்து கொண்டேன்.

நகரம் மிக நெருக்கடியாகப் போய் விட்டது என்கிற கவலையில் பத்திரிகையாளரும் புலவருமான வில்லியம் கல்லர் பிரையண்ட், நகரத்தின் ஆரோக்கியத்திற்கு ஒரு பூங்கா அவசியம் என்கிற எண்ணத்தைத் தெரியப்படுத்தினர். அவருடன் வாஷிங்டன் இர்விங், ஜார்ஜ் பென்க்ராஃப்ட் இருவரும் சேர்ந்து அரசுடன் வாதாடி இந்த நிலப்பரப்பை (பன்னியையும் ஆட்டையும் வளர்ப்பவர்களின் சேரியாக இருந்த இடம்) வாங்கச் செய்தார்களாம்.

இயற்கையையே மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட (landscaped garden) பூங்கா இது. மனிதனின் கை பட்டது போல் செயற்கையாக இல்லாமல், இயல்பாக உருவான பிரமையை ஏற்படுத்துகிறது. இந்தப் பூங்காவில் தனியாகச் செல்வது ஆபத்து என்கிருர்கள். நிறைய கொலை, கொள்ளை நடக்கிறதாம்! இதை

✖ அமெரிக்க இரயில் நிலையம்



✖ ஏர் இந்தியாவில் சொகுசுப் பயணம்

வாஸந்தி

டூரிஸ்ட் கைடே சொல்கிறார்.

டூரிஸ்ட் கோச்சில் வீடு திரும்புகையில் வழியெல்லாம் இருந்த அற்புதக் கட்டிடங்களை (முக்கியமாக ஐக்கிய நாடுகள் சபைக் கட்டிடம்) யும் மியூஸியம்களையும் (விரல் விட்டு எண்ண முடியாதவை). வாசக சாலைகளையும் தாண்டிக் கொண்டு போகும் போது, இரண்டே நாள் தங்கலில் நான் நியூயார்க்கில் எதையும் பார்த்ததாகச் சொல்வது அபத்தம் என்று புரிந்தது. மறுநாள் இரவு விமானத்தில் நான் டில்லிக்குக் கிளம்ப வேண்டியிருந்தது.

''நீங்கள் வந்த மாதிரியே இல்லை!'' என்று மாலாவும், ரவியும் புலம்பித் தீர்த்தார்கள். ''இந்தியாவைப் பற்றின சமாசாரங்களைச் சொல்லுங்கள். இந்தியச் செய்தியே தெரியாமல் எனக்கு ரொம்ப ஏக்கமாக இருக்கிறது. கண்ணைக்கட்டி விட்டாற்போல் இருக்கிறது'' என்ற மாலாவைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. டில்லியில் ஜே.என்.யூ.வில் எம்ஃபில் படித்து உத்தியோகம் பார்த்த கெட்டிக்காரப் பெண். கொஞ்சம் கூட டாம்பீகமும் போலித்தனமும் இல்லாத நவயுகத்துப் பெண்.

''இங்கிருக்கும் லௌகிக சுகங்கள் எங்களைக் கவரவில்லை. இவர்களது வியாபார நோக்குடைய அணுகுமுறை எங்களுக்கு ஏற்றதாக இல்லை. நாங்கள் இந்தியாவுக்குத் திரும்பி விடப்போகிறோம்'' என்றாள்.

''சேலத்தில் எங்கள் வீட்டு நடுக்கூடத்தில் தரையில் உட்காருவது தான் எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் விஷயம்'' என்று சிரித்தார் ரவி.

அன்று மாலை வீட்டிற்குத் திரும்புவதற்கு முன் வீட்டிற்கு அருகிலேயே இருந்த அலெக்சாண்டர் என்ற மிகப் பெரிய டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸிற்குச் சென்றோம். அவசியமாக எனக்கு ஒரு பெட்டி வாங்க வேண்டியிருந்தது. நான் கொண்டு சென்றது பிய்ந்து போனதால். ஒவ்வொரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரும் அங்கு ஒரு குட்டி நகரம். பெட்டியையும் இன்னும் சில சின்னச்சாமான்களும் வாங்குவதற்குள் ஏற்பட்ட சோர்வை விவரிக்க முடியாது. முதுகுத் தண்டில் ஒரு நெடுநாளையக் கோளாறுடன் நான் இரண்டு மாதமாக அலைந்த அலைச்சலில் உடம்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. கடைசி நாள் நெருங்க நெருங்க ஊர் போய்ச் சேர்ந்தால் போதும் என்ற அலுப்பு ஏற்பட்டு விட்டது.

ஆனால் ஒரு ஆசையை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. நியூயார்க் பப்ளிக் லைப்ரரியைப் பார்க்கும் ஆசையும் ப்ராட்வே பகுதியில் நடக்கும் ஆர்வமும் அடக்க முடியாததாக இருந்தது.

மறுநாள் காலை நானும் மாலாவும் ஸப்வே ரயில்களில் பயணித்து 5-ம் அவென்யூவில் இருக்கும் வாசக சாலையை அடைந்தோம்.


நுழைவாயிலிலேயே கண்ணைக் கவர்வது சலவைக் கல்லால் ஆன இருசிங்கங்கள். ரெனைஸான்ஸ் மரபு பாணியில் கட்டப்பட்டிருக்கும் இந்தக் கட்டிடத்தின் வாயிலைக் காக்கும் சிங்கங்கள். 'பொறுமை' 'தீரம்' என்று அழைக்கிறார்கள். இந்த வாசக சாலைக்குள் நுழைவதற்கு முன் அதைப் பற்றின புள்ளி விவரங்கள் படித்தே எனக்குத் தலையைச் சுற்றிற்று.

இந்த வாசக சாலைக்கு நியூயார்க் முழுவதிலும் 81 கிளைகள் இருக்கின்றன. - ஒவ்வொரு கிளையும் ஒரு பிரத்தியேகத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது (உ-ம்) டோனெல் லைப்ரரி என்பது வெறும் குழந்தைகள் இலக்கியத்துக்காக - 80 உலக பாஷைகளின் குழந்தை இலக்கியம் இதில் இருக்கிறதாம்.

பப்ளிக் லைப்ரரியின் ஆராய்ச்சிப் பகுதியிலும், நகரத்தின் வேறு பாகங்களில் இருக்கும் அதன் நான்கு கிளைகளிலும் மொத்தம் 8,500,000 புத்தகங்கள், 14,000,000-க்கு மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகள் வரை படங்கள், ஃபோனோகிராப் ரெக்கார்டுகள், டேப்புக்கள், பிரிண்டுகள் இருக்கின்றன...

இலக்கிய குபேரனின் சாம்ராஜ்யத்துக்கு வந்தாற் போல் என்னுள் பிரமிப்பு ஏற்பட்டது. மனிதனின் உலகியல் வாழ்வுக்கு வேண்டிய எல்லா விஷயங்களுக்கும் மதிப்பு கொடுக்கும் சமூகம் இது என்கிற மரியாதை உடனடியாகத் தோன்றிற்று.

இந்தியாவில் உட்கார்ந்து கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத விஸ்தீரணமும் உழைப்பும், சிரத்தையும், சின்ன விஷயத்துக்கும் கொடுக்கும் கவனமும் மிக நவீன முறைகளும் பளிச்சிடுகின்றன இங்கு.



முதல் நிலையில் இருக்கும் சலவைக்கல் நுழைவுக்கூடம் கலை அழகோடு நெஞ்சை அள்ளுகிறது. இங்கு உலகத்து மிக சுவாரஸ்யமான புத்தகங்களும் பிரசித்தி பெற்ற பத்திரங்களும் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. கிரிஸ்டஃபர் கொலம்பஸ் கைப்பட எழுதியகடிதமும், ஜெஃபர்ஸனின் கையெழுத்தில் அமெரிக்க சுதந்திரப் பிரகடன நகலும்இருக்கின்றன. மிக மிகச்சிறிய எழுத்தில். (ஒரு பூதக் கண்ணாடி வைத்திருக்கிறார்கள் படிக்க) கலிலியோவின் புத்தகம்... எலிவேட்டரில் ஏறி மூன்றாவது நிலைக்குச் சென்று சுவர் பூராவும் இருந்த அமெரிக்க நகர பிரின்டுகளைப் பார்த்தோம். ஒரு பெரிய கூடம் முழுவதும் மரத்தாலும், சுவர் சித்திரங்களாலும் வடிவங்களைஅமைத்துப்புத்தகத்தின் சரித்திரத்தை வரைந்திருந்தனர். புதிய டிக்ஷனரிக்கான பட்டியலுக்கென்று தனிப் பகுதி. பகுதி என்றால் ஒரு அறை இல்லை. ஒரு நிலை! வாசக சாலையில் படிக்கும் அறைகள் மட்டும் அரை ஏக்கரா விஸ்தீரணமுடையவை!

இந்தப் பிரும்மாண்ட நூலகத்தின் ஆராய்ச்சிப் பிரிவுகளுக்குத் தனியார் துறை பண ஆதரவு தருவதாக அறிந்தேன். எது எப்படியானாலும் வாசக சாலைக்குச் செலவழிப்பது மிக அவசியமான செலவு என்பதையும் இது தேசத்தின் செல்வம் என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

நமது வாசக சாலைகளைப் பற்றி சிகாகோவில் திரு. ராமானுஜம் குறைப்பட்டுக் கொண்டது என் நினைவுக்கு வந்தது. ''நாங்கள் அவர் வந்திருந்த போதுஎவ்வளவு உதவி செய்தோம். அவர் அப்படி வருத்தப்பட்டாரா?'' என்று இங்கு சாஹித்திய அகாடமி அன்பர்கள் துயரப்பட்டார்கள். திரு. ராமானுஜம்நிச்சயம் அகாதமிக்காரர்களைத்தனிப்பட்ட முறையில் குறை கூறவில்லை. (அப்படிப் பொருள்படும்படி நான் எழுதியிருந்தால் அது என் தவறு.) நம் தேசத்தில் வாசக சாலை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காதது அவமானகரமான விஷயம் என்கிற ஆதங்கம் அவருக்கு. தேசிய நிலையில் இருக்கும் அகாதமி லைப்ரரியில் எதிர்பார்க்கக் கூடிய அளவு புத்தகங்கள் இல்லை என்பது அவரது வாதம். அமெரிக்காவில் பிரும்மாண்ட வாசக சாலைகளைப் பார்த்துப் பழக்கப்பட்ட ஒருவருக்கு ஏமாற்றமேற்படுவது இயற்கை என்று நான் நினைத்தேன்.

கல்விக்கு முக்கியத்துவமே கொடுக்காத திட்டம் நம்முடையது. மொத்த திட்டத்தில் கல்விக்காக 1.46 சதவிகிதமே ஒதுக்கப்பட்டிருப்பது வெட்கக் கேடு. கல்விக்குக் கணிசமான தொகை ஒதுக்காத நிலையில் வாசக சாலைகளுக்குப் பெரிய அளவில் செலவழிப்பது எப்படி சாத்தியம்? அரசின் அங்கமான அகாதமியின் வாசக சாலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ஒரு லட்சத்திற்குட்பட்டது. மற்றஉபரி செலவுகள் எல்லாம் போக இருபத்திரண்டு பாஷை இலக்கியங்களைச் சேகரிக்க அதில் எவ்வளவு மிஞ்சும் என்று நினைத்து எனக்குத் துக்கமேற்பட்டது. இந்த சொற்பப் பணத்திலேயே முயன்ற அளவு நல்ல புத்தகங்கள் சேகரிக்கப்பட்டிருப்பது மிக மெச்ச வேண்டிய விஷயம்என்று தோன்றிற்று.

நாம் ஏழை நாடு என்று எல்லாவற்றிற்கும் சமாதானம் சொல்வது நமக்குச் சௌகர்யமாகப் போய்விட்டது. ஒரு ஏஷியாட்டுக்கும் NAM—முக்கும்காமன்வெல்த் கான்ஃபரன்ஸுக்கும் கோடிக்கணக்கில் பெரிய மனுஷத்தனமாய்ச் செலவழிக்கவும் வீணாக்கவும் துணியும் நாம், கல்விக்கு இன்று செலவழிப்பது எதிர்காலத்துக்கு மூலதனம் என்று எண்ணத் துணியாதது எத்தனை கேவலம்! New york Public Libraryயை நோட்டம் பார்த்த திருப்தியில் நேரம் போனதே தெரியவில்லை. வீட்டிற்குச் சென்று புதிய பெட்டியில் சாமானை அடுக்கும் வேலை பாக்கியிருந்தது. ப்ராட்வே நாடகங்களைப் பார்க்கவே இன்னொருமுறை அமெரிக்காவுக்குவரவேண்டும் என்ற ஏக்கத்துடன் நாடகக் கொட்டகைகளில் பளிச்சென்று தெரிந்த பானர்களை மட்டும் கண்ணால் பார்த்துவிட்டு மாலாவுடன் வீடு திரும்பினேன்.

மூட்டை கட்டி விமான நிலையத்துக்குக் கிளம்பத்தான் நேரமிருந்தது. அவசரத்தில் என்னுடைய மூன்று சாமான்களிலும் என் விலாசத்தை ஒட்ட மறந்து போனேன். Baggage—ஜில் இரண்டு சாமான்களைத் தான்போட முடியும். மூன்றாவதைக் கையில் தூக்க வேண்டும். என்னுடைய முதுகுக் கோளாறினால் நான் சின்ன பாரத்தைக் கூடத் தூக்க முடியாத நிலையில் இருந்தேன். 'மூன்றாவதையும் Baggage—ஜுடன் போட்டால் 150 டாலர் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அது Uninsured Bag காக என் டிக்கெட்டுடன் சேராததாக டில்லிக்கு அனுப்பப்படும். இந்த ரிஸ்க்கை ஏற்கத் தயாராக இருந்தால் போடுங்கள்' என்றார் அங்கிருந்தஅமெரிக்கர்.ரவி ரொம்பத் தைரியமாக, ''போட்டு விடுங்கள், நிச்சயமாய்த் தொலைந்து போகாது. எவ்வளவு ரூபாய் பெறுமான சாமான் இருக்கும் அதில்?'' என்றார்.

''கிட்டத்தட்ட எண்ணூறு ரூபாய்'' என்றேன்.

''அவ்வளவுதானே?அதைவிட உங்கள் முதுகு முக்கியம்!'' என்றார்.

'ஈச்வரோ ரட்சது!' என்று நானும் ஒப்புக்கொண்டேன். வெறும் ஜிப். பை. பூட்டுக் கூட இல்லை. ஏர் இந்தியா பயணம். வழக்கம் போல் ராஜோபசாரம். என் பையைப் பற்றின கவலையையும் பூட்டவும் பூட்டாமல் விலாசச் சீட்டையும் ஒட்

டாமலிருந்ததையும் நான் பர்ஸரிடம் சொல்லிக் கவலைப்பட்டபோது அவர் சிரித்தார்.

''கவலையே படாதீர்கள். ஏர் இந்தியாவில் நீங்கள் பயணிக்கிறீர்கள். உங்கள் சாமான் எங்கும் போய் விடாது!'' என்றார்.

டில்லியில் கன்வேயர்பெல்டில் சாமான் வரும் வரை எனக்குக் கவலைதான். ஆனால் மூன்று சாமானும், ஜிப் பை உள்பட ஒரு பொருள் தொலையாமல்உடனடியாகக் கிடைத்தபோது நான் பட்ட சந்தோஷத்திற்கு வார்த்தையில்லை! நட்ட நடு இரவில் வந்திறங்கிய என்னை ஏதோ சந்திர மண்டலத்துக்குப் போய்த் திரும்பிய விண்வெளி வீரனை வரவேற்பது போல் குடும்பம் முழுவதும் வரவேற்க வந்திருந்தது!

ஐரோப்பிய பயணத்தை ஆரம்பித்த போது ஒரு இளம் பெண்ணின் துடிப்பும் வியப்பும் குதூகலமும் என்னுள் இருந்தன. அமெரிக்கப் பயணத்தின் முடிவில் ஒரு முதிர்ச்சி ஏற்பட்டுப்போனாற் போல் பிரமை ஏற்பட்டது.

பல கேள்விகள் மனத்தில் எழும்பிய வண்ணம் இருக்கின்றன. மேலை நாடுகளின் முன்னேற்றத்தைக் கண்ட பிறகு பிறந்த தேசத்தைப் பற்றிய கவலைகள் நிலை கொள்ளாமல் எழுகின்றன. அவர்களுக்கு இணையாக நாம் நிமிர இன்னும் எத்தனை தொலைவு போக வேண்டும் என்கிற திகைப்பு ஏற்படுகிறது. ஒளியற்ற கிராமங்களும் குடிநீரற்ற ஊர்களும் நினைவை உறுத்துகின்றன.

ஒரு முயற்சியில் கிடைக்கவே கிடைக்காத தொலைபேசி லைனை நினைத்து ஆத்திரம் ஏற்படுகிறது... ஒப்பற்ற மனித சக்தியையும், மூளைச் செல்வத்தையும் கொண்ட நாம் பின்தங்கிய நிலையில் இருக்கவேண்டுமானால் அதற்கான காரணங்கள் — நமது சுபாவமாகிப்போன பலவீனங்கள்..

ஆனாலும் —

என்னை யாராவது சுபிட்சமிக்க வெளிநாடு ஒன்றில் நிரந்தரமாகத் தங்கச் சித்தமாயிருக்கிறாயா என்று கேட்டால் மிக பலமாக ''மாட்டேன்'' என்பேன். எனது தேசத்தின் பலவீனங்களோடு போராடுவதே எனக்குத் திருப்தி தரும் விஷயம்!

(முற்றும்)

36-பீரங்கி லேன்

எழுதி முடித்துவிட்டுத் தலைப்பு வைக்கத் தலையைப் பிய்த்துக் கொள்வார்கள் எல்லோரும். மோகன் சற்று டிரேஞ்சி. எல்லா நாடகத்துக்கும் தலைப்பை முதலில் வைத்து விட்டுத்தான் நாடகத்தைப் பின்னுவார். 36 பீரங்கி லேனும் இதற்கு விதி விலக்கு அல்ல.

வழக்கமாக அவர் நாடகங்களில் வருகிற 'வசவு வசனங்க'ளான மூதேவி, முண்டம், என்ன எழவுடா இது — எல்லாம் வழக்கத்தை விட நிறையவே இருந்தாலும்; நகைச்சுவை என்று, அனர்த்தம் வருகிற ஆங்கிலப் பதங்களை சந்துரு அடிக்கடி வாரி வீசினாலும்; பல வெடிச் சிரிப்புகளை வரவழைக்கும் நகைச்சுவையும், ஒரு முழுமையான கதையம்சமும் 'பீரங்கி'யில் இருக்கின்றன.

ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் பிரமாதமாக நடிக்கிறார்கள் என்று சுருக்கமாகச் சொல்லி விட்டால் அது நியாயமாகாது. சி. ஐ. டி. சந்துருவாக சீனுவும், இச்சாமியாக பாலுவும் நடிப்பில் தனித்து நிற்கிறார்கள். டீ வி நியூஸ் வரதராஜன், கதாநாயகன் கல்யாணமாகக் கலகலப்பாக நடித்தாலும், காத்தாடியின் பாணியை (குரல் மாட்டுலேஷன் உள்பட) வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறார் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

—சாருகேசி

பீரங்கி சிரிப்பு—மாதிரிக்கு ஒன்று:

சேஷகோபாலன்: ஒருவேளை பையனுக்கு உடம்புல குறை ஏதாவது இருக்கா... செலவழிச்சு எம் பொண் தலைல கட்டப் பாக்கறீங்களா...?

சிவா: நோ... நோ... பையனுக்கு உடம்புல ஒரு குறையும் கிடையாது. சந்தேகமா இருந்தா கல்யாணராமன் சொக்காயைக் கழட்டி முதுகைப் பாருங்கோ! ஐ.எஸ்.ஐ.முத்திரை குத்தியிருக்கும்...





"அவனுக்கு ஒன்பது வயது. உலகிலேயே மிகச் சிறந்த ஆல்ரவுண்டராக வேண்டுமாம். அது நிச்சயம் நடக்கும் என்று நம்புகிறேன்."
போர்ன்விடாவின் இனிமைக் காலம்
அதுதான் போர்ன்விடா!
காட்பரிஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி.
Cadbury's Bournvita
The Tastier Food Drink
OBM/2661-TAM

கடல் விதை போன்ற உவர்நீரும், கார்ப்பரேஷன் சாக்கடையும், பொய்க்காமல் பெய்த மழை நீரும், அந்தக் குடிசைப் பகுதிக்கு அகழியாக இருந்தது. முக்கடல் சங்கமித்தது போன்ற, அந்தக் குட்டையின் நெட்டை நீரில், கால்களை அலம்பியபடி, விளிம்புத் தரையில் உட்கார்ந்திருந்த ஏழெட்டு ஆண்களும், பெண்களும், தொலைவில் ஓடிக் கொண்டிருந்த பல்லவன்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். முந்தானைச் சேலையே ஜாக்கெட்டாகும்படி, உடம்பின் மேல் பகுதியை மூடிக் கொண்டிருந்த தாயம்மா கிழவி, 'இன்னுய்யா... பிள்ளாண்டானைக் காணும்' என்று சொன்னபடியே, கூனிக் குறுகிப் போன கண்களை, மின்மினிப் பூச்சிபோல் நிமிட்டிய போது, 'அதான் தெரியல!' என்றான், டவுசர் பைக்குள் ஒரு கையையும், தோளில் துண்டு போல் கிடந்த சிவப்புக் கைக்குட்டையில், இன்னொரு கையையும் போட்டுக் கொண்டிருந்த துரை.

தாயம்மா, குதிகாலில் நின்றபடி தொலை தூரத்தைப் பார்த்த பசவம்மாவிடம் பேசப் போனவள், பேச்சை மறந்து, அவள் தோரணையில் லயித்தாள். 'தன்யா' செடி மாதிரி தத்தேறிப் பொண்ணு எப்படிக் கிறாள்... தோ... நேற்றுதான் பிறந்தாப் போல தோணுது... காலந்தான் எப்படிப் பறக்குது... அல்லாத்தையும் தோளுல... சொமந்து... உயர உயர பறக்கிற கஸ்மாலக் காலம்தான்... என்னையும்... இவளைமாதிரி

பார்க்காத சமயத்தில் பல்லவனின் ஓரத்திலிருந்து இறங்கியிருக்கிறான். கிறிஸ்துவர்களின் சவப்பெட்டிபோல் தோன்றிய 'கேனை' அலாக்காய்த் தலைசுமக்க, வலதுகை இடுக்கில், ஒரு கூடையை வைத்தபடி கம்பீரமாய் வந்து கொண்டிருந்தான். அவன் பின்னால், பொடியன் ஒருவன் இன்னொரு கூடையைச் சுமந்தபடி நடந்தான். கோவிந்தன் நெருங்க, நெருங்க, துரையும் கன்னியாவும், ஓடிப்போய், கூடையை, ஆளுக்கொரு பக்கம் பிடித்துக் கொண்டார்கள். மற்றவர்கள் எழுந்து மேட்டுப் பகுதியில் போய்க் குந்தினார்கள்.

கோவிந்தன் கேனை இறக்கி வைத்தான். தாயம்மா, கேட்டாள்.

''ஏன் நய்னு லேட்டு...?''

கோவிந்தன் பதிலளிக்கவில்லை. மரக்கேஸ் ஆணிகளை, இரும்புக் கம்பியை வைத்து நெம்பி, மேல் பகுதியைப் பிரித்தான். தலையில் கட்டியிருந்த முண்டாசைக் கழற்றி, நீளமாக்கிக் கொண்டான். பிறகு, வேர்வை பொங்கிய உடம்பை அதை வைத்துத் தடவி விட்டான். பசவம்மா வெடித்தாள்.

''ஏன் லேட்டுன்னு... ஆயா கேக்குதில்லே. சொன்னு... இன்னுவாம்...?''

''ஊத்துக் கோட்டையில இருந்து லாரி வாரத்துக்கு லேட்டு... லாரி... புறப்பட்ட இடத்துல இருந்து... கொத்தவால் சாவடிக்கு வர்றதுக்குப் பாதி நேரமும்... ஆயிட்டுது... அத்தோட கண்டக்டர் பச்

மானும் மயிலுமாய்...

சு. சமுத்திரம்

ஏழைப் பொண்ணுங்களையும் எகிறிக்கிட்டே ஓடுது...

தாயம்மா, நெடுஞ்சாலையை, நேரடியாகப் பார்த்துவிட்டு, பசவம்மாவிடம் கேட்டாள்.

''ஏன் லேட்டு... ஒனக்காவது தெரியுமாம்மே...''

''அதான்... நம்ம வேலையை.... நாமே கவனிக்கணுமுன்னு சொல்றது. எங்கேயாவது குடிச்சுட்டு நிப்பான்... நம்ம வேலையை... நாமதான் செய்திருக்கணும் போல...''

பசவம்மா, கிழவியின் காதுக்குச் சூடு போட்டாள்.

''ஆத்தா... ஒரு வேளை அது ஆக்ஸிடெண்ட்ல மாட்டியிருக்குமோ...''

பசவம்மா, பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்தபடி, என்ன செய்யலாம் என்பது போல், மற்றவர்களைப் பார்த்த போது, துரை கூவினான். ''தோ... தோ.... கோவிந்து... கோவிந்து...''

எல்லோரும் பல்லவன்களைப் பார்த்த போது, இறங்காத கோவிந்தன், அவர்கள்



சான் ரெண்டு பேரு... ஏத்த மாட்டேன் னுட்டாங்க... ஒரே ரஷ்ஷு... ஒரு சிங்கிள் டூட்டு வந்த பிறகுதான ஏத்தினுன்...''

''அப்படியா... நீ ஆக்ஸிடெண்ட்ல மாட்டிக்கினியோன்னு பாவம்... பசவம்மா.. செத்துப் பொழச்சாள்... துடியாய்த் துடிச் சாள்...''

''ஏய் ஆயா... நான் எப்போ செத் தேன்... எப்போ பொயச்சேன்... என் பொய் சொல்றே...?''

கோவிந்தன், பசவம்மாவை, பார்க்காதது போல் பார்த்தான்.


''அப்படின்னு... நானு செத்தாக் கூட அய மாட்டாளோ... காத் தால... ரெண்டு இட்லி கேட் டேன்... இல்லேன்னு மூஞ்சல அடிச்சாப் போல சொல்லிச்சு... இம்மாத்துக்கும்... நானு, இதுக் கும் சேர்ந்துச் சரக்கு வாங்கிக் கினு வாரேன். அதுக்கே ஆறு இட்லி நாஸ்தாவுக்கு தர்லாம்... இன்னுதான் நெனச்சுக்கினுள்?''

கோவிந்தன், ஆயாவிடம் முகம் சுழிக்கச் சொன்னுன்.

''இன்னு ஆயா... ஒன்னேட பேஜாரு... அது யாரு... நானு யாரு... ஏதோ... ஒங்களோட முகத்துக்கா சரக்கு வாங்கி வாரேன். அது மொகத்துக்காப் போறேன்... ஆத்தா... செத்தப்போ அயாத ஜடம் விட்டுத் தன்னு... கழுதை''

பசவம்மா, போர்க் குரலிட்டாள்.

''யோவ்...வார்த் தையை விடா தய்யா... யாருய்யா... கழிதே...?''



''நான் கவிதேயின்னு... நீ குட்டிச்சுவரு!''
''குட்டிச்சுவருன்னு மோதிக்கவேண்டியது தான்!''

எல்லாவரும் சிரித்து விட்டார்கள். பசவம்மாவால் தாங்க முடியவில்லை. ஆத்தா இருந்தால் இப்படி கேடி மாதிரி பேசுவானு... இப்படிச் சிரிப்பாங்களா... ஆத்தா பேசத் தான் விடுவானா... சிரிக்கத்தான் விடுவானா... ஆத்தா... ஆத்தா...

பசவம்மா, தனியே போய் நின்று கொண்டு, உதடுகளைக் கடித்தாள். தலையை உதறிக் கண்களில் தேங்கிய நீரை, பன்னீர் போல் தெளித்துக் கொண்டாள்

பசவம்மாவை கண்டுக்காமல், மற்றவர்கள், காரியத்தில் கண்ணானார்கள்.

எல்லோரும் பணத்தை அவனிடம் கொடுத்துவிட்டு, பங்குப் பழங்களைக் கூடைகளில் போட்டார்கள். ஏற்கெனவே பழமிருந்த கூடைகளின் வாயை பிரம்புத் தட்டைகளின்மேல், பலவித பழங்களை, கூம்பு போல அடுக்கினார்கள். பசவம்மா மட்டும், எஞ்சியிருந்த பழக் குவியலை ஏறிட்டுக் கூட நோக்காமல், பற்களைக் கடித்த படியே நின்றாள். கோவிந்தன், கத்தினான்.

''இந்தா ஒன் பயத்தை எடுக்கிறியோ... இல்லியோ... காசை எடு.''

''போய்யா... கவிதேக்கி... பயத்தைப் பொறுக்கத் தெரியாது!''

''அப்படின்னு... குட்டிச்சொவருக்குக் கண்டி... எடுக்க வருமா...''

எல்லோரும் சிரித்தார்கள். பசவம்மா, பற்களால் தையல் போட்டது போல் தோன்றிய உதடுகளைப் பிரிக்காமல் நின்றாள். உடனே ஆயா தாயம்மா, அவளின் பின்புறமாகச் சென்று, பசவம்மாவின் முதுகை, முன் கையை ஊன்றித் தள்ளி, 'பிரேக்டவுன்' ஆன பல்லவனைத் தள்ளுவது போல் தள்ளினாள். பசவம்மா, செக்கு மாடாய், ஆயாவின் கைக்குள் முதுகைக் கொடுக்காமல், முன்னாலும், பின்னாலும் நகர்ந்த போது, தாயம்மா, அவள் கைக்கூடையில், பழங்களை நிரப்பினாள். பசவம்மா, சொருகிய சுருக்குப் பையைப் பிரித்து, பணத்தை எடுத்து, துரையிடம் கொடுத்து விட்டு, கோவிந்தனிடம் கொடுக்கும்படி, மோவாயைத் தூக்கிப் போட்டுச் சைகை செய்தாள். பணத்தை

''நீ எடுத்த படம் சோக முடிவா? சந்தோஷ முடிவா?''
''சோக முடிவுதான். எந்த தியேட்டரிலும் மூணு நாளுக்குமேல் ஓடலியே.''

—கீழை. அ. கதிர்வேல்.



வாங்கிய கோவிந்தன், எண்ணிப் பார்த்தான். பிறகு, ஐம்பது பைசா, நாணயத்தை எடுத்து, துரையிடம் கொடுத்துவிட்டு, தலையை ஆட்டிச் சைகை செய்தான். கோபம், மாறாத பசவம்மா குழப்பத்தோடு கேட்டாள்.

''தொரை ...கணக்குத் தப்பான்னுகேள்!''

கோவிந்து சாட்சிக்காரனை விட்டுவிட்டு, சண்டைக்காரியிடம் நேரடியாகப் பேசினான்.

''நேத்து... வெத்துலப் பாக்குக்கும்... சிங்கிள் டீக்கும் காசு கொடுத்த இல்ல அது!''

''நீ... முந்தாநாள்... டீயும் பன்னும் கொடுத்தேல்ல...! ஒன் பிசாத்துக் காச எடுத்துக்கோ!''

''ஓ... அப்டியா... சமாச்சாரம். இனிமே காட்டு. இதைமாதிரி கதையே வேணும்... ஒன் துட்டு... ஒன் டீ... என் துட்டு... என் டீ!''

''நான் மட்டும் ஏங்கிட்டுக் கிடேனுக்கும். ஒன் வாடையே வாணுய்யா... கொத்தவால் சாவடில... எனிக்கி... பயம் வாங்கிக்கத் தெரியும்.''

''சொல்லாதே... செய்... எனிக்கும்... கமை மிச்சம்... தானம் தந்த மாட்டை.... தடவிப் பாக்கிற ஜன்மங்க... மவராசியா போயிக்கோ.''

மாலை, இரவாகியது.

பசவம்மாவுக்கு, ஆயா தாயம்மாவும், 'அதுவும்' பேசுவது கேட்டது.

''சோறு ஆக்கலியா கோவிந்து?''

''கிருஷ்ணாயில் இல்லே!''

''அட கடவுளே... என் கிட்டயும் இல்லியே...''

''ஒன்கிட்டே யார் கேட்டா.''

''கிருஷ்ணாயில் இல்லேன்னு பட்டினி இருக்கப் போறியா...?''

''ஆமாம்... பசிக்கல...''

''இப்போ... பசிக்காட்டியும்... அப்புறம் வவுறு பேஜார் பண்ணும்... ஊர்ல இருந்து.. ஆத்தாவைக் கூட்டிட்டு வாரதுதானே.... எம்மாம் நாளு... இப்டிக் கஷ்டப்படப் போறே.''

''கவலைப்படாதே ஆயா... அம்மா எனக்குப் பொண்ணுப் பார்த்துட்டாள்...''

பசவம்மாவுக்கு அதிர்ச்சி.

முட்டிக்கால்களில் கொதிநீரைத் தேய்த்துக் கொண்டிருந்த பசவம்மா, சத்தம் கேட்டு, திமிர்ந்தாள். தாயம்மா கெய்விதான்...

''கோவிந்துக்கு கிருஷ்ணாயில் இல்லியாம்... கொடேம்மா...''

''அதுக்கு வாயிருக்கு... நீ அப்பாலே போ...''

ஆயா, சிரிப்பும், சிணுங்கலுமாய் வயசுப் பெண் மாதிரி நடந்தாள்.

கோவிந்தன், நகரப் போனான். பசவம்மா, வேண்டா வெறுப்பாய்ப் பேசுவது போல் பேசினாள்.

''இந்தாய்யா... கிருஷ்ணாயில், வாங்கித் தொலை... இல்லேன்னு... என்னால... ஆயா வவுத்துல... அடி வியும்... நமக்கு எதுக்கு பொல்லாப்பு...''

கிருஷ்ணாயில் சீசாவை வாங்கிக் கொண்ட கோவிந்தன், அவளைக் கேட்டான்.

''நீ... சமையல்... பண்ணலியா...?''

''எந்தக் கயிதே எப்படிப் போனால் ஒனக்கென்னய்யா...''

''நான் கயிதேன்னது...பெர்சாயிட்டுது... காத்தால...நீ இட்லி தராதது சிறிசாயிட்டுது நல்லா இருக்கு நய்னு... நாயம்...''

''நானு... நீ...கேட்டு... என்னிக்காவது. தராமல்கிறேனு...?''

''அதுதான் புரியல...''

''நீ எய்யா... குடிச்கட்டு வந்தே...?''

''துரை கூடத்தான் குடிச்சிட்டு வந்தான்... இட்லி இட்லியாய் கொடுத்தியா.''

''துரையும் நீயும் ஒண்ணு...?''

''என்னமோ... நெனச்சிக்கினே... துரை. என்னைவிட.... எதுல உசத்தி...?''

''ஒன்னோட பேஜாருய்யா... எனிக்கி.... துரையும்... நீயும் ஒண்ணு...?''

''அப்போ நான் மட்டமா...?''

''நீ ஜாஸ்"ய்யா... சரியானவெட்டன்...''

''இந்தாம்மே... ஒன் கிருஷ்ணாயில்... ஒன் வாடையே வாணும்...!''

கோவிந்தன், முகம் சிவக்கப் பல்லைக் கடித்தான். பாசவம்மாவோ, பல் தெரியச் சிரித்தாள். அவள் சிரிக்கச் சிரிக்க, அவன் கோபம் அதிகமாகியது.

''நானு... ஒரு கணக்கு போடுறேன்.... செய்நீங்களா... பசவம்... ஆழாக்கு அரிசிக்கு எவ்வளவு கிருஷ்ணாயில் ஆகும்...?'' என்று கிழவி கேட்டாள், நடுவில் புகுந்து.

''அரை லிட்டர்.''

''ரெண்டு ஆழாக்கு அரிசிக்கு சொல்லுமே...''

''அதே அரை லிட்டர்...''

''இந்தாப்பா.:.. கோவிந்து... சொல்லு நீ இப்போ... நாலு கத்தரிக்காய் பொரிக்க எம்மாம் கடலெண்ணெய் வேணும்?''

''ரெண்டு கரண்டி...''

''எட்டுக் கத்தரிக்காய் பொறிக்கறதுக்கு.. சொல்லு நய்னு...!''

''மூணு கரண்டி...''

''மிளகாய்த் தூள்? நாலு கத்தரிக்காய்க்கு...?''

''ரெண்டு கரண்டி...''



''எட்டு கத்தரிக்காய்க்கு...''

''அதே கரண்டி...'

''இப்போ... சொல்லுங்கோ... நீங்க... ரெண்டு பேரும் கூட்டாஞ்சோறு பொங்கினால் .. எண்ணெய் மிச்சம்... கிருஷ்ணாயில் மிச்சம்! தனித்தனியாய் சமைக்கிறதால... எவ்வளவு வேஸ்ட்டு பாருங்கோ... அப்பால. ஒங்க இஷ்டம்...''

தாயம்மா, நகர்ந்து விட்டாள். பசவம்மா, கோவிந்தனை 'ஒருமாதிரி' சாய்வாகப் பார்த்தாள். அவன், ஆயா போடாத கணக்கைப் போடப் போனான்.

''ஆயா... முக்கியமான கணக்கைக் கோட்டை விட்டுட்டாள்... எதுன்னுகேட்க மாட்டியா... சரி... நானு சொல்றேன்... உன் குடிசைக்கு வாடகை எவ்வளவு?''

''முப்பது ரூபாய்... எதுக்குக் கேக்குறே...?''

''என் குடிசைக்கும் முப்பது... ரெண்டும் ஒண்ணாயிட்டால், முப்பது ரூபாய் லாபம்... பாவம்... வீடு கிடைக்காம அல்லாடுற குடும்பத்துக்கு ஒரு குட்ச கெடைச்சாப் போலவும் ஆகும்... என்ன சொல்றே பசவம்மா...?''

''என்கிட்டே ஏன்யா கேட்கிறே... ஒன் ஆத்தா காட்டுறவளோட கழுத்துல தாலி போடப் போறியே... அந்த மூதேவிகிட்டே, அந்தக் கேப்மாரி கிட்டே.... அந்த லோலாயி கிட்டே போய்க் கேளுய்யா... ஒனிக்கும்... எனிக்கும் பேச்சில்லே... போயும் போயும் ஒனிக்காவ... நான் துடிச்சேன் பாரு...காத்தால... ஆக்ஸிடெண்ட்ல மாட்டியிருப்பியோன்னு... வெம்பிப் போன சாத்துக்குடி மாதிரி துடிச்சேன் பாரு... எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும்... போய்யா.. இப்பவே ஊர்க்கு போய்... ஒனிக்கி சம்சாரமாய் ஆகப்போறவளண்ட போய்யா...''

''நான் போட்ட குண்டு நல்லாத்தான் வெடிச்சிருக்கு... ஏன்மே... அழுவுறே...நீ... அழுதுகிட்டு அன்பு காட்டுறே... நான் சிரிச்சிக்கினு காட்டுறேன்... அவ்வளவுதான்... அழாத பசவம்மா... இப்போ ஒண்ணு செய்யலாம்... நாம எண்ணெய வேஸ்ட் பண்ணப்படாது... மசாலாவ மிச்சம்பண்ணணும். என்கிட்டே அரிசி இருக்கு... ஒன் கிட்டே கிருஷ்ணாயில் இருக்கு... ஒன் வீட்ல சமைக்கணுமா... என் வீட்லயா...?''

''போல்... எட்டன்... இன்னுமாய்யா... ஒன்கிட்டே.... என்கிட்டே.... பேச்சு... மாரியாத்தால... மன்னல நெனச்சுக்கினு... ஒன் குட்சல்ல... இருக்கிறதெல்லாம்.... எடுத்துக்கினு வாய்யா... சாவியை... ஒனர் கிட்டே.... நாளக்கி ஒப்படைச்சுடுய்யா... அட, கையி விடுய்யா...முகத்தை விடுய்யா... வாடெ.... வா....''

குடிசைக்கு வெளியே, 'ஒட்டுப் பார்த்துக்' கொண்டிருந்த தாயம்மா கிழவி, மேற்கொண்டு பார்க்கக் கூசி, கண்களை மூடிக் கொண்டாள். சிறிது நேரத்தில், கோவிந்தன் தன் குடிசையைக் காலி செய்யப்போனான். எந்தவித சாஸ்திர, சம்பிரதாய பந்தாக்களும் இல்லாமல், ஒரு குடிசை காலியானது. இன்னொரு குடிசை 'குடித்தனம்' ஆகியது.

"நானுந்தான் பாக்கறேன். அது என்ன உங்கம்மாவுக்கு அப்படி ஒரு அழுத்தம்! நீங்களும் அம்மாவுக்கு ஏத்த பிள்ளைதான்! உங்க அம்மா வெளிவான்னு இடக்க வேண்டிய காலத்துலே நம்ப உயிரை எடுத்துண்டு... சே! இதெல்லாம் என் தலைவிதி!''

ஆபிஸிலிருந்து வந்து வீட்டுக்குள் நுழைந்தவனை வரவேற்ற விதமே கூறியது இன்று அம்மாவுக்கும் மனைவி நளினாவுக்கும் சண்டை என்று... ஏதோ... நாட்டில் லஞ்சம், ஊழல் போல இதுவும் இப்போதெல்லாம் வீட்டில் சர்வ சகஜமாகிவிட்டது. நளினியோ வாயைத் திறந்தால் 'லள்'ளென்று பிடித்துக் கொள்ளும் வர்க்கம்! வாயைத் திறக்காமலிருந்தாலோ ''அம்மாவுக்கேத்த பிள்ளை'' என்று அர்ச்சனை... அம்மா... அவள்தான் எப்படியிருந்தவள்... வாயில் வெற்றிலைச் சிவப்பும்... குறுகுறுத்த கண்களும்.... வைர மூக்குத்தி மின்னச் சிவந்த உதடுமாய்ச் சிரித்தபடி வீட்டில் வளைய வந்து கொண்டிருந்தவள் அப்பா செத்தபின் தான் எப்படி மாறிப் போய் விட்டாள்!....

''ப்பா... ப்பா... என்று வாங்கியாந்தே! பீப்பீ... பொம்மைதா!'' என்று தன் தலையைப் பிடித்து இழுத்த சின்னப் பெண் விமலியைப் பார்த்த போது பிரம்மாவின் விஷமம் புரிந்தது. அவன் அம்மாவைப்பண்ணின அச்சில் இவளையும் அழுத்திப் பண்ணினாற்போன்ற அதே சிரிப்பு. குறுகுறுக்கும் கண்கள்... அதனால் அம்மாவுக்குத் தன் பேத்தி மேல் ரொம்பப் பிரியம்.

இன்று என்னவோ மனசு பழசையெல்லாம் மல்லிப்பூ மணத்தை முகர்ந்து பார்ப்பது போல் நினைக்கப் பார்க்கத் தவிக்குது...

மனைவி நீட்டிய காப்பியைக் குடித்தவன் வேகமாய் மாடிக்கு வந்தான்!

லேசாய் இருள் கவியும் அந்த வேளையில் குனிந்து பார்த்த நட்சத்திரங்களைக் கண்களை விரித்து ரசித்தான்! இப்படித்தானே அம்மா கூட சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் சந்தோஷப்படுவாள்! இன்று கையை - காலை ஒடித்தாற் போல் தாழ்வாரத்தில் கனவுகளைச் சேமித்து..சேமித்து.. வைத்துக் கொண்டிருக்கிறாள். ஒரு

நேசம் மரிப்பதில்லை...!

கே. மீராபாய்



வேளை அவளும் நம்மைப் போலத்தானோ வெளியே சொல்லத் தெரியாமல் உள்ளுக்குள்ளேயே அழும் குழந்தையைப் போல...

'கைநிறைய சம்பளமும், மனசு நிறைய சந்தோஷமுமாய் இருந்தவனை அம்மாதான் சொன்னாள், ''கல்யாணம்னு ஒண்ணைப் பண்ணிக்கோடா...'' என்று. அப்பவே அவ

னுக்குத் தெரியாமற் போயிற்று. வயிற்று வலிக்கு வத்தக் குழம்பு சாப்பிட்ட பைத்தியக் காரத் தனத்தைப் பற்றி!



வீடு நிறைய சாமானும், கட்டிலும்மெத்தையும் கொண்டு வந்த நளினி மனசை மட்டும் மறந்து விட்டாள்! சுபாவத்திலே அதிர்ந்து பேசாத அம்மா அதிகாரம் தூள் பறக்கிறதைப் பார்த்தவுடன் அடங்கிப்போய் விட்டாள்! ''ஆமா... அது என்ன குடி முழுகிப் போனாப்பலே கன்னத்திலே கையைச் சுக்கிட்டு... நான் நேத்தே சொன்னேனே அந்த 'கைத்தறி கண் காட்சி'க்குப் போகணும்னு. உங்களுக்கென்ன உலகமே மறந்து போயிடும்... ம்... நான் எங்க வீட்லே எது சொன்னாலும் சரியா அந்த நேரத்துலே கார் வந்து வாசல்லே நிற்கும்...ம்... என் தலைவிதி!''

மனத்துள் அவசரமாய் ஒரு கோபம் எட்டிப் பார்த்தது. இந்த வீட்டில் கொஞ்ச நேரம் யோசிக்கக் கூட ஓய்வு இல்லாமல்... யாருக்காக நான் ஓடி... ஓடி... சம்பாதிக்கறேன்...! கனவுகளையெல்லாம் குழித் தோண்டிப் புதைத்து விட்டு அதோ தாழ்வாரத்திலே உட்கார்ந்து கொண்டு இருக்காளே அந்த அம்மாவே தேவலையோ...!

அலுப்பாய்த் தோன்ற நிதானமாய்ச் சொல்கிறான்...:

''நளினிம்மா... எனக்கு மனசு சரியில்லே...! நாளைக்குப் போகலாமே ப்ளீஸ்.. புரிஞ்சுக்கோம்மா...!''

அவன் பதில் ஏற்படுத்தப் போகும் பாதிப்பைப் பார்க்க நிமிருமுன் பதில் நெருப்புத் துண்டமாய் விழுகின்றது!

''பிடிக்கலேன்னு நேரடியாச் சொல்லிட றது! அதுக்குக் கூடவா அம்மா பேச்சு கேட்டு ஆடணும்?''

உருத்திராட்ச மாலையை உருட்டிக் கொண்டிருந்த அந்த வயோதிக விரல்கள் ஒரு நிமிடம் சலனமற்று நின்றன! வார்த்தைகளின் பொய் அவளைச் சுட்டிருக்கவேண்டும்! மனசு தாள முடியாத பொய்! இதற்குத் தானு இத்தனை வருடம் கழித்துத் துணைக்காகக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்! இப்படிப்பட்ட துணை ஒன்று இருப்பதைவிட இல்லாமலேயே இருப்பது நல்லது தான்! சின்ன வயதில் அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு நட்சத்திரங்களை எண்ணிய சுதந்திரம் இல்லை இப்போது....

அம்மா!... உன் மடியிலே ஒரு நிமிஷம் படுத்துச் சுகமாய்க் கண்ணை விரிக்க நட்சத்திரங்களை எண்ணணும் போல இருக்கும்மா! உலகத்திலுள்ள எல்லா அன்பையும், நேசத்தையும் என் மேல் பூப்பூவாய்க் கொட்டி வளர்த்தாயே...! நீயா இப்ப வாயடைத்துப் போய் இப்படி ஊமையாய் உட்கார்ந்துண்டு இருக்கிறே...! எனக்குத் தெரியும்... உனக்குக் கூட உன் பிள்ளையைத் தொட்டுப் பார்க்கணுமுன்னு ஆசை இருக்கும்!

கண்களிலிருந்து 'கரகர'வென்று வழிந்த நீர் கன்னத்தில் கோடாய் வரைய அவன் அப்படியே தூங்கிப் போய் விட்டான்.

விடிகாலையில் உடம்பைத் துளைக்கும் குளிர் திறந்திருந்த ஜன்னல் வழியாய்த் திருட்டுத் தனமாய் எட்டிப்பார்த்தது. கண் விழித்த போது அவன் நினைவுகள் திரும்பவும் பழையபடி கனத்துப் போக...

சமையலறையில் சாமான்களை உருட்டிக் கொண்டிருந்த நளினியின் மேல் காரணமில்லாமல் ஒரு கோபம் வெறுப்பாய் மாறி அவனைக் கஷ்டப்படுத்தியது.

எழுந்து முகங்கழுவிக் கொண்டு காப்பி குடித்தபோது அந்தச் சூடு குளிருக்கு இதமாய்... ஏன் எல்லாவற்றிற்குமே இதமாய்த் தான் இருந்தது! ஏதோ யோசனையில் இருந்தவனுக்குக் கல்லில் துணியை அடிப்பது போன்ற 'தொப்'பென்ற சத்தம் விழிப்பைத் தரத் திடுக்கிட்டான்.

''சனியனே! எத்தனை தடவை சொல்றது அவகிட்டே போகாதேன்னு! சதா இருமிக் கிட்டே இருக்கறவகிட்டே போய்க் கொஞ்சறியே... உடம்புக்கு ஏதாவது வந்தா யாரு அனுபவிப்பா! போவியா...? இனிமே பாட்டி கிட்டே போவியா?'' என்று சொல்லிக் கொண்டே, 'பளீர், பளீர்' என்று அடித்த அடியில் குழந்தை தாள முடியாமல் ''பாட்டிதானேம்மா கூப்பிட்டா.... நான் இனிமே போக மாட்டேன்...'' என்று கதறிய குரல் பிசிறு பிசிறாய்க் கேட்டது!

''ஏய்... நளினி! என் குழந்தையை இப்படிக் கொல்றே! போதும், நிறுத்து!''— அவன் குரல் கம்பீரமாய் ஆரம்பித்துக் கம்மிப் போய் மிருதுவாய் ஒலித்தது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வழங்கும்

தமிழ்ப் புத்தாண்டு சிறப்புக் குலுக்கல் 20-4-84


சிறப்பு முதல் பரிசு

ரூ. 10 லட்சம்

3 சிறப்பு இரண்டாவது பரிசுகள்

ரூ. 1 லட்சம் வீதம்

மற்றும்
பல்லாயிரக்கணக்கான
பரிசுகள்



இன்றே பரிசுச் சீட்டுகளை
வாங்கி பல லட்சங்களைப்
பெற்றிடுவீர் !!

DIPR-217 84-EP

சீட்டின் விலை
ரூ 2 (இரண்டு
மட்டும்) (வரிகள் தனி)

ஆணையர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம்.
அரசினர் தோட்டம், சென்னை-600 002.



ஒருத்தி: குடித்தனத்துக்கு வேண்டிய அண்டாவிலிருந்து, டீஸ்பூன் வரை வைச்சும் அந்தச் சம்பந்தி அம்மா ஏன் அப்படி சத்தம் போடறா?

மற்றவள்: அதுவா....? பால் கவர் வெட்டக் கத்தரிக்கோல் வைக்கவில்லை யாம். அதற்குத்தான் அந்தக் குதி குதிக்கிறாள்!

—ஸ்ரீவித்யா,
பி. எஸ்ஸி, முதலாமாண்டு,
மீனாட்சி கல்லூரி,
கோடம்பாக்கம், சென்னை—24.

ஓ... அம்மா! உனக்குக் கூட இத்தனை நாட்களாய் இப்படி ஒரு ரகசியமான ஆசையா...? பனித்துளி போன்ற இந்த அன்பின் ஜில்லிப்பு எப்பவுமே இப்படித் தான் மனத்திலே நிற்குமோ....?

அவன் சட்டென்று தீர்க்கமான பார்வை யுடன் அம்மாவிடம் செல்கிறான். அந்த வயோதிகத்தால் சுருங்கிப் போய்விட்ட கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள அவள் அவனைத் தன் தோளில் சாத்திக் கொள்கிறாள். தன் மனப்பளுவெல்லாம் கரைய... அம்மாவின் 'மெத்'தென்ற மடி யில் முகம் புதைத்து அழத் தொடங்கும் போது உலகமே இன்பமாய்த் தோன்ற.... எங்கோ மேலே... மேலே மிதக்க வேண்டும் போல் தோன்றுகிறது. தினமும் தொடுகின்ற தன் மனைவியின் ஸ்பரிசத்திலும் ஆசையாய்த் தொடுகின்ற... ஒவ்வொரு நரம்பிலும் பாசம் ஊடுருவச் செய்யும் இவளின் ஸ்பரி சத்திலும் எத்தனை வேறுபாடு!


அன்பு என்பது கட்டாய... இறுக்கமான உறவில் இல்லை. எப்போதேனும் மனசை நெகிழ்த்தி விடுகின்ற இந்த நேரத்தில்தான் புரிகிறது! அவன் அந்த நிமிடங்களை வீணாக் காமல் அம்மாவின் மடியில் ஒரு குழந்தை யைப் போல முகம் புதைத்து மெல்ல... மெல்ல... அழுகின்றான்.

தாழ்வாரத்திலிருந்து அம்மா, ''டேய்... உன்னைத் தான் ஆசையாத் தொட முடிய லேன்னாலும் குழந்தையைக் கூடவா தொடக் கூடாது'' என்று விசும்புகிறாள்.

—கே. மீராபாய்,
பி. காம், முதலாண்டு.
வைஷ்ணவக் கல்லூரி (பெண்கள்).
சென்னை—44.



✕ நரேந்திரநாத் நாயர்



✕ சதிஷ்குமார்

சென்னையில் இப்போது நடந்துவரும் தேசிய கால்பந்தாட்டப் போட்டியில் எதிர்பாராத திருப்பம் ஏதும் ஏற்பட்டாலொழிய சந்தோஷ் கோப்பையைப் பெற்று ஆனந்த மடையப்போகும் குழு அநேகமாய் மேற்கு வங்கமாகத்தான் இருக்கும். அது எவ்வாறாயினும் கால் பந்தாட்டத்துக்காகத் தலையைக் கொடுக்கவும் தயாராயிருக்கும் நாடளாவிய வீரர்கள் சிலரைப்பற்றித் தெரிந்துகொள்வோமா?

முரளிதரன்:

கர்நாடக அணியின் தலைவர். ரைட் விங் பேக் நிலையில் ஆடுபவர். 1980-ல் ஜூனியர்களுக்கான தேசிய கால்பந்தாட்டப் போட்டியில் பங்கு கொண்டு தமது அணி வெற்றி பெறக் கண்டு மகிழ்ந்தவர். சிங்கப்பூர் மலேஷியாவெல்லாம் சென்று ஆடித் தூள் கிளப்பியிருக்கிறார்.

நரேந்திரநாத் நாயர்:

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த இவர் கடந்த ஆறு ஆண்டுகளில் விடுவிடுவென்று ஆட்டத்தில் மிக உயர்ந்த நிலைக்கு வந்து விட்டவர். இந்திய தேசியக் குழுவில் இடம் பெற்று உள்நாட்டிலும் பல வெளிநாடுகளிலும் விளையாடியவர். இரண்டு ஆண்டுகளுக்கு முன் பள்ளிக்கூடக் கால்பந்தாட்டக் குழு ஒன்றுடன் ஸ்ரீநகர் சென்றுகொண்டிருக்கும் பொழுது பஸ் விபத்துக்குள்ளாக இவர் காலில் பலமான அடி பட்டது. ஆனால் அதிருஷ்டவசமாக கால் நன்றாகக் குணமாகி இன்று சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்வது முன்னேறியின் ஆசி என்கிறார். அயராது விடா முயற்சியும் காரணம் என்கின்றனர் அவரை அறிந்தவர்கள்.

✕ முரளிதரன்



சதிஷ்குமார்:

கால் பந்தை உதைக்க ஆரம்பித்ததே ஐந்தாண்டுகளுக்கு முன்பு தான். ஹிமாசலப் பிரதேச அணியில் இவர் தான் கடைக்குட்டி. பி. ஸி. ராய் கோப்பை, ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் ஆகியவற்றில் கலந்து கொண்டு நிபுணர்களின் கவனத்தை ஈர்த்துள்ள இவருக்குச் சென்னையைப் பொறுத்தமட்டில் மிகவும் பிடித்தமான விஷயம்: இட்டிலி, சாம்பார்.

மீண்டு பகமதாரே:

அஸ்ஸாம் போலீஸில் இவர் ஹவில்தார். இவருடைய மூத்த சகோதரரும், கால் பந்தாட்ட வீரர். 'அவர்தான் என்னை ஊக்குவித்தவர்' என்கிறார். மஹமடன் ஸ்போர்டிங் கிளப்பை எதிர்த்து விளையாடித் தமது அணி வெற்றி பெற்றதைப் பெரிய சாதனையாகக் கருதும் இவர், மாநில அளவில் அந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் பரிசையும் பெற்றார். 'அடாடா! இந்த நேரு ஸ்டேடியம்தான் எத்தனை வசதியாக, அழகாக இருக்கிறது?' என்று அடிக்கடி வியக்கிறார்.

பர்மீந்தர் சிங்:

எட்டு ஆண்டுகளாக இந்திய தேசிய கால் பந்தாட்டக் குழுவில் தொடர்ந்து இடம் பெற்று வரும் பஞ்சாபியர். ஆசிய கால் பந்தாட்ட நட்சத்திரங்கள் என்று ஒரு குழு உருவாக்கப்பட்ட போது பர்மீந்தர் சிங்கை ஒதுக்க முடியவில்லை. சிறப்பிடம் தந்தார்கள். நமது பல ஜனாதிபதிகளிடம் பரிசும் பாராட்டும் பெறுவது இவருக்குத் தண்ணீர்ப் பட்ட பாடு.


✕ மீண்டு பகமதாரே







✕ பரமீந்தர் சிங்



✕ நம்பையா

தாமஸ் செபாஸ்டியன்:

இருபத்திரண்டு வயதினர். கேரள அணியில் வலது எக்ஸ்ட்ரீம் ஆட்டக்காரர். எல்லா எக்ஸ்ட்ரீம் நிலைகளிலும் விளையாடத் தகுதி வாய்ந்தவர். நேபாளுக்குச் சென்று இந்திய அணியில் விளையாடி மன்னர் கையால் பரிசும் வாயால் பாராட்டும் பெற்றதைப் பெருமையாகக் கருதுகிறார்.

நம்பையா:

'கால் பந்துக்குப் பதில் அதே அளவினதான ஒரு காயை உதைத்துத் தான் விளையாடிப் பயிற்சி செய்வோம்' என்கிறார். பந்து வாங்கக் காசில்லை என்றாலும் கால் பந்தாட்டத்தில் ஆர்வம் குறைவதாது. மணிப்பூர் இளைஞர்களுக்கு. அப்படி ஆடிப் படிப்படியாக முன்னுக்கு வந்த நம்பையாவின் குறிக்கோள் அடுத்த வருஷம் இந்திய தேசிய கால் பந்தாட்ட அணியில் தாம் இடம் பெற்று விட வேண்டும் என்பது. வருத்தம் கால் பந்தாட்ட ஸ்டேடியம் ஒன்று மணிப்பூரில் இல்லையே என்பது. கூறும் தகவல்: மணிப்பூரில் சென்ற ஆண்டுதான் கிரிக்கெட் அறிமுகமாகிச் சிலர் ஆட ஆரம்பித்துள்ளனர்!

பிரசன்னகுமார் பானர்ஜி:

கால் பந்தாட்டத்தில் நாட்டமுள்ள நாடுகளில் இந்த வங்க வீரர் செல்லாத நாடே அநேகமாய் இல்லை எனலாம். இந்திய அணியில் இணைந்து தாய்லாந்து, சரான், மலேஷியா, தென் கொரியா, வடகொரியா, ஆப்கானிஸ்தான், ருஷ்யா, யு. ஏ. ச. போன்ற பல தேசங்களுக்குச் சென்று வந்துள்ளார். சென்னை வந்துள்ள வங்க அணியின் தலைவர். இருபத்தைந்து வயதான இவர் குறிக்கோள் என்ன என்றால் 'வங்கத்துக்குப் பெருமை சேர்ப்பதுதான்' என்கிறார்!


பேட்டி: சலன்




மாநிலங்களுக்கிடையே கால்பந்தாட்டப் போட்டி நடத்தலாம் என்று 1940-ல் டாக்கா விளையாட்டுச் சங்கம் கூறியது. அடுத்த ஆண்டே சந்தோஷைச் சேர்ந்த மன்மதராய் சௌத்ரி நினைவாகப் போட்டி நடந்தது. இவர் கல்கத்தாவில் இந்தியக் கால் பந்தாட்டக் கழகத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தவர். 1944-லிருந்து சந்தோஷ் கோப்பை தேசிய சாம்பியன் குழுவுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், 1947-க்குப் பிறகு சந்தோஷ் என்ற அந்த இடம் பாகிஸ்தானுக்கும் பிறகு பங்களா தேஷுக்கும் போய் விட்டது. வேலைப்பாடு மிக்க இந்தக் கோப்பையின் பெறுமானம் ரூ. 50,000. சென்ற ஆண்டு கோவாவும் வங்கமும் இருமுறை இறுதி ஆட்டத்தில் மோதியும் வெற்றி, தோல்வியின்றி முடியவே இந்தக் கோப்பையைத் தலா ஆறு மாதம் வைத்துக் கொண்டன. 1972-ல் ஒரே ஒரு முறை தமிழ்நாடு இறுதிப் போட்டி வரை வந்து தோல்வி கண்டது.

முதன்முறையாக சென்னை நேரு ஸ்டேடியத்தில் மின்விளக்கொளியில் இப்போட்டி நடக்கிறது. ஏராளமான செலவில் மின் விளக்குகள் போடப்பட்டிருந்தும் (பிலிப்ஸ் சாதனை; தமிழக அரசு உபயம்) டி. வி. நேரடி ரிலேக்கு ஒளி போதுமானதாக இல்லை என்கிறார்கள்.

✕ தாமஸ் செபாஸ்டியன்



✕ பிரசன்னகுமார் பானர்ஜி



சொல் ஒன்று வேண்டும்

அனுராதா ரமணன்

13

ராஜாவின் கல்யாணத்துக்குப் பிறகு–இன்று தான் மறுபடியும் அந்த வீடு கல்யாணக் களை கட்டியிருக்கிறது. அந்தக் களை யிலும் ஏதோ ஒரு பின்னம் மறைந்திருப்பது அத்தனை பேருக்கும் புரியாமலில்லை....

வளைகாப்பு என்பது பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயம் தான். இருந்தாலும் விழா நாயகி – நடுநாயகமாய் அமைக்கப்பட்டிருந்த – வெல்வெட் கம்பளம் போர்த்தப்பட்ட சோபாவில் அமர்ந்து வளை அடுக்கிக் கொள்ள... சற்று ஒதுங்கி நின்று தங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கும் ஆண்கள் கும்பலில் கலந்து நின்றபடி – ஓரக் கண்ணால் மனைவியின் அழகை ரசிக்க வேண்டிய நாயகன்... அங்கு இல்லையே.

அந்த வீட்டு வாசலில், விஜியின் கைவண்ணத்தில் ஒளிரும் மாக்கோலம் இருந்தது: வாசற்படியெங்கும் மாவிலையும் தோரணமும் இருந்தது: பெரிய ஹால் முழுதும் பல்வேறு வயது வித்தியாசங்களுடன் கூடிய பெண்கள் கூட்டம் இருந்தது: இலை இலையாய்க் கேஸரியும், இட்லியும் போடப்பட்டிருந்தது... ஒவ்வொரு பெண்ணின் கையிலும் அரை டஜனுக்குக் குறையாத கண்ணாடி வளையல் இருந்தது... ஆனால், ஒருவர் முகத்திலும் சிரிப்பு இல்லை...



என்னவோ – இதெல்லாம் ஒரு கடமை என்பது போல..

உமாவிற்கு வளையல் அடுக்கும்பொழுது அங்கிருந்த பெண்மணி ஒருத்தி பாடிய கமாஸ் ராகக் கீர்த்தனையில் கூட, அந்தச் சூழ்நிலையின் சோகம் ஒரு சில துளிகள் கலந்து விட்டாற்போல ..

''கமாஸ்னு 'ஜிலுஜிலு'ன்னு இருக்காதோ... இப்படியா அழுது வடிஞ்சுண்டு பாடுவா...''

ராஜாவின் அலுவலக சகா ரமாமணி, பக்கத்திலிருந்த பெண்ணிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

என்னதான் துக்கம் வெளியே தெரியக் கூடாதென்று, முகத்தில் புன்னகையைச் சுமந்தபடி வளைய வந்தாலும்... நெஞ்சினுள்ள கலக்கம் உமாவின் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிகிறது.

இதே ஹாலின் ஒரு பக்கமாய் வளையல்காரப் பெண்மணி உட்கார்ந்து உமாவிற்குப் போட வேண்டிய வளையல்களை அடுக்கி கைத்து அழகு பார்க்கிறாள்.

''என்னம்மா... அப்புறம்னு ராகுகாலம் வந்திடும். 'மளமள'ன்னு பொண்ணு கையில் வளைய அடுக்குங்களேன்...''

''இதோ ஒரு நிமிசத்துல ரெடி...''

வளையல்காரப் பெண்மணி மீனாட்சியிடம் சொல்லியவாறே பூஜைக்கு வேண்டிய பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ள...

விஜி, வாசலுக்கும் உள்ளுக்கும் நடையாய் நடந்து கொண்டிருக்கிறாள்.

மனசுக்குள் ஏதோ ஒன்று... அன்று ராஜாவைச் சந்திப்போம் எனக் குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது...

'இது என்ன அசட்டு நம்பிக்கை...'

இப்படியொரு நினைப்புத் தோன்றும் பொழுதெல்லாம், கூடத்திலிருந்து மெதுவாகப் படுக்கையறைக்கு நகர்ந்து விடுவாள். படுக்கையறையை ஒட்டினாற் போலிருந்த குளியலறைக்குள் சென்று, கதவைத் தாழிட்டுக் கொண்டு, மறுபடியும் அந்தக் காகிதத்தை எடுத்துப் படித்துப் பார்ப்பாள்,

ராஜாவுக்கு இது மாதிரி நாட்டுப் பாடல்களில் விருப்பமுண்டோ...

விஜிக்குத் தெரிந்த வரையில் ராஜா ஒரு சங்கீதப் பைத்தியம். கர்நாடக சங்கீதம் மட்டும் தான் என்றில்லை. பாப், டிஸ்கோ, இந்துஸ்தானி சங்கீதங்களிலும் ஈடுபாடு

உண்டு. விஜிக்கு அதில் கூட ஒரு பெரிய குறை.

அவளால் பாடகரின் முக பாவங்களையும் ராஜாவின் தலையாட்டலையும் தான் ரசிக்க முடியுமே தவிர பாட்டு என்றால் என்னவென்று சுத்தமாகத் தெரியாது.

ஆனால் மனசுக்குள் ரகசியக் கனவு ஒன்று உண்டு.

தான், ஒரு மேடையில் பக்கவாத்திய சகிதம் உட்கார்ந்து, தொடையில் தாளம் போட்டுக் கொண்டு மிக இனிமையாகப்பாடுவது போலவும், தன்னெதிரில் முதல் வரிசையில் ராஜா உட்கார்ந்து பலமாய்த் தலையாட்டி சங்கீதத்தை ரசிப்பது போலவும்...

அடடா... இந்தக் கற்பனைகளில்தான் என்ன சுகம்... என்ன சுகம்...

விஜி, தன் கையிலுள்ள காகிதத்தில் விழிகளை ஓட விடுகிறாள்.

ஒரு சமயம் பார்த்தால் — இந்த கையெழுத்து அப்படியே ராஜாவினுடையதுபோலத் தோன்றுகிறது...


விஜிக்கு, ராஜாவை விடவும் அவனுடைய கையெழுத்துத்தானே அதிகம் பரிச்சயமானது... சிலேட்டிலும், காகிதங்களிலும் அவன் எத்தனை முறை இவளுடன் சம்பாஷித்திருக்கிறான்.

ராஜாவின் கையெழுத்தே அலாதி. எழுத்துக்கள் ஒவ்வொன்றும் சங்கிலியில் கோத்தது மாதிரி இணைந்திருக்கும். எழுதுகிற வேகத்தில் ஒரு பக்கமாய்ச் சாய்ந்திருக்கும். புள்ளிகள் எல்லாம் முழு வட்டமாய்... எல்லாவற்றையும் விட வேடிக்கை என்னவென்றால்-ராஜாவினால்,ஒரு வரிசையை முடித்து விட்டு முற்றுப் புள்ளி வைக்கவே முடியாது... தொடர் புள்ளிகள் தான் அடுக்கடுக்காக வரும்.

இத்தனையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது ராஜாவின் கையெழுத்தேதான். சந்தேகமேயில்லை.

இன்னொரு சமயம் பார்த்தால் — ராஜா இது போன்ற விஷப் பரீட்சைகளில் எல்லாம் இறங்கக் கூடியவனில்லை என்றே தோன்றுகிறது.

அவன் எல்லா விஷயங்களிலும் சர்வஜாக்கிரதையானவன். இது வரையில், அவன் தான் செய்யும் சில்லறை விஷமங்களை, மிக சாமர்த்தியமாக மறைத்திருக்கிறான். அப்



பேர்ப்பட்டவன் இதுபோன்ற வம்பில் மாட்டிக் கொள்வானா...

விஜி, மனசுக்குள் ஆயிரம் கேள்விகளை எழுப்பியபடி, வந்திருந்த பெண்களைச் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் என சாடையிலேயே வற்புறுத்துகிறாள். சாப்பிட்டு விட்டுக் கிளம்பும் பெண்களுக்கு வெற்றிலைப் பாக்குக் கொடுக்கிறாள். விழிகள் மட்டும் வாசலுக்கும், உமாவின் கலங்கிய முகத்துக்குமாய்ப் பாலம் போட்டுக் கொண்டிருக்கிறது...

தனது சந்தேகத்தை உமாவிடம் சொல்லி விட வேண்டுமென்றுதான் விஜி நினைத்தாள்.

ஆனால்—

இது வெறும் சந்தேகமாகவே இருந்து, ராஜா வராமலேயே போய் விட்டால்... உமாவைத் தேற்றுவது யார்? எதிர்பார்ப்புக்கள் இருந்தால் — ஏமாற்றங்களும் சகஜம் தானே...

விஜி, தன் ஏமாற்றங்களைச் சகித்துக் கொள்வாள். உமாவின் பாதிப்பை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியாது.

இவர்களின் வேதனையே புரியாத வளையல்கார அம்மாள், மீனாட்சியின் கையில் உமாவுக்காக வாங்கி வைத்திருந்த வளையல்களுடன், சம்பிரதாயத்துக்காகத் தன் வளையல் பெட்டியிலுள்ள வளையல்களையும் சேர்த்து அழகாய் அடுக்கித் தருகிறாள். கிழவியின் மஞ்சள் பூசிய முகமும், நெற்றி நிறைந்த குங்குமமும், வாய் கொள்ளாத சிரிப்புமே அந்தச் சூழ்நிலைக்குப் பொருத்தமானதாய்...

இவளுடன் வந்த கிழவனும், பத்து வயதுப் பேத்தியும், அதே கூடத்தின் இன்னொரு மூலையில் உட்கார்ந்து, வருகிற பெண்களின் கரங்களில் வளையல்களை மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கிழவி, அடிக்கொரு தரம் தன் புருஷனை 'மாமோவ் — மாமோவ்' என்று அழைத்துக் கட்டளையிடுகிறாள்.

இரு கைகளினாலும் எழுதியவர்!

அமெரிக்காவின் 20–வது ஜனாதிபதியான ஜேம்ஸ் கார்பீல்ட், தம் இரு கைகளினாலும், ஒரே சமயத்தில் இரண்டு மொழிகளில் எழுதினார். பலருக்கும் கடிதம் எழுத வேண்டியிருக்கும்போது, ஒரே சமயத்தில் வலது கையினால் லத்தீன் மொழியிலும் இடது கையினால் கிரேக்க மொழியிலும் எழுதுவாராம்!

—பானு மணாளன்.



''மாமோவ்! மறுமனையில உட்கார்ந்த பொண்ணுக்கு ஒரு செட்டு வளையி எடுத்து, பாப்பா கிட்ட கொடுத்து விடு...''

''என்ன சைஸு?''

''ரெண்டே அரைக்கா. அதான் கல்யாணப் பொண்ணு சைஸு...''

''மாமோவ்! காப்பி தண்ணி குடிச்சியா..''

''குடிச்சேண்டி... நீ மளார்னு வேலைய முடி... இந்த கிழவியோட ஒரே பேஜாராப் போச்சு...''

சின்னப் பெண்களுக்கு இத்தம்பதியரின் பேச்சு, சந்தோஷச் சிரிப்பை உண்டுபண்ணுகிறது...

நடுவில், உமாவுக்கு ஆரத்தி எடுக்கும் சமயத்தில், கிழவி நடுங்கும் குரலில் பாட வேறு துவங்கி விட்டாள்.

''ஜெய மங்களோ
நித்தோ சுப மங்களோ... ஆயே...
ஆனைத்த பட்டுச் சீலெ
புள்ளி போட்ட ரவிக்கிகாலும்
பொண்ணைப் பெத்த தாயாருக்கு
சிருகொண்டு தட்டையிலே வைக்கவேணும்
ஜெயமங்களோ
நித்தோ சுப மங்களோ... ஆயே...
காலிலே சிறு சலங்கை
கையிலே நூம ஜோடி
காத்திருந்த மாப்பிள்ளைக்கு
வேத்திருந்த பள்ளத்துக்கு
புண்ணியமாய்ப் போகட்டுன்னு
நாங்க கொடுத்தோம்
கோடிட்ட மாப்பிள்ளைக்கு
இத்தி போட்ட வேட்டியாம்...''

சற்று விலகி நின்று இந்தக் காட்சியை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த பரந்தாமனின் இதழ்க் கடையில் கூட சின்ன புன்னகை.

''பரவாயில்லே,... கிழவிக்கு மனோதத்துவம் தெரிஞ்சிருக்கு...''

அவரின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அவருக்கு மிகவும் நெருங்கிய நண்பரான கமிஷனர் சொல்கிறார்...

விஜிக்குப் பாட்டு சத்தம் கேட்கவில்லை. பார்வையின் தீட்சண்யம் மட்டும், தன் மாமாவையும், மாமாவுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மற்ற போலீஸ் சிநேகிதர்களையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது.

சாதாரணமாய் வீட்டில் நடக்கும் எல்லா வைபவங்களிலும் இவர்கள் கலந்து கொள்வார்கள் என்றாலும்... இந்த முறை இவர்கள் அனைவருமே — ராஜா என்னும் சிங்கத்தைப் பிடிக்க வலைவிரித்துக் காத்திருப்பது போன்றதொரு உணர்வு விஜிக்கு.

''கடவுளே... அவர் வராமலேயே இருக்கட்டும்... வந்து மாட்டிக்க வேண்டாம்...''

விஜி, வளையல்கார அம்மாள் ஏற்றிய கற்பூரத்தைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொள்கிறாள்.

இது வரையில் அவன் வரவில்லை.

வளையல் காரக் குடும்பம், தன் மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு கிளம்பியது.

''ஒரு வாய் சாப்பிட்டுட்டுப் போங்க...''

மீனாட்சி அந்தச் சமயத்திலும் விருந்தோம்பலை மறந்து விடாமல் கிழவியை உபசரிக்கிறாள்.

''ஆங்... இன்னிக்கு எனக்கு ஒரு பொழுது... வூட்டுக்குப் போயி... பூசையெல்லாம் முடிச்சப் பொறவுதான் சாப்பாடு.''

''அப்ப உங்க வீட்டுக்காரரையாவது சாப்பிடச் சொல்லுங்க...''

மீனாட்சியைப் பார்த்துக் கிழவி காவிப் பற்கள் தெரியச் சிரிக்கிறாள்.

''மாமாவையா சொல்றீங்க... அதுக்குப் பல்லுமில்லே... சொல்லுமில்லே... இத்தனை சொல்றீங்க .. தட்ட மனசு வரல்லே... இலைக்கு இனிப்புப் போடுவீங்க இல்லே... அதை மட்டும் ஒரு பொட்டலம் கட்டி, குழந்தை கிட்டக் கொடுங்க. அது சாப்பிடும்...''

மீனாட்சி விஜியைப் பார்க்க, அவள் குறிப்பறிந்து, பட்சணப் பொட்டலத்தைக் கொண்டு வந்து கிழவியிடம் நீட்டுகிறாள்.

''ஆங்... நான் தொட மாட்டேன். கிழவங் கிட்டக் கொடு...''

விஜி பொட்டலத்தை நீட்ட, கறுப்புக் கம்பளியால் உடம்பு முழுக்கப் போர்த்தியிருக்க கிழவன், நடுங்கியபடி பொட்டலத்தை வாங்கிப் பேத்தியிடம் கொடுக்கிறான்...

''இந்தா... இதுவரைக்கும் நான் அடுக்கின வளையல் கணக்கு... பார்த்துப் போட்டுக் கொடுக்கச் சொல்லு...''

கிழவன், தன் வளையல் பெட்டியிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து மனைவியிடம் கொடுக்க, அவள், அதை வாங்கி விஜியிடம் கொடுக்கிறாள்...

''மொத்தம் இருநூற்று அறுவது ரூவா ஆச்சங்க...''

மீனாட்சிக்குப் பேரம் பேசத் தெரியாது. பேரம் பேசும் நிலையிலும் அவள் இல்லை... கிழவி கேட்ட பணத்தை எடுத்துக் கொடுக்கிறாள்.

''எதுக்கும் கணக்கைச்சரிபார்த்துருங்க..''

போகிற போக்கில் கிழவி, விஜியிடம் அழுத்தமாய்க் காகிதத்தைச் சுட்டிக்காட்டிச் சொல்லி விட்டுப் போக...

அவள் திருப்திக்காகக் காகிதத்தைப் பிரித்துப் பார்த்தவள்...

ஒரு கணம் ஸ்தம்பித்துப் போகிறாள்.

அன்று வளையல் சுற்றி வந்த காகிதத்தில் இருந்த அதே கையெழுத்து...

இதை எழுதியது யார்?

விஜி, இவர்களைத் தொடர்ந்து வாசல்வரையில் ஓட... அதற்குள் அவர்களைச் சுமந்த ரிக்ஷா நகரத் தொடங்குகிறது... கிழவன் மாத்திரம், இவளைப் பார்த்து மெள்ளச் சிரித்து விட்டுப் போகிறான்...

விஜி, மறுபடியும் காகிதத்தைப் பார்க்கிறாள்... அதில் விசேஷமாக ஒன்றுமில்லை. வளையல்களின் எண்ணிக்கைதான் இருந்தது..

முகமெல்லாம் குப்பென வியர்க்க,... அந்தப் பட்டியலைக் கிழித்தெறியப் போன விஜி, சட்டென்று தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு உள்ளே வர...

''என்னம்மா... அவங்களைத் துரத்திட்டு ஓடினே...?''



எடை குறைய.:.

பார்பரா மேரி தாம்ப்ஸன் என்ற பெண்மணி கணவரோடு வாழ்ந்த போது 'அவர் எடை 126 பவுண்டிலிருந்து 106 பவுண்டுகளாகக் குறைந்து விட்டது. கணவரைப் பிரிந்து சென்றார். எடை பழையபடி கூடிவிட்டது. திரும்பவும் அவர் கணவரோடு சென்று வாழ ஆரம்பித்தார். இத்தடவை அவர் எடை 104 பவுண்டுகளாக இறங்கி விட்டது. கணவனைப் பிரிந்திருந்த போது மனப்பாரம் குறைய உடல் பாரம் அதிகரிக்கிறது!

-ப. கந்தசாமி.

எதிர்த்தாற் போல பரந்தாமன்!

தன் முக மாற்றத்தை அவர் கண்டு பிடித்து விடாமலிருக்க, சர்வ ஜாக்கிரதையாய்ச் சிரிக்கிறாள் அவள்.

''ஒண்ணுமில்லே,... ரெண்டு டஜன் வளையல் அதிகமாப் போட்டுப் பணம் வாங்கிட்டுப் போயிட்டாங்க...''

விஜி, அபிநயிக்க, அவர் — அவளது தோளைச் செல்லமாகத் தட்டுகிறார்.

''போனாப் போறது... விடு...''

விஜி, அவர் விட்டால் போதும் என்பது போலச் சிட்டாய்ப் பறக்கிறாள். நேரே உமாவின் படுக்கையறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொள்கிறாள்.

உமா — பட்டுப் புடவையிலிருந்து சாதாரண நூல் புடவைக்கு மாறிக் கொண்டிருந்தவள், இவளது பதற்றத்தைப் புருவத்தை உயர்த்தி, ஆச்சர்யத்துடன் பார்க்க,

''என்ன விஜி...''

விஜி தன் கையிலிருந்த காகிதத்தை, அவளிடம் காட்டி, நடந்ததை விளக்க...

மாற்றுப் புடவையைக் கூட உடம்பில் சுற்றிக் கொள்ள மறந்து, கட்டிலில் சிலையாய் அமர்ந்து விட்டாள் உமா.

'அவர் வந்திருந்தாரா... ஐயோ, நான் கவனிக்கவே இல்லையே...'

அவள் தன் கையிலுள்ள காகிதத்தையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாள். கண்கள் அருவியாய் மாறுகிறது...

விஜியும் அந்தக் காகிதத்தையே உற்றுப் பார்க்கிறாள்தான். அவளுடைய சூட்சும புத்திக்கு — அந்தக் காகிதத்திலிருந்து இன்னொரு தகவல் கிடைப்பது போல ஒரு உணர்வு...

மேல் பார்வைக்கு வளையல் பட்டியல் போலிருந்த அந்தக் காகிதம் — உமாவுக்கு ஒரு செய்தியைத் தாங்கி வந்திருந்தது.

(தொடரும்)

நன்றியும் வணக்கமும்



இலக்கிய மொழியாகவும், பேச்சு மொழியாகவும் ஒருமித்து இயங்குகிற எந்த ஒரு மொழியும், காலத்தின் புதிய புதிய தேவைகளுக்கு ஏற்ப விரிந்து கொடுக்க வேண்டும். தமிழ் மொழியும் இந்த விதிக்கு விலக்கில்லை. புதிய சொற்கள், புதிய சொல்லாட்சிகள், புதிய அணுகு முறைகள் எல்லாம் வேண்டுந்தான். சந்தேகமில்லை! ஆனாலும் மொழி நாகரிகம் என்று ஒன்று இருக்கிறது. அதைக் கெடுக்கிற அளவுக்கு ஆங்கிலச் சொற்களைத் தமிழிலே கலந்து பேசுவதும், எழுதுவதும், ஒலிபரப்புவதும், அச்சிடுவதும் எதற்காக என்று புலப்படவில்லை! நாகரிகம் என்று நினைத்து இதைச் செய்தால் அது மிகப் பெரிய அநாகரிகமே ஆகும். அல்லது, தங்கள் தங்களுடைய சொல்லாற்றலின் குறைவை, மொழி மீது சுமத்தித் தமிழ் மொழிக்கு ஆற்றல் இல்லை, அதற்கு மூன்றாவது காலாக ஆங்கிலம் வேண்டும் என்று இவ்வாறு செய்கிறார்களா?

தமிழுக்கு ஆற்றல் இல்லை என்று சொல்வது வடிகட்டின பேதைமை என்று சீறியவர் பாரதியார்! ''தமிழில் முடியுமா?'' என்று ஒரு நூலே எழுதி முடியும் என்று காண்பித்தவர் ராஜாஜி! தமிழுக்கு ஒப்பான மொழி உலகிலேயே இல்லை என்று வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டியவர் ரசிகமணி டி.கே.சி. கதாகாலட்சேபங்களிலே 'இங்கிலீஷ்' வார்த்தைகளைக் கலந்து அந்தக் காலத்தில் பேசிய சிலரை 'வெளு வெளு' என்று கிண்டல் செய்து வெளுத்து வாங்கியவர் கல்கி! இந்தப் பெருமக்கள் அனைவரும் தமிழின் ஆற்றலைப் பற்றி எடுத்துச் சொன்னதோடு நிற்கவில்லை தாங்களே எழுதியும் காட்டியவர்கள்! ஆனாலும் இப்போது இந்த ஆங்கில மோகம் மறுபடியும் இலக்கிய உலகத்துக்குள்ளே பற்பல வடிவங்களிலே மறு அவதாரமெடுக்கிறது. மொழிக்கு உரியவர்கள், மொழியை வளர்க்க வேண்டியவர்கள் செய்கிற காரியமா இது? மூவாசையையும் தாண்டி, இந்த நான்காவது ஆசையான ஆங்கில' மோகம் முளைக்கிறது! இந்த இச்சையை வெல்வதே மொழி நாகரிகம்! நமது கடமையும் அதுவே ஆகும்!

எத்தனையோ முற்போக்கான ஆங்கிலத்தில் ''டூ'' ''டஸ்''; ''ஷால்'' ''வில்'' ''ஹாவ்'', ''ஹாஸ்''; ''ஆம்'' ''சஸ்''; —போன்ற நெறி முறைகளை அவர்கள் கருத்தோடு பாதுகாக்கத் தவறுவதில்லை. 'ஏ' 'ஆன்' போன்ற இலக்கணத்தைக் கூட அவர்கள் இன்னும் விடாப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டுதான் முன்னேறுகிறார்கள்! ஆங்கில உச்சரிப்பிலோ என்றால் அணுப் பிசகாத அளவுக்குக் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள். பி.பி.ஸி. ஒலியும் ஒளியும் பரப்புகிற ஆங்கிலமானது அந்த மொழிக்கே முன்மாதிரி என்று உலகெங்கும் எல்லோரும் ஒப்புக் கொண்டு பின்பற்றக்கூடிய தரத்தில் இயங்கி வருகிறது. நம் அனைவருடைய சிந்தனைக்கும் செயலுக்கும் இலட்சியங்களாக விளங்க வேண்டிய பேருண்மைகள் இவை!

• • •

சென்னை நகராட்சி அறிவித்திருந்த கொசு ஒழிப்புத் திட்டத்தின்படி, அண்மையில் சில பேட்டைகளில் புகை பாய்ச்சுகிற வண்டி ஒன்று வந்தது. அதன் பயனுகக் கொசுத் தொல்லை ஓரளவு குறைந்திருக்கிறதென்பதுஉண்மை. தொடர்ந்து சில வாரங்கள் இப்படிச் செய்தால் தான் நிலையான பயன் ஏற்படும். வண்டி வந்து போன இரண்டு நாளில் மறுபடியும் நிசிகானமாகிய கொசுகானம் ஒலிக்க ஆரம்பிக்கிறது! அதற்கு இடம் வைக்காமல் 'விடேன், தொடேன்' என்று இந்தப் புகையைப் பாய்ச்சினால் தான் கொசு சம்காரம் முழுமையாக முடிந்ததாகும்!

• • •

இந்தத் தொடரில் கடந்த ஆறு மாதங்களாக என் பழைய நினைவுகள் சில



மீ.ப.சோமு



வற்றை நேயர்களுடன் பகிர்ந்து கொண்டதோடு, சில பொதுத் துறைகளைப் பற்றியும் அவ்வப்போது எழுதி வந்தேன். எனக்குத் தோன்றிய சில பல யோசனைகளும் கூறப்பட்டன. இவற்றைப் படித்த சில நிறுவனங்களின் மேலதிகாரிகள் இயன்ற வரை நடவடிக்கைகள் எடுத்ததோடு, என்னுடனும் தொடர்பு கொண்டு மேலும் சில விவரங்களையும் கேட்டு ஆர்வத்தோடு முயற்சி எடுத்தார்கள் என்பதை இங்கே நன்றியுடன் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொரு முக்கிய விஷயத்தையும் இங்கே சொல்ல வேண்டும். பல துறைகளில் மேல் அதிகாரிகள் எத்தனையோ சீர்திருத்தங்களில் ஈடுபட்ட போதிலும், எல்லா மேலாளர்களிடமும், ஒரு உள்ளச்சம், ஒரு பயம், இருந்து வருகிறது. சில அதிகாரிகளிடம் அது வெளிப்படையாகத் தெரிகிறது. வேறு சிலர் அதை மூடி மறைக்கிறார்கள். அதுதான் அங்கங்கே இயங்கி வருகிற பற்பல சங்கங்களைப்பற்றிய அச்சம்! நடவடிக்கை எடுப்பதற்குப் பலர் தயங்குவதற்கு இது ஒரு பெரிய காரணம் என்பதே பகிரங்க இரகசியமாக இருக்கிறது! எனவே அதிகாரிகளிடம் எனக்கு ஓரளவு அனுதாபமே ஏற்படுகிறது!

உரிமைகளை வற்புறுத்துவதற்குச் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் கடமைகளை உணர்த்தவோ அல்லது பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றவோ சரியானபடி சங்கங்கள் இல்லை! வரி கொடுப்பவனை விடப் பணிசெய்பவனைக் கண்டு அஞ்சுகிற சூழ்நிலை எப்போது தான் மறையப் போகிறதோ? ஊதியம் பெறுகிறவனுடைய தேவைகளுக்குப் போராட விதம் விதமான சங்கங்களும், வசதி படைத்த தலைவர்களும் ஏராளமாக இருப்பது உண்மை. ஆனால் உழைப்பவர்களுக்குரிய ஊதியத்தை வரிகளாகவும், பற்பல வகையான கட்டணங்களாகவும், பஸ், தொலைபேசி, டாக்சி போன்றவற்றுக்குரிய வாடகைகளாகவும், ஒழுங்கு தவறாமல் செலுத்தி வருகிற குடிமகனுடைய குறைகளையும், தேவைகளையும், சங்கடங்களையும் அனுதாபத்தோடு பார்த்து அவற்றுக்காகக் காந்திய முறையிலே போராட ஆற்றலுள்ள அமைப்பு எங்கே இருக்கிறது? பொது மக்கள் என்ன 'ஸ்ட்ரைக்' எப்படிச் செய்து என்னத்தைக் கண்டார்கள்? இத்தகைய குறைகளைக் களைவதற்கு என்றே வரி கொடுப்போர் சங்கங்களையும் துய்ப்போர் கழகங்களையும் உருவாக்கி நடத்த, வல்லமை படைத்த பெரியவர்கள் முன்வர வேண்டும். இதனால் அரசாங்க அதிகாரிகளின் கரங்களைப் பலப்படுத்தவும் முடியும். தருமத்தையும், நாட்டின் அமைதியையும், ஒருமைப்பாட்டையும் மறவாத நிலையில் ஆற்றலோடு இயங்கக் கூடிய இத்தகைய சங்கங்கள் உருவானாலன்றி, பொதுமக்களுக்கு நிலையான பயன் ஏற்பட வழியில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகும் வரை வேலிகளே பயிரை மேயும்! கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்க இயந்திரமும் தயங்கவே செய்யும்!

• • •


ஆறு மாதங்கள் தொடர்ந்து நேயர்களோடு சிலபல பேசி, உறவாடி, உரையாடுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது! மகிழ்ச்சி அடைகிறேன். நண்பர் ராஜேந்திரன் அவர்களுக்கும் கல்கி நேயர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி உரியது. வணக்கம்!

முதல் கைதி: ''என்ன அண்ணே? இவ்வளவு கவலையாக ஏன் இருக்கிறாய்?''

இரண்டாவது கைதி: ''திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கப் போறாங்களாமே. அப்புறம் எப்படிக் 'கம்பி எண்ணறது' என்ற கவலைதான்!''

—லலிதா செல்லப்பா.





அவர்: தைரியமா அந்த டாக்டர் கிட்ட எப்படி வைத்தியம் பார்த்துக்கறீங்க?

இவர்: எல்லாம் பரஸ்பர நம்பிக்கைதான். அவர் என் ஹோட்டல்லதானே சாப்பிட்டுட்டு இருக்கார்.

—சிவலட்சுமி.



பண்டைக்காலம் முதல் பிரசித்தமான கிராம்புத்
தைலத்தின் குணாதிசயங்களின் பயனைப்பெற ஆயிரக்
கணக்கான குடும்பங்கள் இப்பொழுது
கிராம்புத் தைலம்
கொண்ட
ப்ராமிஸ்
உபயோகிக்கிறார்கள். நீங்களும் உபயோகியுங்கள்
அதிசயம்தான்!
இதற்குமுன்
யாருக்கும் இந்த
யோசனை
தோன்றவில்லையே!
ப்ராமிஸ்
• பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது.
• வாய்க்குப் புத்துணர்ச்சி தருகிறது.
• துர்நாற்றத்தை அகற்றுகிறது.
Promise
TOOTH POWDER
with
Clove Oil
Promise
Promise
Pr
சர்வதேச கோல்ட் மெடல் பெற்ற தயாரிப்புகள்
ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சி மிக்க மூச்சு
பல்ஸாரா தயாரிப்பு
CHAITRA-BLS-668 TAM

விளையாட்டு அரங்கம்

உற்சாகமளிக்க ஓர் ஒலிம்பிக்ஸ்

- அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் லாஸ் ஏஞ்ஜெல்ஸ் நகரில் இவ்வாண்டு ஜுலை மாதம் துவங்க இருக்கிறது ஒலிம்பிக்ஸ்.

- உலகின் 150 நாடுகளில் இருந்து 12,000 வீரர்களும் வீராங்கனைகளும் பங்கேற்கின்றனர். இவர்களைப் பாதுகாக்க 12,000 மெய்க்காப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

- வெவ்வேறு அரங்குகளில் நடைபெறும் மொத்தம் 370 போட்டிகளில் 17 முற்றிலும் புதியன.

- நாள்தோறும் ஆறு லட்சம் மக்கள் இவற்றை நேரில் கண்டு ரசிப்பர். வெவ்வேறு மொழிகளில் தத்தம் ஏடுகளுக்குச் செய்திகளை அவ்வப்போது வழங்க 8000 நிருபர்கள் லாஸ் ஏஞ்ஜெல்ஜ் நகரில் கூடுவர். வேறு எந்த தனி ஒரு நிகழ்ச்சிக்கும் இவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் நிருபர்கள் செல்ல மாட்டார்கள்.

- ஒலிம்பிக் ஜோதி நியூயார்க் நகரில் இருந்து லாஸ் ஏஞ்ஜெல்ஸ் நகருக்கு எடுத்து வரப்படும். இரு மாநகர்கள் இடையே உள்ள தொலைவு சுமார் 5000 கிலோ மீட்டர் மட்டுமே. எனினும் சுற்றியுள்ள பெருநகர் சிறுநகர் மக்களின் ஆர்வத்தை மதித்து ஒலிம்பிக் ஜோதி மிக நீண்டதொரு சுற்றுப் பாதையில் 19000 கிலோ மீட்டர்களைக் கடந்து வர இருக்கிறது.


- ஒலிம்பிக் ஜோதியை எடுத்து வர ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்களும் தனியார் நிறுவனத்தாரும் ஆர்வம் காட்டினர்.

- ஒலிம்பிக் தீபத்தை எடுத்து வரும் பெருமைக்கு உரிய உரிமைக்காக ஒவ்வொருவரும் ஒலிம்பிக் நிர்வாகத்தினருக்கு 3000 டாலர் கட்டணம் செலுத்துவர். இதன் வழி கிடைக்கும் 570 லட்சம் டாலர் அமெரிக்காவில் இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்கச் செலவழிக்கப்படும்.

- பாரம்பரியப் பெருமை உடையதான ஒலிம்பிக் ஜோதியை வணிகமுறையில் கொச்சைப்படுத்தக் கூடாது என்று கிரேக்க நாடு எழுப்பிய முறையீட்டுக்கு ஒலிம்பிக் நிர்வாகம் செவி சாய்க்கவில்லை. ஒலிம்பிக் ஜோதி மீதான உரிமை அனைத்து நாடுகள்

ஒலிம்பிக் சின்னம்

ஒலிம்பிக் விளையாட்டரங்கம்





டக்பாடில்லா - ஓட்டப்பந்தய வீரர். இவர் லாஸ் ஏன்செல்ஸ் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் பெற வாய்ப்புண்டு.

ஸாம்



ஒலிம்பிக் கழகத்தைச் சார்ந்தது என்று நிர்வாகிகள் கூறுகிறார்கள்.

● சால்வடார் டாலி என்பவர் வடிவமைத்த 11 ஒலிம்பிக் விளையாட்டுக்களை சித்திரிக்கும் நெறப்பு நாணயங்களை விற்பதன் மூலம் 400 லட்சம் டாலர் திரட்ட எண்ணியுள்ளது நிர்வாகக் குழு. தங்கம் மற்றும் பிளாட்டினம் நாணயங்கள் ஒவ்வொன்றும் 600 டாலர் என்று விற்கப்படும். வெள்ளி நாணயங்கள் 130 டாலருக்கு விற்கப்படும்.

● தனியார் நிறுவனங்கள் கட்டித் தந்துள்ள நீச்சல் குளம், வெலோட்ரோம் (சைக்கிள் பந்தயத்துக்கான ஓடு பாதை) தவிர மற்ற விளையாட்டு அரங்குகள், தங்கும் இடங்கள் போன்ற வசதிகள் வாடகை செலுத்தி மேற்கொள்ளப்பட்டனவேயன்றிப் புதிதாக நிர்மாணிக்கப்படவில்லை. இதனால்

○ மேரி டெக்கர்: பல ஓட்டப்பந்தய ரிகார்டுகள் ஏற்படுத்தியவர்





○ லாஸ் ஏஞ்செல்ஸ் மெமோரியல் கொலோஸியத்தில் ஒலிம்பிக் ஜோதி

கட்டுமானப் பணி 700 லட்சம் டாலராகக் குறைந்தது.

● நுழைவுச் சீட்டுகள் கட்டணம் 3 டாலர் முதல் 95 டாலர் வரை (இந்தியக் கணக்குப்படி ரூ. 45 முதல் ரூ. 1000 வரை) வேறுபடுகிறது. அநேக நிகழ்ச்சிகளுக்குக்கட்டணம் 18 டாலர். (ஏறத்தாழ ரூ. 200). கள்ளச் சந்தையைத் தவிர்க்க நுழைவுச் சீட்டுகள் ஒட்டு மொத்தமாக எவருக்கும் கொடுக்கப்பட மாட்டாது.

● அனைத்துப் போட்டிகளுக்குமான ஒரு ஜோடி டிக்கெட்டுகள் 25,000 டாலர் என்ற விகிதத்தில் நிர்வாகத்துடன் ஒத்துழைக்கும் பணிக்கொடை நிறுவனங்களுக்கு வழங்கப்படும். இதில் கிடைக்கும் தொகையில் ஒரு பகுதி ஊனமுற்றோர், மாநகரின் முதிய குடிமக்கள், ஆர்வம் மிக்க இளைஞர்கள் உள்பட ஒரு லட்சம் பார்வையாளருக்கு இலவச நுழைவுச் சீட்டு வழங்கப் பயன்படுத்தப்படும்.

● முன்னர் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்ற நகர்களில் இருந்தனவற்றை விட இரண்டு மடங்கு உணவகங்களும் தங்கும் விடுதிகளும் லாஸ் ஏஞ்ஜெல்ஸ் மாநகரில் உள்ளன. எனினும் பார்வையாளராக வர இருக்கும் ஆறு லட்சம் மக்களின் தேவைக்கு இவை போதுமானதாக இராது. எனவே சிலரை நகர மக்கள் தம் இல்லங்களில் விருந்தினராக ஏற்பர். மற்றும் சிலர் புறநகர்களில் தங்க வேண்டி இருக்கும்.

● ஒலிம்பிக் செலவுகள் ஒவ்வொரு முறையும் வெகுவாக உயர்ந்து வந்திருக்கின்றன. மாண்ட்ரீல் ஒலிம்பிக் (1976) செலவு 15 000 லட்சம் டாலர். வரவு 5000 லட்சம் டாலர். மாஸ்கோ (1980) செலவு 90 000 லட்சம் டாலர். நஷ்டக் கணக்கு தெரியவில்லை. மாஸ்கோவில் ஒலிம்பிக் பந்தயம் முடியும் தறுவாயில் அடுத்த பந்தயத்தை எங்கே வைத்துக் கொள்வது என்ற கேள்வி எழுந்த உடன் டெஹ்ரான் — லாஸ் ஏஞ்ஜெல்ஸ் என்ற இரு நகரங்கள் மட்டுமே முன்வந்தன. வெகு விரைவிலேயே டெஹ்ரான் பின் வாங்கியது.

● லாஸ் ஏஞ்ஜெல்ஸ் நகரில் நடத்தலாம் என்று வாக்கு அளித்தவர்கள் கூட நகரவைக்கு மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் ஒரு காசு கூட ஒலிம்பிக் பந்தயத்திற்குச் செலவழிக்கக் கூடாது என்றனர். நகர மக்களுக்குக் கடன் சுமை ஏற்படக் கூடாது என்ற ஒரு தீர்மானத்தை நகரவை நிர்வாகம் ஏற்கச் செய்தனர்.

● இதனால் ஒலிம்பிக் பந்தயம் எங்கே நின்று விடுமோ என்ற அச்சம் எழுந்தது.

அப்பொழுது தான் ''நஷ்டமில்லாமல் நிகழ்ச்சியை நன்கு நடத்தலாம். நான் ஒத்துழைக்கத் தயார்'' என்று முன்வந்தார் ஒரு தொழிலதிபர்.

● ஒலிம்பிக் நிர்வாகக் குழுவில் பணியாற்ற முன்வந்த பீட்டர் யுபெராத் என்ற அந்த 45 வயது தொழிலதிபர் ஒரு முன்னாள் விளையாட்டுவீரர்.

● யுபெராத் வரைந்த நிதித் திட்டப்படி மொத்தச் செலவு 5000 லட்சம் டாலர் மட்டுமே. அதாவது இந்தியக் கணக்குப்படி ரூ. 50 கோடிதான். 1980-ல் மாஸ்கோ செலவழித்த தொகையில் இது ஐந்து சதவிகிதம் மட்டுமே. இத்தனைக்கும் அரசு நிதி உதவி, பொது மக்கள் நன்கொடைகள், பரிசுச் சீட்டுத் திட்டம் என்று முன்னர் நிதி கிடைத்து வந்த மூன்று வழி முறைகள் இப்போது அடைபட்டு விட்டன. லாஸ் ஏஞ்ஜெல்ஸ் நகரை உள்ளடக்கிய கலிபோர்னியா மாநிலத்தில் பரிசுச் சீட்டுகள் ஏற்கெனவே சட்ட பூர்வமாகத் தடை செய்யப்பட்டு விட்டன. பின்னர் செலவுகளைச் சமாளிப்பதுதான் எப்படி?

● முந்தைய பந்தயங்களின் நஷ்டத்திற்குக் காரணம் புதிய விளையாட்டு அரங்குகளையும், தங்கும் இடங்களையும் நிர்மாணித்தது தான் என்று உணர்ந்த யுபெராத் இவற்றை அறவே தவிர்க்க முயன்றார். ஏறத்தாழ ஒரு லட்சம் மக்கள் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் காண வசதிகள் உடைய 1932-ல் ஒலிம்பிக் பந்தயம் நடைபெற்ற அதே அரங்கைப் புதுப்பித்து இம்முறை பயன்படுத்தத் தீர்மானித்தார்.

● ஒலிம்பிக் நிகழ்ச்சிகளை அமெரிக்கத் தொலைக்காட்சியில் காண்பிக்கப் படம் எடுக்கும் உரிமையை ஏலத்தில் விற்றார். மிகக் குறைந்த தொகை 2000 லட்சம் டாலர் என்று அறிவித்தார். 'ஏ. பி. சி. நெட்வொர்க்' என்ற நிறுவனம் 2250 லட்சம் டாலர் கொடுத்து உரிமையை ஏலத்தில் வென்றது. ஐரோப்பிய நாடுகளுக்காக



○ அமெரிக்க ஒலிம்பிக் பந்தயத்தையொட்டி வெளியிடப்பட்டுள்ள நாணயம்

தொலைக்காட்சிப் படங்கள் எடுக்க இன்னொரு நிறுவனம் 800 லட்சம் டாலர் அளித்தது.

● அடுத்து வெவ்வேறு நிகழ்ச்சிகளை அமைப்பதால் ஏற்படும் செலவுகளை ஈடுகட்டச் சில வணிக நிறுவனங்களை யுபெராத் நாடினார். தமது உணவுப் பண்டங்கள் அல்லது நுகர் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்புக்கள் பெருக வேண்டித் தம் தயாரிப்புக்கள் ஒலிம்பிக் நிர்வாக அங்கீகாரம் பெற்றவை என்று அறிவிக்கப்படுவதற்காகச் சில நிறுவனங்கள் நிதியளிக்க முன் வருவதுண்டு. 30 தயாரிப்பு நிறுவனங்களுக்கு மட்டுமே இவ்வாறு அங்கீகாரமளிக்க ஒப்புக் கொண்டுள்ளார் யுபெராத். ஒவ்வொரு நிறுவனமும் 40 லட்சம் டாலர் நிதி வழங்குவதோடு சில பொறுப்புக்களையும் ஏற்றுப் பணிபுரிய முன் வந்துள்ளன.

● ஐ. பி. எம். என்ற கம்ப்யூட்டர் நிறுவனம் நிதி நல்குவதோடு பந்தயங்களின் பொழுது பல இடங்களில் பல்வேறு காரணங்களுக்காகத் தேவைப்படும் கம்ப்யூட்டர்களை வழங்கி அவற்றை இலவசமாக இயக்கவும் முன் வந்துள்ளது.

● இதேபோல பிக் (UICK) என்ற நிறுவனம் ஒலிம்பிக் அலுவலர்களுக்குப் போக்குவரத்து வசதிகளைக் கட்டணமின்றிச் செய்து தரும். அமெரிக்கன் டெலிபோன் – டெலிகிராஃப் கம்பெனி தகவல் தொடர்பு வசதிகளை இலவசமாகச் செய்து தரும். சேஃப்வே ஸ்டோர்ஸ் என்ற வணிக அமைப்பு விளையாட்டு வீரர்களுக்கு உணவு வழங்கும் செலவையும் பொறுப்பையும் ஏற்கும்.

● இம்முறை சிக்கனம் கருதி 'ஒலிம்பிக் கிராமம்' என்ற தனியொரு தங்குமிடம் ஏற்படுத்தப்பட மாட்டாது. ''உலக சகோதரத்துவத்தைப் பேணும் ஒலிம்பிக் வில்லேஜ் இல்லாமல் போட்டி, என்ன ஐயா போட்டி?'' என்று கேட்டதற்கு ''அட 1932-ல் இதைப் படைத்தவர்கள் நாங்கள்தான். அதை இப்பொழுது கைவிட்ட பெருமையும் எங்களுக்கே இருக்கட்டுமே'' என்றார் நிர்வாகக் குழு உறுப்பினர் ஒருவர்.

தகவல், படங்கள்: அமெரிக்க தகவல் நிலையம்

பரிட்சை நெருங்கிடும் காலம்?

கவனமாக படித்திடும் நேரம்



முழுதும் தயாராயிருந்திட வேண்டிய காலம்

காம்ப்ளான்® பருக வேண்டிய நேரம்.

காம்ப்ளான் ஒன்றில்தான் அவனுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் 23 மூலாதார சத்துணவுகள் உள்ளன.

குழந்தைகள், முக்கியமாக பரிட்சைக்கு படிக்கும் காலத்தில், திடமாக இருந்திடுவது அவசியம். அதனால்தான் பரிட்சை நடக்கும் நேரம் **காம்ப்ளான்** நேரம் என்று அன்னையர் அறிவர்.

உடல் வளர்ச்சியில் பங்கு பெறுவதே புரதம் என்ற சத்துதான். **காம்ப்ளானில்** குழந்தைகளுக்குத் தேவையான புரதம் (20%) இருப்பது மட்டுமல்ல, அப்புரதம் மிகச்சிறந்த புரதமுமாகும் (பால் புரதம்). அத்துடன், அது குழந்தைகளுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் ஆகிய 22 கூடுதல் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும்.

துவங்குங்கள் காம்ப்ளான் உங்கள் குழந்தைகளுக்கு—அன்றாடம் இருவேளை. நினைவில் இருக்கட்டும் டாக்டர்களின் **சிபாரிசு பெற்ற திட்டமிட்ட உணவு காம்ப்ளான்.**

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளாம் சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ, ஸ்ட்ராபெர்ரியும், சாதா ரகத்திலும்.

குழந்தைகள் மிகவும் விரும்பிடும் சுவைகள்.



GKGE.884.GLC.11 T

காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

ஜங்ஷனிலே ஒரு மேம்பாலம்

24

'என்னை உள்ளுக்குள் யாரும் மன்னிக்கவில்லை. ஹரி மட்டும் ஏன் மன்னிக்கிறான்?' என்று மனத்திற்குள் எண்ணினாள் ஜெயா.

அவள் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

கட்டிலின் மீது காசி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

ஹோட்டல் பெஞ்சுகள் இரண்டை இணைத்து அவனுக்குச் சற்று அருகில் போட்டுக் கொண்டு ஹரி அவற்றின் மீது குத்துக்கால் போட்டு அமர்ந்திருந்தான்.

ஜெயா வாசற்படி மீது உட்கார்ந்தாள்.

''ஏன் கொளந்தே தூக்கம் வரல்லே.''

ஜெயா பெருமூச்செறிந்தாள்.

''கேஸை நினைச்சுப் பயப்படறியா?''

''......''

''பயப்படாதே... கேஸ் ஒண்ணும் ஆவாது. ஜட்ஜிகிட்டே பூரா சங்கதியையும் விவரமா எடுத்துச் சொல்லிக்கிறோம். வில்வம் பொணைக்கலிட்டதாலே பெரிசா தண்டனை கெடைக்காது.''

''நான் தண்டனைக்குப் பயப்படலே.''

''நீ பயப்படறேன்னு நான் சொன்னேன்? கொளந்தே அதுக்கெல்லாம் நீ பயப்படறதா இர்ந்தா நான் வில்வத்தைத் தூக்கிக்னு இருக்கறப்போ நீ ஏன் ஓடிபாந்து ஒலக்கைல அடிக்கப் போறே...''

ஜெயா இருட்டில் அவன் உருவத்தையே பார்த்தாள்.

''இப்போ நான் ஒண்ணு கேக்கப் போறேன். எனக்கு நீ உண்மையா பதில் சொல்லணும்...''

''சேரு.''

''நீ சொல்றேன்னு சொன்னாத்தானே நான் கேக்க முடியும்?''

''சொல்றேன்னு சொல்லிட்டு நான் மாத்திட்டா இன்னா பண்ணுவியாம்?''

கொஞ்சம் பழைய ஜெயா வெளியே வந்தாள். ஹரிக்கும் அது புலப்பட்டது.

''நீ மாத்திச் சொன்னா கண்டுபிடிக்க முடியாத மக்குப் பிளாஸ்திரின்னு என்னை நெனைச்சுக்னு இருக்கியா?''

ஹரி வேண்டுமென்றே வம்புக்கு வந்தான்.

''அண்ணாத்தே நீ என்னிக்கும் மக்கு இல்லே.''

''ஆனா, பிளாஸ்திரிங்கறியா?''

''பிளாஸ்திரின்னா ஒட்டுப் போடறது தானே... அப்ப நீ பிளாஸ்திரி தான்.''

''யாருக்கும் யாருக்கும் நான் ஒட்டுப் போட்டேன்.''

''இதோ... வில்...'' என்று வாய்விட்டு அவன் பேரைச் சொல்லப் போனவள் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டு ''ஒலக்கையாலே அடி வாங்கினவருக்கும், காசி அண்ணாத்தைக்கும் ஒட்டுப் போட்டுட்டியே. தெனம் காத்தாலே ஒரு தடவை சாயங்காலம் ஒரு தடவை பஸ்லே போயி அவரை ஆஸ்பத்திரியிலே பாக்க வச்சுட்டியே... இது போதாது!''

ஹரியின் முகத்தில் ஒரு புன்முறுவல் பிறந்து ஒரு நிமிஷம் வரை அவன் உதட்டிலேயே தங்கியிருந்ததை ஜெயா பார்க்க முடியவில்லை. இருட்டில் அது தெரியவில்லை.

''அதுக்கு நானு காரணம்... ஒன் கைங்கரியம் தான் காரணம்.''

உலக்கையால் அடித்ததைக் கைங்கரியம் என்று, அவள் என்ன நினைத்துக் கொள்வாள் என்ற கவலையின்றி ஹரி கிண்டல் செய்தான்.

''நல்ல கைங்கரியம் பண்ணி நடுவாந்தரத்திலே மாட்டிக்கினேன் இல்லே'' என்று சிரித்தாள் ஜெயா.

''அம்மாடி... இப்பத்தான் ஒன் சிரிப்பு சத்தம் கேக்குது... கொளந்தே! இன்னா நல்லா இருக்குது தெரியுமா...?''

''நான் சிரிக்கவா மாட்டேங்கறேன்..... எனக்கு யாருனா சிரிப்பு காட்டினாத்தானே சிரிப்பு வரும்? எல்லாரும் எங்கடா மிச்சம் பேசினா நம்மளையும் ஒலக்கைலே ஒண்ணு போட்டுடுவாளோன்னு மட்டு மரியாதையோட நடக்கறாங்க... ஐய... அப்புறம் நாம்ப இன்னா பண்றதாம்...''

''நல்லா கைல பட்டாக்கத்தி வச்சுனுகீற பத்ரகாளி மாதிரி பயப்படறாங்க இல்லே?'' என்று கிண்டி விட்டான் ஹரி.

''இல்லே பின்னே.''


''அப்ப யாரும் ஒங்கிட்டே வாலாட்ட மாட்டாங்க?''

''பாரேன் உன் குறும்பை. தைலா காலே வுட்டு ஆளம் பார்க்கறே...?''

''பாத்தியா, பாத்தியா கொளந்தே... நான் என்னிக்கு ஒன்னை ஆளம் பார்த்தேன்?''

விழா அமைப்பாளர் மைக் செட்காரரிடம்: ''சும்மா மைக் டெஸ்டிங்ன்னு சொன்னா போதும்... ஒன்.. டூ... த்ரீ...ன்னு சொல்லாதீங்க. வந்திருக்கறவங்க தங்களை எண்ணுவதா நினைச்சுக்கப் போறாங்க.''

—இளை. அ. கதிர்வேல்.



''அட... அதுக்குள்ளே பதர்றியே.... சும்மா டமாசுக்குக் கூட சொல்லக் கூடாதா?''

''சரி போகட்டும். இப்ப நான் கேக்கறதுக்கு உண்மையா பதில் சொல்லணும்.''

''எப்பவும் ஒங்கிட்டே நான் உண்மையைத்தான் பேசிக்கிட்டிருக்கேன்.''

''நீ எதுக்கு வில்லத்தை நான் தூக்கிப் பிடிச்சுக்கினு இருக்கறப்போ ஓடியாந்து ஒலக்கையாலே அடிச்சே!''

அவள் ஒருகணம் மௌனமானுள். பின்

''பொண்ணு கேக்க வந்திருக்காரு. ஒரு மரியாதை வேணுமா... ஒரு வரவேற்பு வேணுமா...?'' என்ருள்.

ஹரி சிரித்து விட்டான்.

''அதான் அந்த வரவேற்பையும் மரியாதையையும் நான் குடுத்திடப் போனேனே. நீ ஏன் முந்திக்கிணே?''

ஜெயாவுக்கு ஒன்று புரிந்தது. எது புரிய வேண்டுமோ அது.

''தெரியும் இல்லே... தெரிஞ்சுக்கினு பேசாம மனசுல வச்சு பூட்டிக்கோ. தொண தொணன்னு அதை என் வாயிலே இருந்து புடுங்கணும்னு ரோதனை குடுக்கக்கூடாது.''

''இப்ப ஒனக்கு ரோதனையா குடுத்தேன்.''

''பின்னே... ஒண்ணு தெரிஞ்சா அதைப் பேசாம மனசுலே வச்சுக்காம கேட்டுத் இடம் பண்ணிக்கிறது ரோதனை இல்லாமே வேறு இன்னுவாம்?''

ஹரிக்கு உடல் சிலிர்த்தது. இந்த அன்பிற்கு... நான் குற்றவாளியாய் விடக் கூடாது என்று மருண்டு போய் ஓடிவந்து குற்றத்தைத் தன் மேல் ஏற்றுக் கொள்ளும் அன்பிற்குத் தான் எவ்வளவு தகுதி வாய்ந்



தவன்? இவன் யார்...? தான் யார்...? எந்த ரத்த பந்தம் இப்படி இவனை மேலே விழுந்து ஒரு மறையாப் பழியைத் தோளில் போட்டுக் கொள்ளச் செய்தது.

''இன்ன கம்னு ஆயிட்டியே! டோஸ் குடுத்திட்டேனா?''

ஹரி முதுகுத் தண்டில் உதறிக்கொண்டு உச்சந்தலைக்கு ஏறிய அந்தச் சிலிர்ப்பைப் பரவசத்தோடு அனுபவித்தான்.

''ஒண்ணுமில்லே... ஒரு தமாஷை நெனச்சிப் பார்த்தேன்...''

''இன்ன டமாசு?''

''இந்த ஒலக்கை அடியை வாங்கிக்கினு கூட அந்த வில்வத்துக்குப் புத்தி வர்லியே. இன்னும் கூட ஒன்னியே தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு சொன்னானுமே நேத்து... இன்னும் என்ன பாடு படப்போறானோ?''

ஜெயாவுக்குச் சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது. சேலைத் தலைப்பால் வாயை மூடிய வாறு காசி எழுந்து விடப் போகிறான் என்ற எச்சரிக்கையில் அடக்கிக் கொண்டே சிரித்தாள். அவள் சிரிப்பதைக் கேட்க ஹரிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இப்படி அவளை அப்போதைக்கப்போது சிரிக்க வைத்து, சிரிக்க வைத்தே மீட்டுவிட வேண்டும். பழைய ஜெயாவாக்கிவிட வேண்டும்.

''அண்ணாத்தே நீ படா ஆளு... நாங்கூட அப்பாவின்னு நெனச்சேன்...''

''ஏன் இப்பிடித் திடீர்னு?''

''நீயே போயி அவரை ஆஸ்பத்திரிலே பாத்து ஜெயா ஒன்னைத்தான் கட்டிக்கப் போறாளாம்னு சொல்லிட்டு வந்திருக்கே... இப்ப இன்னடான்னா அவரு என்னியே தான் கண்ணாலம் பண்ணிக்குவார்னு எங்கிட்டே டபாய்க்கிறே...''

''கொளந்தே... நான் டபாய்க்கலே... ரெண்டும் மெய்தானே...''

ஜெயா மெதுவாக நகத்தைக் கடித்துக் கொண்டாள்.

''ம்ம்... நீ கண்ணாலம் கட்டிக்கிட்டுக் குடித்தனம் பண்ண ஆரம்பிச்சுடுவே. காசி அண்ணாத்தை கோயமுத்தூருக்குப் பூடப் போவுது... நான் மட்டும் ஒண்டியா அம் போன்னு மேம்பாலத்திலே ஒலாத்தணும்'' என்றான் ஹரி.

''ஏன் நீ கூட ஒர்த்தியப் பாத்துக்கறது.. நானே பாத்து வக்கட்டுமா...?''

''நீயா வாரேம்மா.''

''ஏன். பயம்மாகீதா...?''

''வில்வத்துக்குத் தலைகெட்டு... தாங்கிக் கினான்... இனிமேலும் தாங்கிக்குவான்..''

''சும்மா இப்பிடி கருள் உடக்கூடாது.''

''ஏம்மா...?''

''ஒண்ணுதான். அந்த ஒண்ணே ஒண்ணு போதும் இந்த ஜென்மம் சாயற வரிக்கும் என்னை அறுக்கறதுக்கு.''

''அப்ப இனிமே சரண்டர்தானா...''

''சரண்டர்ன்னா... இன்னா அர்த்தம்?''

''சரணாகதி.''

''நான் இன்னாத்துக்கு சரண்டர் ஆவ றேன்? அவரு தான சரண்டர் ஆவ மொதல்ல வந்தாரு.''

ஹரி கைகொட்டிச் சிரித்தான். காசிக்குத் தூக்கம் கலைந்தது.

''ஹரி...'' என்றான்.

''நாந்தா அண்ணாத்தை...''

''தூங்கலே?''

''ஜெயாவுக்குத் தூக்கம் வர்லே. ஒக் காந்து கதை பேசிக்கினு இருக்கோம்.''

அவன் எழுந்து உட்கார்ந்தான்.

''என்ன கதை?''

''அதான் ஒனக்கும் ஜெயாவுக்கும் நடக்கப் போற கல்யாணக் கதை!'' என்றான் ஹரி.

(முற்றிற்று)

டாக்டர் — பணக்காரருக்கே!

நியூயார்க் நகரத்திலுள்ள ஒரு ஆசிரியர் மனநோய் வைத்தியர் ஒருவரைச் சந்திப்பதற்காகச் சென்றார். அவர் பார்க்கச் சென்ற டாக்டரின் ஆஸ்பத்திரி ஒரு பிரும்மாண்டமான மாளிகையாக இருக்கது. உள்ளே நுழைந்ததும் வர வேற்பதற்குக் கூட ஆள் இல்லை. இரண்டு போர்டுகள் தொங்கின. அதில் ஒன்றில் 'ஆண்கள்' என்றும், மற்றொன்றில் 'பெண்கள்' என்றும் எழுதியிருக்கது. ஆசிரியர் 'ஆண்கள்' என்றிருந்த அறையில் நுழைந்தார். அங்கே மறுபடியும் இரண்டு போர்டுகள் தொங்கின. அவைகளில் ''மனநோய்'' என்றும், ''இதர நோய்கள்'' என்றும் எழுதியிருக்கது. வந்தவர் ''மனநோய்'' என்றிருந்த அறையில் நுழைந்தார். அங்கேயும் இரண்டு போர்டுகள் தொங்கின. ''பத்தாயிரம் டாலருக்கு மேல் சம்பாதிப்பவர்கள்'' — ''அதற்குக் குறைவாகச் சம்பாதிப்பவர்கள்'' என்று அவைகளில் எழுதியிருந்தது. ஏழை ஆசிரியர் இரண்டாவது போர்டு தொங்கிய கதவைத் திறந்து கொண்டு சென்றார். ஆஸ்பத்திரிக்கு வெளியே வந்து சேர்ந்து விட்டார்!



—''அட்லாண்டிக் ஜர்னல்''லிலிருந்து.
தகவல்: ப. கந்தசாமி.

பொண்ணு பிடிச்சிருக்கு



வழக்கு தமிழில் தலைப்பை வைப்பது இப்போது வாடிக்கையாகிவிட்டது. தலைப்பை நகர்த்தி விட்டுப் படத்தைப் பற்றிக் காண்போமானால்...

மணக்கோலத்தில் அறைக்குள் வந்து விதவைக் கோலம் பூணும் ரேவதியை உறைகாட்சிகளாகக் காண்பிப்பது ஆவலைத் தூண்டும் தொடக்கம் தான் என்றாலும் அடுத்த காட்சியிலே சப்! (பொண்ணு ஸ்கூல் டிராமால கல்யாண சீன்ல நடிச்சிட்டு மேக்கப்பைக் கலைச்சிட்டு வந்து நிக்குது. அதுக்கு ஏன் இந்த கலங்கு கலங்கறா?)

அழகு சாவித்திரியாய் ரேவதி. கன்னியாகத்தலையை நீட்டுகிறார். கனவுகளோடு கல்யாண நாளை எதிர்பார்க்கிறார். கல்யாணமான கையோடு கணவனிடம் முடிவில்லாமல் அவஸ்தைப் படுகிறார் கடையில் 'சுபம்' இல்லை.

கொஞ்சுவதும், குழைவதும், அழகு காட்டுவதும், அழுவதும் ரேவதியின் குருத்து முகத்தில் தான் எத்தனை எத்தனை பாவங்கள்; நடிப்பில் எத்தனை முதிர்ச்சி!

செவலையாக வருகிற பாண்டியனுக்கும் 'ஹல்வா' மாதிரி பாத்திரம். 'ச்சீ, நீயெல்லாம் ஒரு ஆம்பிளையா' என்று தாய்மார்கள் பொங்கிப் பொங்கி சாபமிடுகிற மாதிரி ஜமாய்த்திருக்கிறார். நல்ல நடிப்பிற்கு அதுதானே சாட்சி? சில சமயங்களில் செயற்கையாய்ச் சிரிப்பது தான் என்னவோ போலிருக்கிறது. ராஜேஷ்! பாம்பா இல்லை கடிக்க வருகிற நேரத்தில் மறந்து போகும் அரணையா என்று புரிந்து கொள்ள முடியாத பாத்திரம். 'சைட் அடிக்க போகாதீங்கோ' பாட்டு மட்டும் அவரை செயற்கையாய் அந்நியப்படுத்துகிறது. மற்றபடி கதையில் பாண்டியன் அறிமுகமாவதும், ராஜேஷ் பின்னால் நுழைவதும் அப்படியே இழையோ இழை என்று இழைந்து வந்திருக்கின்றன. தடங்கலில்லாமல் கதையைச் சொல்லிக் கொண்டு போகிறார் டைரக்டர் ரங்கராஜ். சின்னச் சின்ன சிங்கார செதுக்கல்களுடன் கதையைக் கொண்டு போயிருக்கும் நயத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. டைட்டில் பாடலும், 'இந்திர லோகமே' பாடலும் கவனமாய்ப் பழைய மெட்டில் போடப்பட்டு, மனத்தை இழுத்துப் பிடிக்கின்றன. சந்திரபோஸ் சாமர்த்திய சாலிதான்.

கடைசிக் காட்சி பற்றி: 'அணைப்பு' என்ற தலைப்பில் அனுராதா ரமணன் எழுதிய கதையின் முடிவை ரொம்ப உரிமையோடு எடுத்து இந்தப் படத்தின் முடிவுக் காட்சியாய் அமைத்திருக்கிறார்கள். தமிழ்ப்பட உலகிற்கு மிகப் 'புதுசான' முடிவுதான். ஆனாலும் இப்படிச் செய்யலாமோ? மூலக் கதை என்ற இடத்திலாவது அனுராதா ரமணன் பெயரைப் பார்க்க முடிகிறதா என்றால் இல்லையே! 'மறந்து' விட்டார்களா?

—ஜெயமன்மதன்

குழந்தைகளைத் தூங்க வைக்கத் தாய்மார்கள் பாடும் பாட்டு தாலாட்டு. 'தால்' என்பதற்கு 'நாக்கு' என்று பொருள். நாக்கை ஆட்டிப் பாடுவதால் இதற்குத் தாலாட்டு என்று பெயர் வந்தது.

—கு. அருணாசலம்.



கிழக்கில் ஒரு அஸ்தமனம்!

இந்திரா சௌந்தர்ராஜன்



''**எ**ன்னைக் கொன்னுடுங்க அத்தான்! ப்ளீஸ்... இல்லேன்னு என் கைகால் விலங்குகளையாவது அவிழ்த்து விடுங்க. நானாவது தற்கொலை பண்ணிக்கறேன். ப்ளீஸ் அத்தான் ப்ளீஸ்... வலி தாங்க முடியலே அத்தான். உடம்பு மேல ஆயிரக்கணக்கான புழுக்கள் நெளியற மாதிரி இருக்கு. என்னைக் கொன்னுடுங்க... என்னைக் கொன்னுடுங்க... எத்தனை தடவை தான் நானும் கெஞ்சட்டும்?''

—எரிமெழுகாட்டம் விழி ஒழுக, அகல்யா கெஞ்சிய கெஞ்சல் கலாதரைப் பிசைந்து கொண்டிருந்தது. பாறைக்குச் சமமாய் இறுகிப் போய்ப் பதில் பேசாமல் அகல்யாவைப் பார்த்தார். விழி சும்மா இராமல் நீர் இறைத்தது... பல நூறு நாட்களைக் கண்டு விட்ட தாடை முடிகளில் அவற்றின் பிரவேசம் தெரிந்தது.

''என் அழ நீங்க, என்னாலதானே? போதும் அத்தான் இந்தச் சித்திரவதை. என் வேதனையை விட உங்க வேதனைதான் என்னை அரிச்செடுக்குது. ராஜா மாதிரி வாழ வேண்டிய நீங்க எதுக்குக் கிடந்து தவிக்கணும்? இன்னொருத்திய கட்டிக்கிட்டு நல்லா இருங்க! என்னை என் விருப்பப்படி கொன்னுடுங்க. இல்ல தற்கொலையாவது செஞ்சுக்கிடறேன். நீங்க சந்தோஷமா இருக்கணும். அதுதான் எனக்கு வேணும்.''

—கலாதர் அவளின் அந்த நித்ய புலம்பலைச் சட்டை செய்யாமல் இஞ்செக்ஷன் சிரிஞ்ஜைத் தேட ஆரம்பித்தார். கட்டிலோடு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு ஒரு முரட்டுக்கைதியைப் போல் கிடக்கும் அகல்யா, புலம்பும் போதும், நெளியும் போதும், ஓங்கி அலறும் போதும், சரசரத்துச் சலசலக்கும் சங்கிலிகளின் ஓசை அவர் காதுகளில் திராவகச் சொட்டுக்களாய்த் தான் பிரவேசித்தது.

மரத்துப் போன மனசு ஒரு கணம் அந்தச் சப்தத்தால் எரிச்சலின் எல்லையைத் தொட்டது.

''சனியனே, கொஞ்ச நேரம் சும்மா இருக்கியா?'' —உக்ரத்தோடு ஒரு கத்து கத்தினார். அசராமல் பதிலுக்குக் கத்தினாள் அகல்யா!

''மாட்டேன். என்னைக் கொல்லுங்க, என்னைக் கொல்லுங்க... கை கால் விலங்கை அவிழ்த்து விடுங்க...''

—அவள் அலறிக் களைத்த சமயம் வலது புஜத்தில், கலாதரின் இஞ்ஜெக்ஷன் சிரிஞ்ச் மஞ்சள் திரவம் ஒன்றை அவளுக்குள் கரைத்தது.

சில நொடிகளில் அப்படியே விழி செருக அமைதியான வளை வெறிக்கப் பார்த்தார் கலாதர். மூன்று நாட்களுக்கு முன்னால் வாரி விடப்பட்ட தலைமுடி மூக்காலுக்குமேல் கலைந்து முகத்தை மூடிக் கொண்டிருந்தது. அதில் சில கொத்துக்கள் விழி நீரால் நனைந்து சேலை மேலாக்கை ஈரமாக்கியிருந்தது.

அவள் உடலில் குருதியை விடக் கண்ணீர் அதிகம் இருக்குமோ என்று கலாதருக்குத் தோன்றியது. அப்படியே பக்கத்து ஈஸிசேரில் மல்லாந்தார்.

இனி என்ன செய்யலாம்?

''**ஹி**ஸ்டீரியாவான்னு டவுட் இருக்கு மிஸ்டர் கலாதர். நீங்களும் ஒரு டாக்டர்! உங்களால அனலைஸ் பண்ண முடியலையா?''

—அன்று டாக்டர் சரவணன் பதில் கேள்வி கேட்டபோது குனிந்திருந்த தலையை நிமிர்த்தினார் கலாதர். முகத்தில் உப்புத் திரவத்தின் ஓட்டம்! அதைப் பார்த்த சரவணனுக்குப் பனிக்கட்டியைக் கடித்தது போல் ஆயிற்று.

''என்ன மிஸ்டர் கலாதர், ரொம்ப 'டென்ஸ்' ஆயிட்டீங்க... நான் ஏதாவது தப்பா...''

—கண்ணீரைத் துடைத்துக் கொண்டே இடைவெட்டினார் கலாதர்.

''இல்லே டாக்டர். நான் இது ஹிஸ்டீரியாவா இருக்காதுன்னு தான் நெனைக்கிறேன்... ஹிஸ்டீரியா கிரியேட் ஆகறதுக்குண்டான பேக்கிரவுண்ட் ஏதுவுமே அகல்யா விஷயத்துல கிடையாது...

''கல்யாணம் ஆகி அஞ்சு வருஷம் ஆச்சு. ஒரு காய்ச்சல் குளிர்னு கூட அவ படுத்தது கிடையாது. எங்களுக்கு இந்த அஞ்சு வருஷத்துல பிரச்சினைன்னு ஒண்ணு உண்டுன்னா, அது எங்களுக்கு இன்னும் குழந்தை பிறக்கலையேங்கற அந்த ஒரு கவலைதான்!



''அவ ஒரு போஸ்ட் கிராஜுவேட் டாக்டர்! அது மட்டுமல்ல ஒரு சிறந்த கட்டுரையாசிரியை! வாழ்க்கையை ஒரு கோணத்துல அவ விளையாட்டா நினைச்சா! மறு கோணத்துல தவமா நினைச்சா!

''என்ன டார்லிங் இது முரண்பாடுன்னு' கேட்டுருக்கேன். இது முரண்பாடில்லை அத்தான். நமக்குப் பிராப்ளம்ஸ் வரும்போதெல்லாம் வாழ்க்கையை ஒரு விளையாட்டா நெனைச்சா அந்தப் பிரச்னை நம்மளைப் பெரிசாய்ப் பாதிக்காதும்பா. சந்தோஷமா இருக்கும் பொழுது இந்த சந்தோஷத்துக்கும். நம்ம பிறப்புக்கும் காரணம் என்னன்னு நினைக்கும் பொழுது, வாழ்க்கை ஒரு தவம்கிறது புரியும்னுவா!

''ரியலி ஷி சஸ் கிரேட் டாக்டர். அவளுக்கு எப்படி இப்படி ஆச்சன்னு என்னால கற்பனை கூடப் பண்ண முடியலே. ஒருவேளை இதெல்லாம் பில்லி சூனியம்னு சொல்லுவாளே அந்த ரகமா இருக்குமோ?''

அந்தக் கணத்தில் அகல்யாவின் அலறல் அந்த ஆஸ்பத்திரியின் வார்டுகளையே உலுக்கி எடுத்தது.

படுக்கையில் தீயில் விழுந்து விட்டவளைப் போல் புரண்டு நெளிந்தபடி அலறிக்கொண்டிருந்தாள். ஓடிவந்து பிடித்த ஸ்டாஃப் நர்சுகளின் கைகளை எல்லாம் பிறாண்டியதில் வெந்த கோடுகளோடு அவர்கள் பயந்து பின் வாங்கினார்கள்.

பிறகு நான்கு பேர்கள் அவளைச் சேர்ந்து அமுக்கியும் அவள் திமிறிக் கதற, சரவணன் ஒரு மயக்க ஊசியை ஏற்றிய பிறகே அவளின் உடம்பு நிலைப்பட்டது.

''ப்ளீஸ் கம் மிஸ்டர் கலாதர்... கவலைப் படாதீங்க. மனோதத்துவம் இப்ப ரொம்ப டெவலப் ஆகியிருக்கு... கண்டிப்பா இவங்களைக் குணப்படுத்தலாம்.''

கலாதர் விரக்தியுடன் நிதானமாகப் பேசினார்.

''தற்கால விஞ்ஞானத்துக்கும் மருத்துவத்துக்கும் அகல்யா ஒரு சவால் டாக்டர்! இப்ப என்னை ஒரு எம். பி. பி. எஸ்.ன்னு சொல்லிக்கவே எனக்கு வெட்கமாயிருக்கு.

''நான் ஒரு சைக்கியாட்ரிஸ்ட் இல்லேதான். ஆனால் டெல்லி டாக்டர் குப்தாவோட கன்சல்டேஷனோட நான் செய்யாத முயற்சியில்லே.

''டாக்டர் குப்தா சொல்லித்தான், உங்க அட்ரஸ் எனக்குக் கிடைச்சது. சமீபத்துல உங்க கேஸ் ஒண்ணு அவரை ரொம்ப கவர்ந்ததாச் சொன்னரு. நானும் நம்பிக்கையோட வந்திருக்கேன்.''

''அவங்களோட வலி குறைய நீங்க என்ன மருந்து கொடுத்தீங்க...?''

''அடிக்கடி அவ தலை வெடிச்சுடும்போல இருக்குன்னுவா. மண்டையைக் குடையற மாதிரி இருக்கும்பா. உடம்பு மேல புழுக்கள் நெளியற மாதிரி இருக்குன்னு சொல்லித் தரை மண்ணை எடுத்துப் பூசிப்பா... இதனுல அவளை ஒரு முரட்டுக் கம்பளி மேல தான் படுக்க வைச்சேன். தலையை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தேன். நார்மல்! இடையே மூளைக்கு ஓய்வு தேவைன்னு தூக்க மருந்து கொடுத்தேன். கண் கோளாறு ஏதாவது இருக்கான்னு செக் பண்ணினேன்.

''டாக்டர் குப்தா கூட இதையெல்லாம் மீறி ஹிப்னடைஸ்—உள்மனசைப் பரிசோதனை பண்ணிப் பார்த்தார். அவளுக்கே தெரியாமல் எந்தப் பாதிப்பும் சப்கான்ஷியஸ் மைண்ட்ல ரிஜிஸ்டர் ஆகலே! எல்லாமே நார்மல்! அவளுக்குத் தோணக் கூடிய எண்ணங்களை கூட அனுமானித்து, நவீனமுறையில் அதைக் கட்டுப்படுத்திப் பார்த்தாரு டாக்டர் குப்தா.' எல்லாமே தற்காலிக பலனைத் தான் தந்தன.

''விஞ்ஞானத்துக்கு முன்னுல எல்லாமே ஜீரோன்னு நெனைச்சுக்கிட்டிருந்தேன். இப்ப நம்மை மீறிய சக்திகளுக்கு முன்னுல அந்த விஞ்ஞானமே ஜீரோவாயிட்ட விந்தையை என்னுல ஜீரணிக்க முடியலே...

''என்னுடைய நினைப்பை நீங்க பொய்யாக்கினு எனக்கு சந்தோஷம் தான்....''

—சரவணன் ஒரு வகை உறுதியோடு நிமிர்ந்தார். அந்த உறுதியில் மின்னிய தன்னம்பிக்கை அவரது விழிகளில் தெரிந்தது.

வீடே புகுந்த உறவினர்களின் கருத்துக்கள் கலாதரைக் கோயில் கோயிலாக ஏறி இறங்க வைத்தன. ஒருபுறம் டாக்டர் சரவணனின் சர்வமய வித்தைகளும்செத்துக் கொண்டிருந்தன. மறுபுறம் ஆலயங்களின் அருள் கடாட்சங்களும்கூட அதே முடிவைப் பெற அகல்யா ஓட்டி உலர ஆரம்பித்தாள்.

இரண்டு குழிக்குள் அசையும் பஞ்சடைத்த ஊளை விழிகள்.. நாற்றமடிக்கும் வாய், நரம்புத் தளர்வால் நடுங்கும் கைகால்கள், எச்சில் ஒழுகும் வாயிதழ்கள், என்று அகல்யா தேயத் தேயக் கலாதரின் கையிருப்பும், சேமிப்பும் கூட அதே போல் தேய்ந்து தீர்ந்தன.

இடையே அகல்யாவே கூட தற்கொலைக்குப் பல தடவை முயற்சி செய்யப்போய், காப்பாற்றுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. இனி துளி அசைந்தாலும் 'வேண்டாம் இந்தப் பாழும் தேகம்' என்று அவள் உடம்பிலிருந்து உயிரைப் பிரிக்க முற்படலாம் என்பதால் கலாதர் இரும்புச் சங்கிலிகளை நம்பும்படி ஆகிவிட்டது.

அவரும் கூட விடுதலைக்காக பெத்தடின் பக்கம் போனுர். பின்னர் திரும்பவேயில்லை!

''ஐ ஆம் சாரி மிஸ்டர் கலாதர்.... என் முயற்சி ஒரு முடிவுக்கு வந்தாச்சு! இனி எல்லாம் அந்த ஆண்டவன் கையில தான்!!! இந்தியாவுல தர முடிஞ்ச எல்லா மருத்துவ சிகிச்சைகளையும் முயன்று பார்த்தாச்சு. ஷாக் ட்ரீட்மெண்ட்டைத் தவிர.

''ஷாக் ட்ரீட்மெண்டை ஏத்துக்கற உடல் இந்த நிமிடம் உங்க மனைவிக்கு இல்ல.அதனுல ஒரு பலன் ஏற்படும்னு நான் நம்பலே. அதைவிட சிறந்த முறையே தோத்துப் போச்சே!''

'**எ**தற்காக இந்த ஜீவப் போர்? —அகல்யாவை அவள் விருப்பத்திற்கு உட்படுத்தினுல்?' — சனிசேரில் மல்லாந்திருந்த நிலையில் மின்னலாய் மூளையில் ஒரு வெட்டு வெட்டிய கேள்வியின் விஸ்வரூபம் கலாதரை வேகமாக ஒரு முடிவுக்கும் பிடித்துத் தள்ளியது.

'அகல்யா நீ உன் விருப்பப்படி தற்கொலை செய்து கொள்ளம்மா.... செய்து கொள்! நான் உன்னைக் கொல்லத் தயாரில்லே. இந்த மருத்துவன் அந்தப்பாபத்திற்குத் தயாரில்லே.

'வாழ்ந்து என்னத்தை கண்டோம்? போதும் போராட்டம். நானும் உன் வழிக்கு வந்து விடுகிறேன்.'

—வேகமானுர் கலாதர். அகல்யா அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். உறக்கத்துக்குக் காரணமான மருந்தின் வீரியம் ரத்தத்தில் மட்டுப்பட ஆரம்பித்திருந்தது. அதை அசைந்து புரளும் அவளது தேகம் ருசுப்படுத்தியது. கலாதர் காகிதம் ஒன்றை எடுத்துச் சில வரிகளை வேகமாக எழுதினுர். பின் மளமளவென்று அவள் கைகால் விலங்குகளை நீக்கினுர். அவளை ஒரு முறை, மிக ஆழமாகப் பார்த்துப் பெருமூச்செறிந்தார். சட்டென்று திரும்பி மாடிப்படிகளை நோக்கிச் சென்றுர்.

அமைதி மயமான அவரது புத்தக அறை இரீச்சிட்டு இறந்தபடி 'வாங்க சார்!' என்றது.

நூலாம்படை ஒன்றில் தூளி ஆடிக்கொண்டிருந்த சிலந்தி அச்சத்தோடு பார்த்தது. தன்னை எம். பி. பி. எஸ். ஆக்கிய, மற்றும்

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் முதுகலை இரண்டாமாண்டு பயிலும் கை. சாரங்கராகனெனும் மாணவர் ''கல்கி'' இதழில் ஓராண்டு காலமாக (1983) வெளிவந்த சிறுகதைகளைப் பற்றி ஆய்வு செய்கிறுர்.
தகவல்: டாக்டர் எம். ஜே. இரபிசிங்,



தான் படித்த புத்தகங்களை வெறுப்போடு ஒரு பார்வை பார்த்தார் கலாதர். — கைகள் தூக்க மாத்திரைகளைத் தேடி எடுத்துத் தந்தது. மருத்துவ வித்தையோடு விழுங்க ஆரம்பித்தார்!

'ஒன்று....
இரண்டு....
இருபது...
இருபத்திரண்டு....

—தொண்டைப் பாலம் வழியாக நடந்த வெள்ளைப் புள்ளிகளின் அணி வகுப்பு இரைப்பையில் முற்றுப் பெற்றது. கரந்து வழியும் ஹைடிரோ குளோரிக் அமிலம் மாத்திரைகளை வேகமாகக் கரைத்தது. ஊடே புகுந்து பாயும் ரத்தம் அந்தக் கரைசலை உடம்பெங்கும் கலக்க ஓடியது.

'லப்தப், லப்தப்' என்று முப்பத்தி ஆறு வருஷமாய் ஒரு தடவை கூட பிரேக்டவுன் ஆகாமல் இயங்கி வந்த இதயப் பெண்டுலம் முதல் தடவையாக 'ஏதோ கோளாறு போய்' — என்று இரைய ஆரம்பித்தது.

அப்புறம் எல்லாம் முடிந்து விட்டது!

முனகலோடு கண்மலர்த்திய அகல்யாவின் மூளைச் செல்லுகள் 'மயக்கத்தின் பின்னால் மறைந்து கொண்டு என்னை ஏய்க்கவா பார்க்கிறாய்? இதோ வந்து விட்டேன்...' என்று வலியுணர்வை அவள் உடம்பில் பரப்ப ஆரம்பித்தன.

''அத்தான்...'— வலியோடு முனகியவள் கைகள் தன்னிச்சையாக அசைவது கண்டு திகைத்து விலங்குகளைப் பார்த்தாள். விலகி விட்டிருந்தன. வலி உணர்வை மீறிய ஒரு மகிழ்வுணர்வு சில வருடங்களுக்குப் பிறகு ஏற்பட்டது.

''அத்தான் நீங்க எங்க?'' — பேச்சோடு நிமிர்ந்தாள். பலஹீனம் அவளை நிமிர விடாத படி குலைத்தது. விடாது முயன்று நிமிர்ந்து எழுந்தவளின் சிரத்துக்குள், சிவகாசிப் பட்டாசுகள் வெடிப்பது போல் ஒரு பிரமை! முகத்தைச் சுணக்கிக் கொண்டு, ''கடவுளே!'' என்று 'மாய்ந்தவளைப் பக்கத்து மேஜையின் கடிதம் அழைத்தது.

'அன்பு ,அகல்யா....
இனி' நீ சாக நான் தடையில்லை.
உன் விருப்பம் போல் செயல்படு. நானும் கூட தற்கொலைக்குத் துணிந்துவிட்டேன்.
போதும் நமது சித்ரவதை. குட்பை.
—கலாதர்.'

—கடிதத்தைப் படித்தவள் உடம்பு வேகமாகியது.

''அத்தான், அத்தான்...'' — அழைப்பொலியோடு கூடத்துக்கு வந்தாள். ''அவதிப்படற நான் தான் சாகணும். நீங்க எதுக்கு சாகணும்? கூடாது. எங்க இருக்கீங்க.... கடவுளே.''


—நலிந்த உடம்பு பதறப் பதற, வலியால் உணர்வுகள் நெறித்துக் கொல்ல, அத்தனையையும் மீறி ஒருவேகத்தோடு மாடி ஏறிப் புத்தக அறைக்குள் நுழைந்த போது, ஜில்லென்ற கலாதரின் தேகம் துவண்டு விழுந்த தலையோடு அகல்யாவை வரவேற்றது. நெருங்கித் தொட்டவள் விலென்று அலறினாள். விழிகள் சிவக்கச் சட்டென்று நிமிர்ந்து சுற்று முற்றும் பார்த்தாள். சில விநாடிகளை அமைதி தின்றது. நொறுங்கி விட்டிருந்தவள் மெல்லச் சுதாரிப்புக்கு வந்தாள்.

'ஒரு விநாடி கூட இனி உயிர் வாழ முடியாது'— எனும் முடிவின் பின்னணியில் அறையின் மின் விளக்கு சுவிட்சுகள் அவளை ஈர்த்தன.

வெறியோடு மேஜை விளக்கின் ஒயரைப் பிடுங்கி, சுவிட்சைப் போட்டுவிட்டு செம்புக் கம்பிகளை இறுகப் பற்றினள்! கோடிக்கோடி மின்னல்களால் அவள் உடம்பு சூறையாடப் பட்டது போல் ஒரே ஒரு நினைவு மட்டும் மிஞ்சியது. அதன் தொடர்ச்சியில் கருகாமல் அவள் தேகம் தூக்கி வீசப்பட்டது.

அந்தப் பகல் பொழுதின் எதிர்பாராத மின்சார துண்டிப்பு அகல்யாவின் உயிரை வேண்டாம் என மறுத்து விட்டு வெளிச்சங்களை விழுங்கி நின்றது!

விநாடி நிமிடமாகி, நிமிடம் மணிகளாகி அகல்யா கண்மலர்த்திய போது, அதிசயமாய் உடம்பில் எங்கும் வலி இல்லை! தலைப்பாகத்தில் தான் இந்த உலகத்திற்கே தென்றல் உற்பத்தி ஆவது போல் ஒரு குளுமை! உடம்பில் கூட புது உற்சாகம்... வருஷக் கணக்கில் வாட்டிய அந்த வலி, புழுக்கள் நெளியும் அந்த உணர்வு, அத்தனையும் அணு சுத்தமாய் இல்லாத தெளிந்த அந்தப் பழைய நிலை அவளை ஆச்சரியத்தில் புதைத்த போது அதைக் கண்டு பரவசப்பட வழி இல்லாதபடி சவமாகக் கலாதர் சரிந்திருந்தார்.



''எங்கள் பாலிடெக்னிக்கிற்கு எழுத்தாளர் சுஜாதா வந்திருந்தார். கொஞ்சம் கம்ப்யூட்டர் பற்றிப் பேசினார். கொஞ்சம் கேள்விகளுக்குப் பதில் சொன்னார். முடிந்ததும் மாணவிகள் ஆட்டோகிராப் கேட்கக் கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்துக்கொண்டிருந்தார். நான் ''சார்! ஏதாவது எழுதிக் கையெழுத்துப் போடுங்கள்'' என்றேன். உடனே ''ஏதாவது'' என்று எழுதி ஆட்டோகிராப் போட்டார். அடுத்து என் தோழி ''வேறு ஏதாவது எழுதிக் கையெழுத்துப் போடுங்கள்'' என ''வேறு ஏதாவது'' என்று எழுதி அசத்தி விட்டார்.

—எஸ். இந்திரா.

ஆரோக்கியம் அழைக்கிறது

சிறிய உபாதைகள்

ஒவ்வொரு நோய்க்கும் எந்தக்கட்டத்தில் நிபுணரை அணுகவேண்டும் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கவனிக்கவும்.

நோய்கள் இரண்டு வகையில் அடங்கும். ஒன்று மனம் சம்பந்தப்பட்டது. அவசியமில்லாத கோபம் எப்போதும் இருந்தால், கண்டபடி எரிச்சலோ, பொறுமையோ ஏற்பட்டால் அதுவும் நோய்தான்.

உடம்பு சம்பந்தப்பட்டது மற்றொருவகை. சாதாரணமாக இவற்றைப் பின்வரும் நோய்க் குறிகளாகப் பகுத்துப்பார்க்கலாம்.


1. தலைவலி.
2. தலைசுற்றல், மயக்கம், வாந்தி.
3. காய்ச்சல், ஜலதோஷம், இருமல்.
4. பசியின்மை, வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு.
5. தூக்கமின்மை.
6. உடம்பு வலி.

இவற்றைத் தனித்தனியே பார்க்கலாம்.

தலைவலி, தலைக்கனம்

ஒருநாள் மாத்திரை சாப்பிட்டுப் பார்க்கலாம். கைவைத்தியமாக இரண்டு நாட்கள் முயற்சி பண்ணலாம். சாதாரணத் தலைவலி குணமாகி விடும். மருந்து மாத்திரைகளுக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டுப் புது நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனே குடும்ப டாக்டரை அணுக வேண்டும்.





சுலப வைத்தியம்

பச்சைத் தண்ணீரில் குளித்தால் தலைவலி பறந்து விடும். (வழக்கமாக வெந்நீரில் குளிப்பவர்கள் உட்பட)

ஆஸ்பரின், பாரஸிடமால், மாத்திரைகளில் ஏதாவது ஒன்று.

சுக்கு கஷாயம், நெற்றிக்குப் பத்துபோடுவது, யூகலிப்டஸ் மாதிரி தைலங்கள்.

எப்போது நரம்பியல் நிபுணரை (NEURO PHYSICIAN) அணுகவேண்டும்?

கலங்கலான பார்வைக் குழப்பம் ஏற்பட்டுத் தலைவலி வந்தால்,

—தலைக்கனத்துடன், பொருள்கள் இரண்டிரண்டாகத் தெரிந்தால்.

—உடம்பில் ஏதாவது ஒரு பகுதியில் பலம் குறைந்தால், வலிப்பு ஏற்பட்டால். (குறிப்பாக வயதானவர்களுக்கு.)

உடனே குடும்ப வைத்தியரைக் கலந்து, நிபுணரைச் சந்திக்க வேண்டியதுதான்.

தலைசுற்றல், மயக்கம், வாந்தி:

சாதாரணமாக இவை அஜீரணம் தொடர்பாக வரக் கூடியவை. 'லங்கணம் பரம ஔஷதம்' என்பார்கள். குடலுக்கு ஓய்வு தருகிற மாதிரி ஒருவேளை பட்டினி கிடக்கலாம்.

பெண்களுக்கு மாத விலக்கு நேரங்களில் இயல்பாக ஏற்படக் கூடியது. வயதானவர்களுக்கு, கேட்கும் சக்தி குறையும்போது, இவை ஏற்படலாம்.

எப்போது இவை ஆபத்தானவை?

—இடைவிடாமல் தொடர்ந்து வாந்தி ஏற்பட்டுத் தண்ணீர் உடம்பில் குறையுமானல்.

—தலைவலியும் சேர்ந்து, கண்ணுக்குள் மின்னலடிக்கிற மாதிரி வெளிச்சம் பரவினல்..

—மஞ்சள் காமாலை நோயுடன் சேர்ந்து வந்தால்,


உடனடியாக, உங்கள் டாக்டரை அணுக வேண்டியதுதான்.

காய்ச்சல், ஜலதோஷம் இருமல்:

தினமும் குறிப்பிட்ட ஒரே நேரத்தில் முறை வைத்த மாதிரி காய்ச்சல் ஏற்பட்டால், மலேரியாவாகக் கூட இருக்கலாம்.

சாயங்கால நேரத்தில் மட்டும் காய்ச்சல் வந்து, இருமலும், எடைக் குறைவும் இருந்தால் காசநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

ஜுரம் குறையாமலே நீடித்து, ஏழு நாட்கள் இருந்தால், வயிற்றுவலி, மலச்சிக்கல், தலைவலி ஏற்பட்டால் டைபாய்டு நோயாக இருக்கலாம்.





பெண்களுக்குக் காய்ச்சலுடன் அடிக்கடி சிறு நீர் போனல் சிறுநீர்ப் பாதையில் நோய்க் கிருமிகள் உண்டாகியிருக்கலாம். (URINARY TRACT INFECTION).

குழந்தைகளுக்கு அடிக்கடி ஜலதோஷம், பசியின்மை, வளர்ச்சியின்மை இருந்தால், 'பிரைமரி காம்ப்ளக்ஸ்' உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

நிபுணர் எப்போது தேவை?

உடம்பில வீக்கம் ஏற்பட்டுக் காய்ச்சலும் வந்தால்; சில பாகங்களில் வலியே இல்லாமலிருந்தால்.

குறுகிய காலத்தில் சோகை ஏற்பட்டுக் காய்ச்சல் வருமானல்.

வலிப்புடன் காய்ச்சல் இருக்குமானல்...

இப்படியெல்லாம் இல்லாத சாதாரணக் காய்ச்சல், இலேசான இருமல், ஜலதோஷம் இவை எந்தவிதமான ஆண்டிபயாடிக்கும் தேவையில்லாமல் தானே குணமாகிவிடும்.


> **மோர், தயிர், பால் போன்றவற்றைச் சாப்பிட்டால் மார்ச்சளி கட்டும் என்பதும், ஆஸ்த்துமா வரலாம் என்பதும் தவருன கருத்து.**

பசியின்மை, வயிற்று வலி, வயிற்றுப்போக்கு:

அளவுக்கு அதிகமாக, அம்மா, தாத்தா பாட்டி என்று ஆளுக்கு ஆள் உணவு ஊட்டுவதன் மூலம் குழந்தைகளுக்குப் பசியின்மை ஏற்படலாம். ஆபீஸ் போகிற அவசரத்தில் தயாராகிற சுவையற்ற சமையல் குழந்தைகளுக்குப் பிடிக்கா விட்டாலும், சாப்பிடாமல் ஒதுக்கிவிடும். சில வீடுகளில், ''வகை வகையாகச் சமைக்கிறேன், சனியன் தொடவே இல்லை... பக்கத்து வீட்டிலே போய் எதையாவது தின்று விட்டு வருகிறது...'' என்று பெண்கள் அலுத்துக் கொள்வது சுவை சம்பந்தப்பட்டது தான். வயிற்றில் குடல் புழுக்கள் இருந்தாலும் குழந்தைகளுக்கு உணவு செல்லாது.

பெண்களுக்கு, மாதவிலக்குக் காலங்களில் ஏற்படக் கூடிய ஹார்மோன் மாறுதல்களால், உணவு பிடிக்காமலிருப்பது இயல்பு.

நடுத்தர வயதில், குறிப்பாக ஆண்களுக்கு அபரிமிதமான குடிப் பழக்கம், புகைப் பழக்கம் காரணமாகவோ, அல்சர் போன்ற நோய்களாகவோ குடல் கெட்டுப் போய்விடலாம். இதனல் பசியே ஏற்படாது.



வயதான பெரியவர்களுக்குத் தூக்க மின்மை, சோர்வு, கவலைகள் காரணமாக உணவு செல்லாமலிருக்கலாம்.

எப்போது நிபுணரை அணுகுவது:

—பசியின்மையோடு கூடவே எடைக் குறைவு ஏற்பட்டாலும், மஞ்சள் காமாலை நோய் இருந்தாலும்...

—முதுகுப்பக்கம் கடுமையான வலி ஏற்பட்டு, சாதாரண மருந்துகளால் இரண்டு மூன்று வாரங்கள் வரை குணமாகாமல் இருந்தாலும் நிபுணரை உங்கள் குடும்ப டாக்டரின் ஆலோசனையுடன் சந்திக்கவேண்டியது தான்.

தூக்கமின்மை:

குழந்தைகளைப் பகல் வேளைகளில் தூங்கப் பண்ணி விடுவதாலும், பசி, வயிற்றுவலி காரணமாகவும் இரவில் தூக்கம் பாதிக்கப் படலாம்... அளவுக்கு அதிகமான வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிற பெண்களுக்கு உடம்பு வலி காரணமாகத் தூக்கம் வராது. மன உளைச்சல், நெருக்கடி, பரபரப்புக்களாலும், தூக்கம் பறிபோகலாம். மற்ற ஆண்களுக்குக் கவலைகள், எல். எஸ். டி. போன்ற மாத்திரைப் பழக்கங்கள் தூக்கத்தைக் கெடுக்கலாம். வயதானவர்களுக்கு இது சாதாரணம். இவர்கள் நான்கு மணி நேரம் தூங்கினாலே போதுமானது.

எப்போது தூக்க மருந்துகளை நாடலாம்?

பரபரப்பு (STRESS) அதிகமாக இருந்து உடல்வலி ஏற்பட்டால், மனத்தை அமைதிப் படுத்தியாக வேண்டும். அதிகப்பட்சம் ஏழு நாட்கள் வரை தூக்க மருந்துகளைப் பயன் படுத்தலாம். 'அதன் பிறகு தொடர வேண்டாம்.'



தொகுப்பாசிரியர்: டாக்டர் வியாஸ்

கட்டுரைவடிவம்: சுப்ரபாலன்

எப்போது தரக் கூடாது?

சும்மாப் பொழுது போகாமல் ஒரு தூக்க மாத்திரையை விழுங்குகிறவர்கள் உண்டு. உங்கள் சொந்த அனுபவங்களை வைத்து, மற்றவர்களுக்கு இன்ன மருந்தைச் சாப்பிடுங்கள் என்று சொல்லாதீர்கள். டாக்டரின் ஆலோசனை பெறாமல் தூக்கத்திற்கான மருந்தையோ, மாத்திரையையோ பயன் படுத்த வேண்டாம்.

உடம்பு வலி:

தவறான நிலைகளில் (BAD POSTURE) தூங்குவதுதான் சாதாரணமான காரணம். பஸ்ஸில் போகும்போது உட்கார்ந்து கொண்டோ, கம்பியில் சாய்ந்து கொண்டோ, மேஜை மீது சாய்ந்தோ, தூங்க முயல்வது உடம்பு வலியை உண்டாக்கும்.

ஓய்வு எடுத்துக் கொண்டால் இது சரியாகி விடும். அப்படிக் குணமாகாமல், மூட்டுக்களில் பிடிப்பும், வலியும், காய்ச்சலும் ஏற்பட்டால் உங்கள் டாக்டரைப் பார்க்கப் போகவேண்டியது தான்.

வலியில்லாத வீக்கம், எடைக் குறைவு இவற்றுடன் குறிப்பிட்ட ஓர் எலும்புப் பகுதியில், முதுகெலும்புப் பகுதியில், அல்லது கழுத்தில் வலி ஏற்பட்டால் உடனே நிபுணர் ஒருவரைப் பார்க்க வேண்டும்.


தூக்கமும், தூக்க மருந்துகளும்:

தூக்கம் என்பது அவரவருடைய உடம்பின் தேவையைப் பொறுத்தது தான். மனிதன் இவ்வளவு மணி நேரம் தூங்கியாக வேண்டும் என்று அவசியம் ஏதும் இல்லை. கண்களை நன்றாக மூடி அரை மணி நேரம் நிம்மதியாக ரிலாக்ஸ் செய்து கொண்டால் கூடப் போதும்.

சாப்பிட்டவுடன், அரை மணிநேரம் கண்ணயர்வது மிகவும் நல்லது. குறிப்பாக வயதானவர்களுக்கும் இருதய நோயாளிகளுக்கும் இது நிரம்பப் பயன் தரும்.

மதுவுடன் சேர்த்துத் தூக்க மருந்துகளை உட்கொள்ளக்கூடாது. தகுதியான மருத்துவ ஆலோசனை பெறாமல், குறிப்பாகக் குழந்தைகளுக்கு, தூக்க மருந்துகளைத் தருவது ஆபத்தானது.

சரியான அளவில், தேவைக்கேற்பத் தூக்க மருந்துகளை உட்கொண்டால் பழக்கத்துக்கு அடிமையாகி விட மாட்டோம்.



○ கோக சுரேஷ், கோவை 9.

? அடுத்து அரசியலில் நுழைவது ஹேமமாலினியாக இருக்குமா?

! அது, அடுத்து அவர் படங்கள் வெற்றியடைகின்றனவா அல்லது தோல்வியைத் தழுவுகின்றனவா என்பதைப் பொறுத்திருக்கிறது.

○ ஆர். முருகப்பா, கோவை.

? ஆந்திர முதல்வருக்குச் சொத்து அதிகமா? தமிழக முதல்வருக்கு அதிகமா?

! கொடுத்துச் சிவந்த கரங்கள் உடையவர் தமிழக முதல்வர் என்பதை நினைவில் இருத்தினால் விடை கிடைத்துவிடுமே — வெள்ளையைப் பொறுத்தமட்டில்.

○ டி. ஆர். மணி, ஆத்தூர்.

? சென்னி மலை மீது மாட்டு வண்டி ஓட்ட தி. க. வுக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து?...

! ஒருவருக்கு வழங்கப்பட்ட உரிமை இன்னொருவருக்கு மறுக்கப்பட்டது தவறு எனினும் மாடுகள் மீண்டும் ஒரு முறை சித்திரவதை செய்யப்படுவதிலிருந்து மீட்கப்பட்டதில் மகிழ்ச்சி.

○ மது.நடராஜன், கோவை 11

? கட்டுப்பாடற்ற சுதந்திர வர்த்தகம் சரி, ஆனால் வரி, விலை உயர்வு அனைத்தையும் பண்டம் வாங்குபவர் தலைமீதே கட்டிவிடுகிற வர்த்தகர்களை எப்படி ஆதரிக்கிறீர்கள்?



○ தர்மசங்கடம்!

! வரியையும் விலை உயர்வையும் பண்டம்வாங்குவோர் தலை மீது கட்டுபவர் வியாபாரி அல்ல, அரசின் தவறான பொருளாதாரக்கொள்கைகள்.

○ ஆர். அப்துல் சலாம், திருச்சி 20.

? ப்பூ... கடந்த வருடத்தில் ரூபாயின் மதிப்பு வெறும் பன்னிரண்டுபைசாதானாமே?

! ப்பூ... அது போன வருஷத்துக் கதை. இந்த வருஷம் ஒரு ரூபாய் நோட்டு அச்சடிப்பதிலேயே அர்த்தமில்லை என்று அரசு எண்ணும் அளவுக்கு அதன் மதிப்பு தாழ்ந்து விட்டதாகக் காண்கிறோம்.

○ எம். வடிகநாதன், வேதாரண்யம்.

? வருணின் பிறந்தநாளன்று கூட அவனைப் பாட்டியிடம் அனுப்ப மேனகா மறுத்து விட்டாரே?

! அதோடு நின்றிருந்தால் கூடத் தேவலாமே. வருணைக் கடத்திக் கொண்டு போகப் பிரதமர் முயன்றதாகக் குற்றச்சாட்டு வேறே!

சொத்துக்காரர்



○ சமஸ்கிருத சமுத்திரம்

அரசியல் என்பது இந்த அளவுக்கு மனத்தை விகாரப்படுத்தி வருகிறது!

○ பொ. கிருஷ்ணமூர்த்தி, மதுரை.

? அன்று இராஜாஜி மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டதைக் கொல்லைப்புற வழி என்று கிண்டல் செய்த கட்சியின் வழித் தோன்றல் இன்று அதே வழியைப் பின்பற்றுவது பற்றித் தங்கள் அபிப்பிராயம்?

! அன்று தாம் பேசியது தவறு என்று உணர அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம். முன்பு அவர்கள் நடந்து கொண்டதை இன்று கூறிக் குத்திக் காட்டாமல் பெருந்தன்மையுடன் நடக்க நமக்கு ஒரு நல்வாய்ப்பு.

○ கே. டி. சிவராமன், மணமேல்குடி.

? நடிகை ஜெயலலிதா, அரசியல்வாதி ஜெயலலிதா, எழுத்தாளர் ஜெயலலிதா மூவரில் தங்களைக் கவர்ந்தவர் யாரோ?

! அடைமொழி ஏதும் இல்லாத நான்காவது ஜெயலலிதா.

○ எட்வர்ட் ராஜப்பா, அயன்புரம்.

? பத்திரிகையைத் தாக்கி எழுதும் வாசகர்களைப் பகிஷ்கரிக்க பிளாக் லிஸ்ட் ஒவ்வொரு பத்திரிகை அலுவலகத்திலும் உண்டா?

! பிளாக் லிஸ்ட் என்று எழுதி வைப்பதில்லை. ஆசிரியரின் மனத்தளவில் உண்டு. அதற்குக் காரணம் அவர்கள் பத்திரிகையைத் தாக்கி எழுதுவது அல்ல. (மாறுபட்ட கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் பத்திரிகை தான் வளர முடியும்.) சிலர் காப்பி அடிப்பது, ஒரே விஷயத்தைப் பல பத்திரிகைகளுக்கு அனுப்புவது போன்ற தகாத காரியங்களில் ஈடுபடும் போது பிளாக்லிஸ்டில் இடம் பெறுவதில் வியப்பில்லை.

○ எஞ்சல் தேவசகாயம், கோவில்பட்டி.

? நேருஜிக்கு அடுத்த இடத்தில் எங்கள் இதயத்தில் கொலு வீற்றிருக்கும் காமராஜ் வழியில் நடிகர்திலகம் செல்வாரா?

! ஸாரி, சமீபத்திய அவரது 'அரசியல்' மாநாடு அத்தகைய எண்ணத்தைத் தோற்றுவிக்கவில்லை.

என்.டி.ஆரா? | எம்.ஜி.ஆரா?

○ க. தியாகராஜன், நெய்வேலி ★

? ஆளும் கட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறுவதை விடுத்துக் கலைஞரைப் பற்றியே ஜெயலலிதா குறை கூறிப்பேசிக் கொண்டிருப்பது ஏன்?

! அவர் புத்திசாலியானதால்தான். சாராயக் கடைத் திறப்பு, சத்துணவுக்குக் கட்டாய வசூல், நுழைவு வரி வாபஸ், பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் வாபஸ், பெருகி வரும் லஞ்ச ஊழல், கோப்புக்கள் கட்டி வைப்பு, தேகப் பயிற்சிக்குத் தடை என்று எத்தனை எத்தனையோ சாதனைகள் இருக்க.... அவற்றைப் பற்றியெல்லாம் பேசாமல் சதா கலைஞர் மேனியா கொள்கைப் பரப்புச் செயலாளரைப் பிடித்து ஆட்டுவிப்பதில் வியப்பேதுமில்லை.

○ த. சத்தியநாராயணன், அவன்புரம்.

? கர்நாடகத்தில் கலவரம் குறித்து?

! பூமித்தாய்க்கே பொறுக்கவில்லை.

○ இர. சாயிராம், ஜமீன்இளம்பள்ளி.

? பக்தவத்சலம் ஏன் அரசியலில் ஈடுபடவில்லை? ஒதுங்குகிறாரா? ஒதுக்கப்படுகிறாரா?

! அவராவது ஒதுங்குவதாவது. வயது காரணமாக நடமாட்டம் குறைந்து போயிற்றேயொழிய கூர்மதியுடன் யார் வந்து எதைப் பற்றிக் கேட்டாலும், விருப்பு, வெறுப்பின்றிப் பளிச்சென்று அறிவுரை கூறக் கூடிய முதிர்ந்த தலைவர் இன்று அவர் ஒருவர்தான். ஆனால் அந்த அறிவுரை பலருக்குத் தர்ம சங்கடம் அளிக்கும் என்பதாலேயே அவரை நெருங்க மாட்டார்கள்!

○ ஜி. நாகலிங்கம், முத்துப்பேட்டை.

? பத்திரிகை சுதந்திரம் கருதி ஆபாசத்துக்குச் சப்பைக்கட்டு கட்டப் போய் மது, லாட்டரி, போதை மருந்து இவற்றுக்கும் கூடச் சட்டம் வேண்டியதில்லை என்று பொருள்பட எழுதும் நிலைக்கு இறங்கி விட்டீர்களே?

! இத்தகைய ஒரு கருத்தை உங்கள் மனத்தில் என் பதில் ஏற்படுத்தியிருந்தால் அதற்காக வருந்துகிறேன். என் நோக்கம் அதுவல்ல. ஆபாசத்தைக் கட்டுப்படுத்துகிறேன் என்று ஆரம்-

○ அரசியல் பிரவேசம்?



பித்து பத்திரிகைசுதந்திரத்தில் அரசு கைவைக்கத் தொடங்கினால் அது எங்கே போய் நிற்கும் என்று தெரியாது. எனவே அரசுக்குப்புதிய அதிகாரங்களை வழங்கத் தேவையில்லை. ஆபாசத்தைக் கட்டுப்படுத்த ஏற்கெனவே உள்ள சட்டங்களை வன்மையாகப் பிரயோகித்தாலே போதும். செயல்திறனற்ற அரசுதான் அதிக அதிகாரங்கள் கோரும். அதனிடம் அதை வழங்குவதுபோலாபத்து. மதுவிலக்கை ரத்து செய்ததும், அரசே லாட்டரி நடத்துவதும் மிகப் பெரிய மன்னிக்க முடியாத குற்றங்கள். போதை மருந்துகளுக்கு இன்று பல இளைஞர்கள் அடிமைப்பட்டு வருகிறார்கள். அவர்களைக் காப்பாற்ற அரசு செயல்பட வேண்டும்.

○ எஸ். சௌரிராஜன், லெட்சுமாங்குடி.

? நோபல் பரிசு பெரும்பாலும் உரியவருக்குக் கிடைப்பதில்லையே ஏன்?

! நோபல் பரிசு என்ன, கேவலம் ஒரு பத்மஸ்ரீ கூடத் தகுதி உள்ளோருக்குக் கிடைப்ப-



○ ரகசியச் சந்திப்பு

தில்லை... ஒரு உதாரணம்... எண்பதுபிராயம் நிறைவுற்றும் சுறுசுறுப்புடன் இயங்கிச் சென்னையை அடுத்த நசரத் பேட்டை வேத பாட சாலையில் வியாகரண பண்டிதராய் இன்றும் பணியாற்றி வரும் சமஸ்கிருதசமுத்திரம் ஸ்ரீபெரும்புதூர் டி. இராமச்சந்திர சாஸ்திரிகள். ஸ்ரீபெரும்புதூர் சமஸ்கிருதக் கல்லூரியில் 40 ஆண்டுகள் சமஸ்கிருதப் பேராசிரியராய் இருந்து ஓய்வு பெற்றவர்.

○ வி. கோபிநாத், லெட்சுமாங்குடி.

? பெங்களூர் கலவரங்களுக்கு கருணாநிதி கண்டனம் தெரிவிக்காதது ஏன்?

! கண்டனம் தெரிவிக்காவிட்டாலும் பேசாமலாவது இருக்கிறாரே! நமது பிரதமரோ ராஜ்குமாரை ரகசியமாகச் சந்தித்து, 'நீர்தாம் அடுத்தமுதல்வர், எப்படியாவது ஹெக்டேயைப் பதவி இறக்கம் செய்ய வழி காணுங்கள் என்று கூறிக்கொண்டிருப்பதாக நியூஸ் டைம் நாளேடு கூறுகிறது!

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
க. தியாகராஜன்,
எம்.152-2, மந்தாரக்குப்பம் காலனி
நெய்வேலி 607 802.



வங்கத் தோட்டத்தில் தமிழ் தென்றல்

கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெள்ளி விழாவை யொட்டி அங்கே எழுத்தாளர் மாநாடு நடந்தது.

வரவேற்பு:

கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. ப.ந.தியாகராஜன் (அன்பாய் விளிக்கையில் 'பநாதி') தம் சகாக்கள் புடைசூழப் பல கரம் நீட்டி வரவேற்றார். கல்கத்தாவை, அதன் பிரதான வீதிகளை, பிரகாசமில்லாத சந்துகளை, குமுறிச் சீறும் போக்குவரத்தை, சரித்திரமாகிப் போன அழுக்கு மூலைகளை என்று நிதானமாய்ச் சுற்றிக் கொண்டு தங்குமிடம்போய்ச் சேருமுன் நாங்கள் ஏறியிருந்த இரு பஸ்களுக்கும் இருமலும், காய்ச்சலும் வராதது அதிசயம். நன்றாய் தேய்த்துக் குளித்து, சாப்பிட்டுவிட்டு சாயங்காலம் சங்கரா ஹாலில் நெரித்துக் கொண்டு இடம் பிடித்தோம். வரவேற்பு என்றால் அப்படி ஒரு வரவேற்பு. பாரதி தமிழ்ச் சங்கம், தமிழ் மன்றம், கம்பன் கழகம், நகரத்தார் சங்கம் என்று ஆளாளுக்குப் போட்டி போட்டுக் கொண்டு 'வருக வருக' என்றார்கள்.

இரண்டாம் நாள்:

'கல்கத்தா போனா மாமி இலுப்பச்சட்டி வாங்கிண்டு வரச் சொன்னா' —கடைத் தெருவிற்குக் கிளம்பினோம். சில பொருட்களை வாங்கிக் கொண்டு, பல பொருட்களை ஏக்கமாய்ப் பார்த்துக் கொண்டு (எழுத்தாளர்கள் ஏழைகள் ஐயா!) திரும்பி மாலை நிகழ்ச்சிக்கு மேக்கப் போட ஆரம்பித்தோம்.

ஐந்து மணி என்றால் டாணென்று ஐந்துமணிக்கு வங்க அமைச்சர் ஜதின் சக்ரவர்த்தி மைசூர் ஹாலுக்கு வந்து விட்டாராம். நாங்கள் (ஹி...ஹி.. வழக்கம் போலவே தமிழ் நாட்டு நினைப்பில்) கொஞ்சம் லேட். (கடை பரப்பி விருந்த சில தமிழ்ப் புத்தகங்களின் மேல் அட்டையைப் பார்த்து அமைச்சரின் கற்பு அதிர்ச்சியடைந்தது!) பன்னிரண்டு எழுத்தாளர்களுக்கு விருது கொடுத்துக் கௌரவித்தார்கள். (அதில் சரிபாதி நம்ம ஆளுங்களுக்கு!)

அப்புறம் கவியரங்கம். வந்திருந்த ஜனத்தில் பாதி மேடைக்கு ஏறிற்று என்பதோடு நிறுத்திக் கொள்வோம்.

மூன்றாம் நாள்:

காலை ஏழரை மணிக்கே மைசூர் ஹாலிலிருந்து விவேகானந்தா பூங்கா வரை ஊர்வலம். பாரதியாரின் சிலைக்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்த. வழியெங்கும், ஆண்களும், பெண்களுமாய் பாரதியாரின் பாடல்களை ஒலி பரப்பிக் கொண்டு போனது சுகானுபவம். மறுபடியும் மைசூர் ஹாலில் கூடியதும் வரலாற்று நவீனங்கள் பற்றிய கருத்தரங்கம். சிங்கங்கள் சீறின. புலிகள் உறுமின. (ஹரா...வ்!)

அப்புறம் சமூக நாவல்கள் பற்றி பி. வி. ஆர். தொடர்ந்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் 'பாவையர் பங்கு' என்று சொன்னாலும் சொன்னார்கள் மேடையில் கனல் பறந்தது. தொண்டை நரம்பு புடைக்க ராஜம் கிருஷ்ணன் உணர்ச்சி வசப்பட்டு 'பாவையர்' என்ற பாகுபாடு வேண்டாம், நிகரான சிம்மாசனம் கொடுங்கள் என்று நியாயம் கோரினார். அடுத்ததாய் அநுராதா ரமணன் ஒரு மெல்லிய தென்றல் மாதிரி ஆரம்பித்து அழுத்தமாகவே ஆணவ வேர்களை அசைத்து விட்டார். ஒரு வழியாய் மேடையில் தாக அடங்கியதும் மாநாடு சூடுபிடித்து விட்டது என்ற சந்தோ



✖ மாநாட்டில் பி. வி. ஆர்., புஷ்பா தங்கதுரை



✕ கருத்தரங்கம்
அனுராதா ரமணன்

ஷத்தைச் சுற்றியிருந்த முகங்களில் படிக்க முடிந்தது.

மாலையில் நடந்த பட்டிமன்றம் உயிரில்லாத தலைப்பை (நலிவு இலக்கியத்தின் உருவாக்குக்காரணம் படைப்பாளிகளா, பத்திரிகைகளா, வாசகர்களா) வைத்துக்கொண்டு உயிரோட்டமான சர்ச்சைகளைக் கிளப்பி விட்டது. பொங்கும் வியர்வையும், கொப்புளிக்கும் உற்சாகமுமாய் ஒருபுறம் கவிஞர் நா. காமராசன்; சமயோசிதமும், இழையோடும் நகைச்சுவையுமாய் மறுபுறம் அரக மணிமேகலை என்று களை கட்டிய பட்டிமன்றத்திற்குத் தான் வரலாறு காணாத 'ஆடியன்ஸ்' கூட்டம். (ஞாயிற்றுக் கிழமையாய்ப் போனது வேறு விசேஷம்.)

நான்காம் நாள்:

மாலையில் 'சங்கரா ஹாலில் விடைபெறல். நன்றி நவிலல். அழ. வள்ளியப்பா, தேசிய ஒருமைப்பாடு, குழந்தை இலக்கியம் பற்றியும், க. பஞ்சாபகேசன் சிறுகதைகள் பற்றியும், காக மணியன் காளியின் மேல் கவிதையும் என்று மைக் வெகு மும்முரமாயிருந்தது. நன்றி சொல்ல வருகிற போது 'பாரதி'க்குக் குரல் கம்மி, கண்கள் கலங்கி விட்டன.

கல்கத்தா புகழ் 'கரெண்ட் கட்'டில் கூட்டம் முடிந்தது!

விடைபெறல்:

செவ்வாய் 4.30 மணிக்கு வண்டி கிளம்பும் என்றார்கள். ஆந்தைகளின் விடியல் நேரம் — 9.00 மணிக்கு தான் புறப்பட்டது.

ஜிக்கோ ஜிக்கென்று கிளம்பி, ஹௌராவும், அதன் சந்தடி நிறைந்த (பான் பீடா... ஸாப்.... பான் பீடா ஸாப்... அரே உதர் மத்ஜானா...ஆஷோன் ஆஷோன்) ஜனக்கொத்து பிளாட்ஃபாரமும் விலக விலக நாங்கள் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டோம்.

மறுநாள் இரவு இரண்டு மணிக்குச் சென்னையின் வெறிச்சோடிய பிளாட்ஃபாரத்தில் வண்டி நுழைந்த போது '...த்தா சாவுகிராக்கி வண்டிடா இது... எந்த நேரத்துக்கு வருது பாரு...' என்று செப்புப் போர்ட்டர்களின் தருமமிகு தலைநகர் தமிழைக் கேட்டபின்பு தான், என்ன இருந்தாலும் தமிழ் தமிழ் தான் என்று சந்தோஷித்து. அது சரி இந்நேரத்திற்கு வீட்டுக்கு எப்படிப் போவது என்று உடனே அந்த சந்தோஷத்தை விலக்கிச் சிண்டைப்பிய்த்துக் கொண்டோம்.

(ஆட்டோக் காரர்களுக்கு அன்றைய தினப்பலன்: பொன்னும் கொட்டும்.)

கொறிக்கக் கொஞ்சம்:

- விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்கள்: திருமதி லக்ஷ்மி, திருவாளர்கள்: கு. ராஜவேலு, நாரண துரைக்கண்ணன், அழ. வள்ளியப்பா, விக்கிரமன், தொ. மு. சி. ரகுநாதன்.
- மாநாட்டின் சீரான ஏற்பாடுகளில் பெரும் பங்கு வகித்த தமிழர்களில் காக மணியனையும் எழுத்தாளர்களை ஒன்று திரட்டி அழைத்துப் போன பாரதி காவலர் ராமமூர்த்தியையும் குறிப்பிட வேண்டும்.
- புஷ்பா தங்கதுரையும், அனுராதா ரமணனும் தான் அதிகப்படியான வாசகர்களின் சூழ்ச்சிக்கு உள்ளானார்கள்.
- வங்கத் தமிழர்கள் தமிழை நேசிக்கிற அளவிற்கு வங்கத்தையும் நேசிக்கிறார்கள்.

—சுரேஷ், பாலா.

✕ பெண் எழுத்தாளர்களும் கல்கத்தா ரசிகர்களும்





திகில் காட்சிகளின் தயாரிப்பில்

சமீபத்தில் வெளியான ''திருட்டு ராஜாக்கள்'' படத்தில் குண்டு வெடித்துத் தீப்பிடிக்கும் காட்சிகளில் திகில் அதிகமாக உள்ளது.

''இக்காட்சியை எப்படிப் படமாக்கினீர்கள்?''

காமிராமேன் என். கே. விசுவநாதன் சொன்னார்:

''இது ஒரு மேலை நாட்டு உத்தி. பெட்ரோல் பாம்என்பார்கள். பாலிதீன் கவர்களில் மூன்று லிட்டர் பெட்ரோலை வைத்து, அதனடியில் குண்டை வைப்போம். குண்டு வெடித்தவுடன்பாலிதீன் பையிலுள்ள பெட்ரோல் சிதறி உடனே தீப்பிடிக்கும். குதிரை வீரர்கள் செல்லும் காட்சியில் அவர்கள் குண்டிலிருந்து தப்பி ஓடும் காட்சியை இப்புதிய உத்தியை வைத்துப் படமாக்கினோம். இது ஒரு ஆபத்தான முயற்சியே. காரணம்? குண்டு வெடித்ததும் தீ எவ்வளவு தூரம் பரவுகிறது என்று யாருக்குமே தெரியாது.

தயாரிப்பாளர் செல்வம் சமீபத்தில் 'உமர் முத்தா' என்ற ஆங்கிலப் படத்தை வீடியோவில் பார்க்க நேர்ந்தது. இப்படத்தை ஒரு அராபிய கோடீசுவரர் தயாரித்திருந்தார். படத்தின் முடிவில் தொழில் நுணுக்கமான, ஆபத்தான காட்சிகளை எப்படிப் படமாக்கினார்கள் என்பதையும் ஒரு ரீலில் விளக்கியிருந்தார்கள். இது தயாரிப்பாளரைப் பெரிதும் கவர்ந்தது. அதனால் ஆபத்தான, அதேசமயம் அற்புதமான இப்பாணியை நாங்களும் பின்பற்றிப் படமெடுத்தோம்!

பாம்புக்கும், பாம்புக்கும் சண்டை:

சமீபத்தில் ஏ. வி. எம். ஸ்டுடியோவில் ''வேங்கையின் மைந்தன்'' படத்துக்காக இரண்டு நல்ல பாம்புகள் ஆக்ரோஷத்துடன் சண்டையிடும்காட்சியைப் படமாக்கினோம். டைரக்டர் ராமநாராயணன். இந்தக் காட்சியைத் திரையில் பார்க்கும் போது ஆங்கிலப்படத்தின் தரத்தை விடச் சிறப்பாக இருக்கும்.

ஒரு நல்ல பாம்பின்மீது இன்னொரு பாம்பை வீசியெறிந்தோம்.

கோபத்தில் இரண்டு பாம்புகளும் ஆவேசமாகப் போரிட்டதை ஸூம்(ZOOM) வைத்துப் படமாக்கினோம். படமெடுக்கும் போதே பாம்புச் சண்டையைப் பார்த்து எங்களுக்கே நடுக்கமாகத்தான் இருந்தது!

பூந்தமல்லி மாந்தோப்பில்!

அதே படத்துக்குப் பூந்தமல்லியில் ஒரு மாந்தோப்பில் ஒரு கரடிக்கும் சிறுத்





இந்த வாரம் 4

நயமான நாவல்கள் நான்கு



சாருலதா: கி. ராஜேந்திரவின் முதல்தர சமூகநாவல்களில் ஒன்று. காந்திய வாதியான கதாநாயகனுக்கும் வாழ்வில் எப்படியாவது வெற்றியடைந்து விட வேண்டும் என்ற வெறிகொண்ட கதாநாயகிக்கும் இடையே உள்ள போராட்டம் சுவாரஸ்யமானது. பக்கத்துக்குப் பக்கம் கதாசிரியரின் நேர்மையும், கொள்கைப்பற்றும் வெளிப்படுகின்றன. தற்காலத்தில் நிலவுகிற சமூக சூழலில் இந்நாவலின் முக்கியத்துவம் உயர்கிறது.

சைக்கோ ஸாரநாதன்: குளுகுளு கொடைகானலில் மையம் கொண்ட மர்ம நாவலான சைக்கோ ஸாரநாதன் ஒரு குடும்பச் சித்திரமும் கூட. வாழ்வின் பல மட்டங்களிலிருந்தும் கதா பாத்திரங்களைத்தேர்ந்தெடுத்து அவர்கள் ஒரே இடத்தில் கூடி உறவாடுகையில் நேரும் சம்பவங்களையும், உணர்ச்சிப்போராட்டங்களையும் விவரிக்கிறது. பல நிகழ்ச்சிகளைப் பின்னிப் பிணைத்து அழகான பின்னல் கோலாட்டமென உருவாக்கிப் படிப்படியாக அப்பின்னலை அவிழ்ப்பது போல, மெல்ல மெல்ல சிக்கல்களை விடுவித்துச் சுவையான முடிவை அளிக்கிறார் நாவலாசிரியர். கவர்ச்சியான கதையினூடே வெள்ளி இழைகளாக மின்னுகின்றன மர்மமும் திகிலும்.

வண்டார்குழலி: கி.ராஜேந்திரனின் (செம்பியன்) முதல் சரித்திர நாவல் - குறுநாவல். விறுவிறுப்பான கதையோட்டம் இருக்கிறது. சாகசக்காரியான வண்டார்குழலி சோழ நாட்டின் சரித்திரத்தையே மாற்ற முயன்று தோல்வி காண்கிறாள். இக்கதை தோன்றிய கதையை முன்னுரையில் கூறியிருக்கிறார் ராஜேந்திரன். அவரது முதல் சரித்திர நாவலுக்குத் தந்தையார் கல்கி மறைமுகமாக ஆசியும் அங்கீகாரமும் அளித்ததை எண்ணிவியக்கத் தோன்றுகிறது. ம.செ.யின் வண்ண அட்டை வெகு ஜோர்.

ரவிகுலதிலகன்: இந்த நாவலில் கி.ரா.வின் முயற்சி பூரணத்துவம் அடைந்துள்ளதைக் காண்கிறோம். அணிந்துரையில் இலக்கிய உலக ஜாம்பவான் சுந்தா அளித்துள்ள பாராட்டைக் காட்டிலும் இந்தப் புத்தகத்துக்கு வேறு சிறந்த விமர்சனம் இருக்க முடியாது.

''இப்போது மற்றும் ஒரு தாரகை தமிழ் இலக்கிய வானிலே! செம்பியன் என்ற புனை பெயரில் சரித்திர நாவல்களையும் எழுதத் தொடங்கியுள்ள கி.ராஜேந்திரன். விந்தைகள் வியப்புகள், மர்மங்கள், களியாட்டங்கள், வீரதீரச் செயல்கள், தியாகச் சுடர்கள், கண்ணீர்ப் பொழிவுகள், நவ நவச் சுவைகள் பொங்கும் கட்டங்கள்.''

இப்புத்தகங்களை வெளியிட்டோர் சீதாலக்ஷ்மி பதிப்பகம், சென்னை–34, விற்பனை உரிமை: பாரதி பதிப்பகம், சென்னை–17.

-எஸ்ஸார்

மேலட்டை வண்ணப்படம்:
உத்ரா

தைக்கும் நடக்கும் காரசாரமான சண்டைக் காட்சியை லாகவமாகப் படமெடுத்ததும் மறக்க முடியாத அனுபவம்.

முதலில் கரடியையும், சிறுத்தையையும் எதிர் எதிர் கூண்டுகளில் நிறுத்தி வைத்தோம். அறுபதடி சுற்றளவுக்கு மனித நடமாட்டம் எதுவுமில்லாதபடி காவலுக்கு ஏற்பாடு செய்து கொண்டோம்.

கரடியைக் கூண்டிலிருந்து திறந்து விட்டோம். அது தோப்பின் நடுவில் போய் நின்றது. அடுத்து சிறுத்தையைக் கூண்டிலிருந்து விடுதலை செய்தவுடன் அது நேராகக் கரடியிடம் போய்க் கடித்துக் குதறிச் சண்டை போட்டது. கரடியும் சளைக்காமல் பதிலடி கொடுத்தது. கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்கள் ஒரே டென்ஷன் தான். இரண்டு மிருகங்களும் ஒரு வடநாட்டு சர்க்கஸ் கம்பெனிக்குச் சொந்தமானவை.

படப்பிடிப்பு முடிந்ததும் சர்க்கஸ் மாஸ்டருக்கு கர்சீப் மூலம் சிக்னல் கொடுத்தோம். அவர் சிறுத்தையின் கூண்டை இரண்டு தட்டு தட்டினார். அந்த ஒலியைக் கேட்டதும் சிறுத்தை பறந்தோடி வந்து கூண்டுக்குள் தஞ்சம் புகுந்தது. அடுத்து கரடியையும் இதே முறையில் கூண்டிலடைத்தோம்.

பேட்டி:
மன்னை சௌரிராஜன்

படங்கள்:
நேஷனல் செல்லையா




சென்றோம், கேட்டோம், சொல்கிறோம்

பட்டப் பகலில் பலியாகிறார்கள்

''பஸ்ஸை நிறுத்துகிறார்கள். பயணிகளைக் கீழே இறக்கி விடுகிறார்கள். ஹிந்துக்கள் சீக்கியர்கள் என்று இரண்டு பகுதிகளாகப்பிரிக்கிறார்கள். நான்கு ஹிந்துக்களைப் பிடித்துக் கொல்கிறார்கள். கொன்று விட்டு ஓடுவதில்லை. பரபரப்பு மிகுந்த ஜி. டி. சாலையில் வெகு நிதானமாக இரண்டு கிலோ மீட்டர்கள் நடந்து போய் மோட்டார் சைக்கிளில் ஏறிச் செல்கிறார்கள்.

கொலை செய்வதிலும் வெகு நிதானம். இரவு நேரம் அல்ல, பட்டப்பகலில் நடக்கிறது. காவல் நிலையத்துக்கு அருகிலேயே நடக்கிறது. அடித்துப் போட்டு விட்டு, அவனுக்கு நாடி துடிக்கிறதா என்று கவனிக்கிறார்கள். துடித்தால் இன்னும் ஒரு போடு.. சுத்தமாகச் செத்து விட்டான் என்று தெரிந்த பிறகே அந்த இடத்தை விட்டுப் போகிறார்கள். கடந்த இரண்டரை ஆண்டுகளில் பஞ்சாபில் முந்நூறு பேர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தொண்ணூறு சதவீதம் பேர் பட்டப்பகலில் பலியானவர்கள்தான்''

ரத்தத்தை உறையப் பண்ணுகிற மாதிரியான சம்பவங்கள் பஞ்சாப் ஆனாலென்ன, வேறெங்கானால் என்ன...? பாரதத்தின் எந்தப் பகுதியில் நடந்தாலும் இந்தியர்கள் என்கிற உணர்வுள்ள எவருக்கும் அவமானம் தான். இந்த அவலங்களையெல்லாம் மற்ற பகுதியில் வாழ்கின்ற மக்கள் அக்கறையோடு கவனிப்பதில்லை என்கிறதொனியில் சென்னை வந்திருந்த **அருண் ஷோரி** பொதுக்கூட்டத்தில் பேசினார். அளவுக்கு மீறிய வன்முறைகளும் கிளர்ச்சி மனப்பான்மையும், மனித உணர்வுள்ள யாராலும் ரசிக்கப்படுவதில்லை. வேதனைப்படத்தான் செய்கிறோம். வேறு என்ன செய்து விட முடியும்? மைனாரிடி மத 'உரிமை'கள், போன்ற சந்துபொந்துகளை வைத்துக் கொண்டு எவ்வாறு நாம் நியாயம் பெற்று விடப் போகிறோம்?



''குற்றவாளிகள் குருத்வாராவுக்குள் தான் போகிறார்கள். குற்றவாளிகளின் பட்டியலை அரசாங்கமே வெளியிடுகிறது. இருந்தும் அரசாங்கம் குருத்வாரா அதிகாரிகளுக்குத் தபால் தான் போடுகிறது. தங்கக்கோவில் படிக்கட்டில் ஒரு காவல் துறை அதிகாரியே சுடப்பட்டு நான்கு மணி நேரம் உடல் கிடந்தது. அப்போது கூட குருத்வாராவுக்குள் யாரும் போக முடியவில்லை. 'ரிஜிஸ்தர் தபால்' எழுதினார்கள்'' என்கிறார் அருண்ஷோரி.

யாராவது நான் தான் கொலைகாரன் என்று சொன்னால் கூடக் காவல்துறை அவனைக் கைது செய்யாது. சாட்சி சொல்ல யாரும் வர மாட்டார்கள். நீதிபதிகள் கூட இப்படியொரு வழக்கை அனுமதிக்க மாட்டார்கள். நிலவரம் அப்படியிருக்கிறது. நாலு பேர் எட்டுப் பேர் செத்து விழுந்தால் டெல்லியிலிருந்து யாராவது 'சூழ்நிலையை ஆராய' வருகிறார்கள். அப்புறம் நிலைமை கட்டுக்குள் இருக்கிறது என்று அறிக்கை விடுகிறார்கள். கொலைகாரர்கள் மோட்டார் சைக்கிளில்வருகிறார்கள். ஆகவே வித்தியாசம் தெரிவதற்காக போலீஸ் அதிகாரிகளின் மோட்டார் சைக்கிள்களுக்கு மஞ்சள் பெயிண்ட் பூச வேண்டும் என்று முடிவு செய்திருப்பது ஒன்றுதான் சாதனை!

அந்துலே ஊழல் பற்றியும், மற்ற பல பிரச்னைகளைப் பற்றியும் அருண் ஷோரி பேசினாலும், கிட்டத்தட்ட ஒன்றரை மணிநேரப் பேச்சில் பெரும் பகுதி பஞ்சாப் பிரச்சினைகளிலேயே இருந்தது. கோளாறுகளைக் குணப்படுத்த வேண்டியவனே — நோயாளியாகி விட்ட நிலையில் நாமிருக்கிறோம என்று சொன்ன அருண் ஷோரியின் வேண்டுகோள்களில் முக்கியமானது: 'நாட்டிலுள்ள மதவாத அரசியல் இயக்கங்கள் அவ்வளவையும் தடை செய்ய வேண்டும்.'

-நகர்வாலா

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani   Editor: K. Rajendran



ஸுப்பர் ரின்
அதிக வெளுப்பொளி பாய்ச்சுது...

இதற்கு ஈடுநிற்க டிட்டர்ஜெண்ட் வில்லை எதுவுமே இல்லை.

உற்றுப் பாருங்கள்
இப்போது ஸுப்பர்
ரின் வில்லையை—
கண்கவரும் புதிய
மேலுறை, புதுமை
கமழும் நறுமணம்.



இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS RIN 69 2013 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka





தாலாட்டும் பாசமெனத் தவழும் மென்மை:
ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்

குழந்தைப் பராமரிப்புக் கைப் புத்தகம் வேண்டுவோர் எழுதுக,
இதுவே முகவரி: Johnson & Johnson Ltd., (C.I.C-19)
30 Forjett Street, Bombay-400 036.

LINTAS J&J 24 2012 TM